

# தமிழரசு

பிப்ரவரி 1-15, 2000 ரூ. 5




ஒக்கியம் துரைப்பாக்கம் திட்டப்பகுதி
திட்டமதிப்பீடு - ரூ. 60.00 கோடி
பயன்பெறும் குடும்பங்கள் - 6500







# நமது அன்றாட பழக்கவழக்கங்களால், எய்ட்ஸ் வராது.

# அதற்கு நீங்களே ஒரு உதாரணம்.

காலையில் எழுந்தது முதல் ராத்திரி படுக்கப் போகும் வரை நீங்கள் எத்தனையோ பேரைச் சந்திக்கிறீர்கள். ஓட்டலுக்குச் செல்கிறீர்கள், சினிமா பார்க்கிறீர்கள், நெரிசலான பஸ்ஸில் பயணம் செய்கிறீர்கள், பலருடன் கை குலுக்குகிறீர்கள்.

இவர்களில் யாருக்காவது எச்ஐவி/ எய்ட்ஸ் பாதித்து இருக்கலாம்.

**சாதாரண பழக்கவழக்கங்களின் மூலம் எய்ட்ஸ் பரவுவதாக இருந்தால், உங்களையும் எய்ட்ஸ் பாதித்திருக்க வேண்டும்.**

**ஆனால் அப்படி இல்லையே...**

ஏனெனில், கை குலுக்குவதாலோ, உணவைப் பகிர்ந்து கொள்வதாலோ, தொடுவதாலோ, தும்மலினாலோ, கழிப்பிடத்தை அனைவரும் உபயோகிப்பதாலோ, எய்ட்ஸ் பரவுவதில்லை.

எனவே எய்ட்ஸ் பாதித்தவரைக் கண்டு நீங்கள் ஒதுங்க வேண்டியதில்லை. உங்களுக்கு எந்த ஆபத்தும் இல்லை.

அவர்களும் நம்மைப் போன்றவர்கள்தான். அவர்களுக்கு எப்பொழுதும் போல நாம் அன்பும், ஆதரவும் காட்டுவோம்.

**சிறிதளவு ஆதரவு பெருமளவு சுமையைக் குறைக்கும்.**

குழந்தை பிறப்பைத் தடுப்போம்
எய்ட்ஸ் வந்தோரைக் காப்போம்

மேலும் விவரங்களுக்கு அணுக வேண்டிய முகவரி :
**தமிழ்நாடு எய்ட்ஸ் கட்டுப்பாட்டு அமைப்பு**
417, பாந்தியன் ரோடு, சென்னை - 600 008.
தொ.பே.: 8255467, 8255261, 8254917.
24 மணிநேர தொ.பே.: 8256882, 8256864.

Mudra:TNSACS:6259:98

# தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2031, தை – மாசி
பிப்ரவரி 1–15, 2000
மலர் : 31 இதழ் : 15
விலை ரூ.5

## இந்த இதழில்...

- பத்திரப் பதிவகங்களில் கணினி ---------- 2
- நலவாழ்வு நம் கையில் ---------- 4
- 3.000 குடிசைமாற்று வாரிய குடியிருப்புகள் ---------- 9
- தமிழ்க்கல்வி ---------- 14
- எங்கள் ஊர் பிரச்சினை ---------- 16
- திருவள்ளுவர் உணர்த்தும் மொழிசார் சிந்தனைகள் ---------- 17
- புயல் ---------- 21
- சென்னையில் இரு மேம்பாலங்கள் ---------- 33
- இரண்டாம் வெண்மைப்புரட்சி ---------- 38
- கிராமசபை ---------- 41
- தமிழக தேசிய மாணவர் படை சாதனை ---------- 43
- உலகக் கவி ---------- 45
- ஆயிரம் ஆண்டுக்கு முற்பட்ட செக்கு ---------- 46
- வருமுன் காப்போம் திட்டம் : படகில் சென்ற மருத்துவக் குழுவினர் --- 47

*முதல் பக்க அட்டையில்*

குடிசைமாற்று வாரிய குடியிருப்பு திறப்பு விழா

*கடைசிப் பக்க அட்டையில்*

சென்னையில் இரு மேம்பாலங்கள் திறப்பு

**திருக்குறள்**

எண்ணென்ப ஏனை யெழுத்தென்ப இவ்விரண்டுங்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு.

எண்ணும் எழுத்தும் எனப்படும் அறிவுக் கண்களைப் பெற்றவர்களே, உயிர் வாழ்வோர் எனக் கருதப்படுவார்கள்.

*– கலைஞரின் திருக்குறள் உரையிலிருந்து...*

# 2001-க்குள் எல்லா பத்திரபதிவகங்களிலும் கணினி

**– முதலமைச்சர் கலைஞர்**

இன்று பதிவுத் துறையில் ஒரு புதுமை உருவாகிறது என்பதை நாட்டிற்கு அறிவிக்கும் விழாவாக இந்த நல்ல விழா நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. இந்தத் துறை தோன்றி 136 ஆண்டுகளாகின்றன. ஒரு பெரிய வரலாற்றை தன்னகத்தே கொண்ட துறை இது. 1864ஆம் ஆண்டில் தோன்றிய இந்தத் துறைக்கு 136 வயது இப்போது.

## வருவாய் ஈட்டும் பத்திரப் பதிவுத் துறை

தமிழக அரசுக்கு வருவாய் ஈட்டும் துறைகளில் வணிக வரி, ஆயத்தீர்வை ஆகிய இந்த இரண்டு துறைகளுக்கு அடுத்து மூன்றாவது துறையாக இருந்து வருவாயை ஈட்டித் தருகின்ற துறை இந்தப் பதிவுத்துறை ஆகும். சென்ற ஆண்டு இத்துறையின் மூலம் அரசுக்கு கிடைத்த வருவாய் 858 கோடி ரூபாய் ஆகும். இந்த வருவாய் ஈட்டுவதைப் பொறுத்த வரையில் தமிழகம் இந்தியாவில் மராட்டிய மாநிலத்திற்கு அடுத்த நிலையிலே உள்ளது என்பதை நான் தெரிவிக்க விரும்புகிறேன்.



இந்தியாவில் அதிக எண்ணிக்கையில் சார் பதிவகங்களைக் கொண்டுள்ள மாநிலமும் தமிழகமே என்பதையும் குறிப்பிட்டாக வேண்டும். தமிழகத்தில் 600 சார் பதிவகங்கள் செயல்பட்டு வருகின்றன.

இந்தப் பதிவகங்களில் ஆண்டு தோறும் 13 இலட்சம் ஆவணங்கள் பதிவு செய்யப்படுகின்றன. அதன் தொடர்பாக ஏறத்தாழ 65 இலட்சம் பேரும், வில்லங்கச் சான்றுகள் தொடர்பாக ஏறத்தாழ 5 இலட்சம் பேரும், சான்றிட்ட நகல்கள் தொடர்பாக 1 இலட்சம் பேரும், திருமணப் பதிவுகள் தொடர்பாக 15 இலட்சம் பேரும், வழிகாட்டி மதிப்புகள் தொடர்பான தகவல்களைப் பெற ஏறத்தாழ 10 இலட்சம் பேரும், பிறப்பு இறப்புச் சான்றுகள் பெறுவதற்காக ஏறத்தாழ 25 ஆயிரம் பேரும், சீட்டுநிதி அமைப்புகள் தொடர்பாக ஏறத்தாழ 20 ஆயிரம் பேரும், சங்கப் பதிவுகள் தொடர்பாக 5 ஆயிரம் பேரும், கூட்டாண்மை நிறுவனப் பதிவுகள் (Partnership) தொடர்பாக 4 ஆயிரம் பேரும் என்று இப்படி மொத்தம் ஏறத்தாழ ஒரு கோடிக்கு மேலான

மக்கள், இந்தச் சார்பதிவகங்களுக்கு நேரடியாக வருகைபுரிந்து – தங்களுக்குத் தேவையான அனைத்து வகைப் பதிவுகளையும் செய்துகொண்டு தங்களுடைய உரிமைகளைப் பாதுகாத்து வருகின்றனர்.


இந்த ஸ்டார் திட்டத்திற்கு என்ன விளக்கம் என்பதை நம்முடைய தம்பி முரசொலி மாறன் அவர்கள் இங்கே எடுத்துக் கூறியிருக்கிறார். இந்தத் திட்டம் மாநகராட்சிப் பகுதிகளிலே அமைந்துள்ள 16 சார்பதிவகங்களிலும், 9 மாவட்டப் பதிவாளர் அலுவலகங்களிலும் 7-2-2000 முதல் செயல்படத் தொடங்குகிறது. இது முதற்கட்டம். இரண்டாவது கட்டமாக, 284 சார்பதிவகங்களிலும் 41 மாவட்டப் பதிவாளர் அலுவலகங்களிலும் தமிழ்நாடு மின்னணுவியல் (ELCOT) நிறுவனம் மூலமாக 2001ஆம் ஆண்டில் இத்திட்டம் விரிவுபடுத்தப்பட உள்ளது என்பதையும் நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

இந்தத் திட்டங்களின் பயன்கள் என்ன என்பதை நாள் கணக்கில் காத்திருந்து பெறவேண்டிய விவரங்களை, உரிமங்களை நிமிடக் கணக்கில் பெறலாம். வாரக் கணக்கில் காத்திருந்து பெற வேண்டியவைகளை மணிக்கணக்கிலே பெறலாம். இப்படி விரைவுபடுத்தி பெற்றுத் தருகின்ற ஒரு சாதனமாக இந்தக் கணினி சாதனம் இன்றைக்கு புகுத்தப்பட்டிருக்கின்றது. இதையெல்லாம் எதிர்பார்த்துத்தான் கடந்த இரண்டாண்டுகளுக்கு முன்பே இங்கே மத்திய அமைச்சர் முரசொலி மாறன் எடுத்துக்காட்டியதைப் போல நாம் கணினியிலே தமிழைப் புகுத்த வேண்டும். அப்படி புகுத்தப்படுகிற நேரத்திலே உலகமெங்குமுள்ள எல்லா கணினிகளிலும் இந்த பேதா பேதம் வராமலிருக்க ஒரு முயற்சி மேற்கொள்ள வேண்டுமென்று ஒட்டுமொத்த, ஒருமித்த கருத்தை உருவாக்க தமிழ் இணைய மாநாடு சென்னையிலே நாம் கூட்டியது உங்களுக்கு நினைவிருக்கும்.

அந்த மாநாட்டிலே எடுத்த முடிவுப்படி அனைவரும் ஏற்றுக்கொண்டு ஒருமித்த கருத்து உருவாகி அப்படி உருவான காரணத்தினாலேதான் நாம் மிக எளிதாக இன்றைக்கு தமிழ்மொழியிலே இந்தக் கணினியை பதிவகங்களிலே ஏற்படுத்தக்கூடிய ஒரு வாய்ப்பை இன்றைக்கு நாம் பெற்றிருக்கிறோம்.


அதற்கு மேலும் ஊக்கமளிக்கும் வகையிலே எதிர்காலத்திலே இதிலே பயிற்சி பெறுபவர்களுக்கு இன்றும் சுலபமாக இருக்கின்ற வகையிலேதான் தமிழ்நாட்டிலுள்ள 1,200 மேல்நிலைப் பள்ளிகளில் கணினிப் பயிற்சி மாணவர்களுக்கு அளிப்பது என்கின்ற முயற்சி மேற்கொள்ளப்பட்டு, முதற்கட்டமாக 666 பள்ளிகளிலே இந்தக் கணினிப் பயிற்சி இந்த ஆண்டு தொடங்கப்பட்டு நடைபெற்று வருகின்றது.

நான் பல இடங்களுக்கு சுற்றுப் பயணம் செய்கின்ற நேரத்தில் திடீரென்று அந்த மேல்நிலைப் பள்ளிகளிலே நுழைந்து இந்தப் பயிற்சி செம்மையாக நடைபெறுகிறதா என்று பார்வையிட்டபோது நானே வியப்படைகின்ற அளவிற்கு நல்ல முறையில் அந்தப் பயிற்சி நடைபெறுவதையும் குறிப்பாக, கிராமப்புறத்து மாணவர்கள் பக்கத்திலே நகர்ப்புறப் பள்ளிகளிலே படிப்பவர்கள் தாங்கள் இதனால் பெறுகின்ற பெரும் பயனை மகிழ்ச்சியோடு தெரிவிக் கிறார்கள்.



இந்த அளவில் தமிழ்நாடு அரசு இந்தியாவில் எல்லா மாநிலங்களையும் காட்டிலும் மிகச் சிறப்பாக இந்தக் கணினிப் பயிற்சியிலும் சரி, கணினியைச் செயல்படுத்துவதிலும் சரி, முதல் நிலையிலே இருக்கின்றது என்பதை நான் தெரிவித்து, அதற்கு மற்றொரு எடுத்துக் காட்டுத்தான் இந்தத் தொடக்க விழா. இந்தத் தொடக்க விழாவினைத் தொடர்ந்து 2001-க்குள்ளாக எல்லா பதிவகங்களும் கணினி மயமாக ஆக்கப்படும் என்ற உறுதியையும் தெரிவித்து விடைபெறுகிறேன்.

*– பத்திரப் பதிவுத்துறையில் கணினி மயத்தை தொடங்கி வைத்து முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 6-2-2000 அன்று ஆற்றிய உரை.*




# நலவாழ்வு நம் கையில்

டாக்டர்
இரா. கலைக்கோவன்

மருத்துவத் துறையில் தற்போது அழுத்தம் தந்து அறிவுறுத்தப்படுவது காப்பு மருத்துவம்தான். உலகளாவிய நிலையில் 'வருமுன் காப்பு' வலியுறுத்தப்பட்டு நெடுங்காலமாகியும், நம்நாட்டில் அதற்கான கண்திறப்பு காலந்தாழ்ந்தே ஏற்பட்டது. பன்முனைப்பட்ட காப்புணர்வு எந்தத் தளத்திலும் எடுத்துரைக்கப்படாததால், எடுக்கப்பட்ட முயற்சிகள் பெருமளவு வீணாயின என்றே சொல்லவேண்டும். முற்றிலும் அகற்றிவிட்டதாக நாம் பெருமைகொண்ட மலேரியா, எலும்புருக்கி போன்ற நோய்கள் இப்போதும் உயிர்க்கொல்லிகளாக உலா வந்து கொண்டுதான் இருக்கின்றன. கொசுக்கள் ஒழியும்வரை மலேரியாவையோ, யானைக்கால் நோயையோ தவிர்க்க முடியாது. கண்ட இடத்தில் கூசாமல் துப்பும் பழக்கம் நம்மிடம் இருந்து அகலும்வரை எலும்புருக்கியைக் கட்டுப்படுத்துவது இயலாது. கொசுக்களை அழிக்கக் கொசுவர்த்திகளோ, வேதிப்புகையோ, மற்ற மருந்தினங்களோ ஒருநாளும் பயன்படா. வீட்டையும் சுற்றுப்புறத்தையும் தூய்மையாக வைத்துக்கொள்ள மனிதன் கற்கும்வரை கொசுக்களால் பரவும் நோய்களிலிருந்து விடுதலையில்லை. சுற்றுப்புறத்தூய்மை ஊராட்சி, நகராட்சி, அரசு ஆகியவற்றின் கடமையென்று கருதும் மனநிலையிலிருந்து மக்கள் மாறவேண்டும். நம் சுற்றுப்புறத்தை நாம்தானே தூய்மையாக வைத்துக்கொள்ள வேண்டும் என்ற சிந்தனை நமக்குள் வரவேண்டும். நலநோக்கு, நலக்காப்பு எனும் இவையிரண்டும் எதிர்வரும் நூற்றாண்டிலேனும் மக்களுக்கு வயப்படவேண்டும் என்ற எதிர்பார்ப்பில்தான் தமிழ்நாடு அரசு இப்போது வீடுகளை நோக்கிய நலப்பயணத்தைத் தொடங்கியிருக்கிறது.

மாண்புமிகு முதலமைச்சரின் சிந்தனையாற்றலில் விளைந்த எண்ணற்ற நலநோக்குத் திட்டங்களுள் ஒன்றே தற்போது தமிழ்நாட்டை வலம்வரத் தொடங்கியிருக்கும். 'வருமுன் காப்போம்' திட்டம். இந்தத் திட்டத்தின் அடிப்படை

எதிர்பார்ப்பு, தமிழ்நாட்டின் எந்தச் சிற்றூரில் வாழும் மனிதனுக்கும் அவன் வீட்டு வாயிலருகே அல்லது அவன் ஊருக்கருகே மருத்துவ வசதியைத் தருவதுதான் என்றாலும், இதன் உடன் விளைவாகத் தமிழ்நாட்டு மக்களின் நல, நோய்ப் புள்ளி விவரமும் கணக்கிடப்படுவது குறிப்பிடத்தக்கது. காப்பு மருத்துவத்தை முறையாக நிலைப்படுத்த இந்தப் புள்ளி விவரம் இன்றியமையாததாகும். இதற்கு முன் சேகரிக்கப்பட்ட புள்ளி விவரங்கள் அனைத்துமே மருத்துவமனைகளில் பெறப்பட்டவை. நோய் இருப்பது தெரிந்து, நோயால் மிகத் துன்பமுற்ற நிலையில் மட்டுமே மனிதர்கள் மருத்துவமனைகளை நாடுகிறார்கள். வலி இல்லாத வீக்கங்கள், வளரிகள், கட்டிகள் ஆகியவற்றைச் சுமந்துகொண்டு அவற்றைப் பற்றி எந்தக் கவலையும் இல்லாமல் வாழ்பவர்கள் ஆயிரக் கணக் கானோர். இவை இயல்புக்கு மாறானவை, இவற்றை மருத்துவரிடம் காட்டிக் கொள்ள வேண்டும் என்றெல்லாம் அவர்கள் நினைப்பதேயில்லை. இந்த அலட்சிய மனநிலைக்குப் பல காரணங்கள் உண்டு. அறியாமை முழுமுதற் காரணம். மருத்துவமனை நோக்கிய பயணம், அதற்கான செலவுகள் என ஏற்படும் தயக்கங்கள் அடுத்த நிலை.



இரத்த அழுத்தம், நீரிழிவு போன்ற நோய்கள் எந்த வெளிப்பாடும் காட்டாமல் நெடுங்காலம் இருப்பதுண்டு. வெள்ளெழுத்திற்குக் கண்ணாடி போட வருபவர்க்குச் செய்யப்படும் வழக்கமான அக நோக்கிச் சோதனை பலமுறை இந்நோய்களைக் காட்டிக் கொடுத்துள்ளது. விழித்திரையில் ஏற்படும் இரத்தக்கசிவு, புது இரத்தக் குழாய்களின் தோற்றம், இரத்தக் குழாய் வீக்கம் போன்றவற்றின் மூலமே முதன்முறையாகக் கண்டறியப்படும் இந்நோய்கள், உடன் சிறந்த மருத்துவத்திற்கு ஆட்படுத்தப்பட்டும், காலங்கடந்த நிலையில் கண்டறியப் படுவதால் விளைவுகளை உண்டாக் காமல் கட்டுப்படுவதில்லை.

நோய் வெளிப்பாடுகள் இருந்தும் பல்வேறு காரணங்களுக்காக மருத்தவம் மேற்கொள்ளாமல் இருப்பவர்களும், வெளிப்பாடுகள் இல்லாமையால் நோய் இருந்தும் அதை அறியாதவர்களாய் இருப்பவர்களும் தமிழ்நாட்டில் எண்ணிக்கையில் மிக அதிகம். இவர்களை மருத்துவக் கண்காணிப்பின் கீழ்க் கொணர்வது இன்றியமையாதது. நடைமுறையிலிருந்தும் நல வாழ்வுத் திட்டங்கள் சில தேர்ந்தெடுத்த நோய்களைப் பற்றி ஊரக மக்களுக்கு அறிவூட்டல், தடுப்பூசிகள் தருதல், குறைந்தபட்ச மருத்துவ உதவி எனும் அளவிலேயே அமைந்துள்ளன. தமிழக முதல்வர் இப்போது அறிமுகப் படுத்தியுள்ள **வருமுன் காப்போம் திட்டம்**, இவற்றிலிருந்து முற்றிலும் மாறுபட்டது. ஊரகப் பகுதிகளில் வாழும் ஒவ்வொருவரையும் முழுமையான அளவிலான மருத்துவ சோதனைக்



குட்படுத்துவதே இத்திட்டத்தின் நோக்கம். முன்புள்ள திட்டங்களில், நோய் அறியப்பட்ட நிலையிலும், அந்நோயை உறுதிப்படுத்திக் கொள்ளவோ, அதற்குரிய மருத்துவம் எங்கு மேற்கொள்வது என்பதற்கான தெளிவுபெறவோ வாய்ப்புக்களில்லை. வருமுன் காப்போம் திட்டம் இக்குறை களையெல்லாம் நீக்குவதற்காகவும், மருத்துவமனைக்கு வருவோர்க்கு மட்டுமே சோதனை என்றிருந்த நிலைமாற்றி, உலகளாவிய நிலையில் இன்று மேற்கொள்ளப்படும் புதிய நலக் கோட்பாடான 'இருப்பார்க்கெல்லாம் சோதனை– இருப்பதை யெல்லாம் அறிய' என்பதை நடைமுறைப் படுத்துவதற்காகவும் உருவாக்கப்பட்டுள்ளது.

இத்திட்டம், தமிழ்நாடு தழுவிய அளவில் ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட ஆட்சித்தலைவர், இணை இயக்குநர்–நலப் பணிகள் ஆகிய இருவரின் மேற்பார்வையில் சீரிய முறையில் திட்டமிடப்பட்டு, மாவட்டத்தின் அனைத்துப் பகுதிகளிலும் மிகப் பரவலாக நடைமுறைப் படுத்தப்படுகிறது. மாவட்டத்தின் அனைத்து ஊராட்சி ஒன்றியங்களிலுமுள்ள துணை சுகாதார நிலையங்களும், ஆரம்ப சுகாதார நிலையங்களும் இத்திட்டத்தின்கீழ் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன. ஒவ்வோர் ஊராட்சி ஒன்றியத்திலும் ஒரு மாதத்திற்கு ஒன்றல்லது இரண்டு முகாம்கள் இத்திட்டத்தின்கீழ் நடைபெறுமாறு திட்டமிடப் பட்டுள்ளது. ஊராட்சி ஒன்றியத்தின்கீழ் வரும் அனைத்துத் துணை சுகாதார நிலையங்களும் குறைந்தபட்சம் மாதத்திற்கு ஒரு முகாம் மேற்கொள்வதால், மாவட்டம் முழுவதுமுள்ள அனைத்து ஊர்களும் இத்திட்டத்தின் பயனைப் பெறுவது சாத்தியமாகிறது.

வருமுன் காப்போம் திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்படும் முகாம்களுக்கென பல மருத்துவக் குழுக்கள் உருவாக்கப் பட்டுள்ளன. ஒவ்வொரு குழுவிலும் நான்கு பொது மருத்துவர்கள் (MBBS), ஒரு மருந்தியல் மருத்துவர் (MD), ஓர் அறுவை மருத்துவர் (MS) ஆகியோருடன் குழந்தை நலம், மகளிர் நலம், எலும்பு நோய்கள், பல், கண், தோல், காது மூக்கு தொண்டை எனப் பல்வேறு சிறப்புத் துறைகள் சார்ந்த மருத்துவ வல்லுநர்களும் இடம் பெற்றுள்ளனர். சித்தம், யுனானி, ஓமியோபதி சார்ந்த மருத்துவர்களும் இம்முகாம்களில் பங்கேற்கின்றனர். முகாம்கள் எந்தெந்த ஊர்களில், எந்தெந்த நாட்களில் நடத்தப்படுகின்றன என்பது முன்கூட்டியே மாதக் கணக்கிற்குத் திட்டமிடப்பட்டு

விடுவதாலும், இப்பணியை அந்தந்த ஊராட்சி யமைப்புகளும், தன்னார்வ நிறுவனங்களும், துணை சுகாதார நிலைய அலுவலர்களும் ஒருங்கிணைந்து மேற்கொள்வதாலும், ஊரக மக்களுக்கு இம்முகாம்கள் பற்றிய அறிவிப்பு தருவது எளிதாகிறது.

இம்முகாம்களுக்கு வரும் அனைவரையும் பொதுநல மருத்துவர்கள் சோதிக்கின்றனர். நோய் வெளிப்பாடுகளோ, அறிகுறிகளோ இருப்பவர்கள் அவ்வத்துறை சார்ந்த வல்லுநர்களிடம் அனுப்பப் படுகின்றனர். அனைவருக்கும் இரத்த அழுத்தம் பார்க்கப்படுகிறது. முகாம்களிலிருக்கும் ஆய்வகத்தில், பயிற்சி பெற்ற ஆய்வர்கள் அனைவர்க்கும் இரத்தம், நீர், சளி பரிசோதனைகளை மேற்கொள்கின்றனர். மிக இன்றியமையாத ஹீமோகுளோபின் அளவு, சர்க்கரை அளவு ஆகியவை சோதிக்கப்படுகின்றன. சிறுநீரில் சர்க்கரை இருந்தால் இரத்தத்திலும் அதன் அளவு பார்க்கப்படுகிறது. இச்சோதனைகளால் உயர் இரத்த அழுத்தம், சர்க்கரை நோய், இரத்த சோகை நோய், எலும்புருக்கி நோய் ஆகியன உடன் கண்டறியப்படுகின்றன. அதற்கான மருந்துகள் நோயுள்ளோர்க்கு உடன் தரப்படுவதுடன் நலக்காப்பு அறிவுரைகளும் வழங்கப்படுகின்றன.

புற்று நோயைக் கண்டறிவதற்கான பேப் ஸ்மியர் சோதனை, தொழுநோய் அறியும் சோதனை ஆகியனவும் பயிற்சி பெற்றவர்களைக் கொண்டு இங்கு நிகழ்த்தப்படுவது குறிப்பிடத்தக்கது. 'அழகுத் தேமல்' என்று கருதித் தொழுநோய்த் தேமல்களைக் கண்டு கொள்ளாது இருப்பாரும், புற்று உள்ளே வளர்வதறியாது அதைச் சுமந்து கொண்டிருப்பாரும் தொடக்க நிலையிலோ அல்லது சற்று நாட்பட்ட நிலையிலோ இம்முகாம்களில் அடையாளப் படுத்தப்பட்டு முனைப்பான மருத்துவத்திற்கு ஆட்படுத்தப் படுவதால் பெருந்துன்பங்களிலிருந்து மீட்கப்படுகின்றனர்.

முகாம்களில் கண்டறியப்படும் நோயாளிகளில் தொடர் மருத்துவம் தேவைப்படுவோரும், அறுவை மருத்துவம் தேவைப்படுவோரும் முகாம் நடக்கும் இடத்திற்கு அருகிலுள்ள வட்ட மருத்துவமனைக்குப் பரிந்துரைக்கப் படுகின்றனர். வாரத்தில் ஒரு குறிப்பிட்ட நாளில் (இக்குறிப்பிட்ட நாள் பெரும்பாலும் முகாம் நடக்கும் நாளிற்கு அடுத்த நாளாகவே பல மாவட்டங்களில் அமைந்துள்ளது) இந்நோயாளிகள் அங்குச் செல்லலாம். இவர்களை வரவேற்று வழிகாட்டுவதற்காக வட்ட மருத்துவமனைகளில் தனி வரவேற்பு மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இங்குள்ளோர் நோயாளிகளை உரிய மருத்துவப் பகுதிகளுக்கு அழைத்துச் செல்வதுடன் அவர்களுக்கு உள்ளிருப்போ, அறுவையோ தேவைப்படின்



முன்னுரிமை தந்து கவனிக்கின்றனர். எந்தத் தடங்கலும், இடையூறும் இல்லாது, பரிந்துரைக்கப்பட்ட முகாம் நோயாளிகள் வட்ட மருத்துவமனைகளில் உரிய மருத்துவம் பெறுவது மிகவும் எளிதாக்கப்பட்டுள்ளது.

சோதனைகளுக்குப்பின் நோயற்றவர்கள் என்று தீர்மானிக்கப்பட்டவர்களுக்கு நலச்சான்றிதழ் தரப்படுவதுடன், நலக்காப்புப் பற்றிய அறிவுரைகளும் வழங்கப்படுகின்றன. இதற்காக நலப்பணியாளர்கள் பெருமளவில் பயன்படுத்தப்படுகின்றனர். தடுப்பூசிகள் பற்றிய தெளிவான வழிகாட்டல்கள் அனைத்துப் பெற்றோர்களுக்கும் சுவரொட்டிகள், அறிக்கைகள், அறிவுரைகள் வழி காட்டப்படுகின்றன. இந்த முகாமில் இல்லாதிருப்பது ஒன்றுதான் – மனநல மருத்துவம். இன்றைக்கு மக்களுக்குப் பெரிதும் தேவைப்படும் மனநல வழிகாட்டல்களும் இம்முகாம்களில் கிடைக்குமாயின், மாண்புமிகு முதல்வரின் நலநோக்கம் முழுமை யடைவதுடன், பெரும்பாலான சமுதாயச் சிக்கல்களும், உணர்ச்சிபூர்வமான பிரச்சினைகளும் முடிவுக்கு வரும்.

இந்த முகாம்களைச் சரியான முறையில் பயன்படுத்திக் கொள்வது மக்களுடைய தலையாய கடமை. வீட்டை நோக்கி மருத்துவமனை வந்திருக்கும் இந்த வாய்ப்பை வயது, பால் வேறுபாடின்றி தமிழ்நாட்டு மக்கள் அனைவரும் முழுமையான அளவில் பயன்படுத்திக் கொண்டால் நலவாழ்வு நம் கையில். 'நாம் நலமாகத்தானே இருக்கிறோம், நமக்குத்தான் எந்த நோய் வெளிப்பாடும் இல்லையே, நாம் ஏன் இந்த முகாமிற்குச் செல்ல வேண்டும்' என்று கருதாது, அனைவரும் இந்த வருமுன் காப்போம் திட்டத்தைத் தவறாது பயன்படுத்த வேண்டும். இதற்கு நலப்பணியாளர்களும், ஊராட்சி உறுப்பினர்களும் முழுப்பொறுப்பேற்று தத்தம் ஊர்மக்களை ஒருவர் விடாது முகாம் வருமாறு அறிவுறுத்த வேண்டும். பயன் களை விவரித்தால்தான் பாதங்கள் நகரும். தமிழ்நாட்டு மக்களின் ஒட்டுமொத்த நலம் நோக்கி முதல்வரால் அறிமுகப்படுத்தியுள்ள இத்திட்டம் அதன் நோக்கத்தை எய்த, இதில் ஈடுபட்டுள்ள ஒவ்வொருவரும் கருத்தோடு உழைக்க வேண்டும். கவனிப்பு நன்றாக இருக்கிறது என்றால்தான் வருபவர்கள் எண்ணிக்கை கூடும். இந்திய மருத்துவ மன்றத்தின் தமிழ்நாடு கிளைத் தலைவர் மருத்துவர் மீ.சா. அஷ்ரப் தம்முடைய உரையொன்றில் குறிப்பிடுவதுபோல், மக்கள் நலப்பணிகளில் மருத்துவச் சமுதாயம் தனக்குள்ள ஆர்வத்தையும் ஈடுபாட்டையும் முழுமையான அளவில் வெளிப்படுத்திட இது ஓர் அரிய வாய்ப்பு. வீட்டுக் கதவைத் தட்டி நலம் விசாரிக்கும் இந்த அரிய திட்டம் முதல்வர் தமிழ்நாட்டிற்களித்த இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற கொடை. இதை முற்றிலுமாய்ப் பயன்படுத்திக் கொண்டு மக்களும் மருத்துவர்களும் தங்கள் சமுதாயக் கடமையை நிறைவேற்று வார்களானால் தமிழ்நாடு நலநாடாய் மலரும் நாள் வெகு தொலைவில் இல்லை.



*நன்றி : 'தினமணி' 11-2-2000*

# தமிழ்நாடு அரசு :

# மக்களுடைய தேவைகளை நிறைவேற்றும் - வசதி வாய்ப்புகளை கவனிக்கும் அரசு

## – முதலமைச்சர் கலைஞர்

குடிசை மாற்று வாரியத்துறை அமைச்சர் திரு.க.சுந்தரம் தலைமையில் 3-2-2000 அன்று, தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தின் சார்பில் சென்னையை அடுத்த ஒக்கியம் - துரைப்பாக்கம் பகுதியில் கட்டப்பட்டுள்ள 3,000 புதிய குடியிருப்புகளின் திறப்பு விழா - குடியிருப்பு ஒதுக்கீடுதாரர்களுக்கு - ஒதுக்கீடு ஆணைகளை வழங்கி முதல்வர் கலைஞர் அவர்கள் விழாப் பேருரையாற்றினார்.

விழாவில் முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரையிலிருந்து...

இன்று சென்னையிலிருந்து ஒரு புதிய நகருக்கு நான் வந்திருக்கின்ற உணர்வோடு உங்கள் முன்னால் நின்று கொண்டிருக்கின்றேன். இந்த நிகழ்ச்சியிலே கலந்து கொண்டிருக்க வேண்டிய மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அருமை நண்பர் ஆர்க்காடு வீராசாமி அவர்களும் சென்னை மேயர் தம்பி மு.க.ஸ்டாலின் அவர்களும் வர இயலவில்லை.

அதற்குக் காரணம், நேற்றைய தினம் தருமபுரியிலே உயிரோடு கொளுத்தப்பட்ட மூன்று மாணவிகளில் – ஒரு மாணவி தாம்பரத்திலே பிறந்து வளர்ந்தவர். அவருடைய உடல் இன்று மாலையில் தாம்பரம் வருவதாகச் செய்தி. அந்த உடலை ஏற்று இறுதி நிகழ்ச்சியிலே கலந்து கொள்வதற்காகப் பேராசிரியர் அவர்களும், ஆர்க்காடு வீராசாமி அவர்களும், மேயர் ஸ்டாலின் அவர்களும் சென்றிருக்கிறார்கள். இந்த நிகழ்ச்சி இருக்கின்ற காரணத்தால் நான் செல்ல இயலாத சூழ்நிலையில் என் சார்பாக அவர்கள் நேற்றைய தினம் மறைந்த அல்லது மறைக்கப்பட்ட – நேற்றைய தினம் வீழ்ந்த அல்லது வீழ்த்தப்பட்ட அந்தச் சின்னஞ் சிறு மலருக்கு இறுதி வணக்கம் செலுத்தி மரியாதை செய்வதற்காக அவர்கள் சென்றிருக்கிறார்கள் என்பதை முதலில் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த நிகழ்ச்சி எத்தகைய எழுச்சி வாய்ந்தது என்பதை முன்னால் பேசிய மத்திய அமைச்சர் தம்பி டி.ஆர்.பாலுவும், விழாத் தலைவர் தம்பி சுந்தரமும் மற்றவர்களும் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். பேரறிஞர் அண்ணா நினைவு நாள் இன்று. இந்த நாள் விழாத் தலைவர் குறிப்பிட்டதைப் போல, 'ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்'' என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் ஒவ்வொரு மேடையிலும் எடுத்துச் சொன்ன அந்த வாசகத்திற்கு மீண்டும் ஒரு முறை பொருள் வழங்குகின்ற நாளாக அமைந்திருக்கின்றது.



அண்ணா அவர்களுடைய வாழ்நாள் எல்லாம் ஏழையெளிய மக்களுக்கு, நடுத்தர மக்களுக்கு, பாட்டாளி மக்களுக்குப் பாடுபடுவதே நம்முடைய பணியாக இருக்க வேண்டுமென்று அவருடைய உடன்பிறப்புக்களாகிய நமக்கெல்லாம் வழங்கப்பட்ட வாசகம் அதுதான். அதனை மனதிலே நிறுத்தித் தான் அண்ணா அவர்கள் மறைந்த பிறகு நான் முதலமைச்சராகப் பொறுப்பேற்றுக் கொண்டவுடன் என்னுடைய ஆருயிர்ச் சகோதரர் அரங்கண்ணல் அவர்களைத் தலைவராகக் கொண்டு குடிசைமாற்று வாரியத்தை 70ஆம் ஆண்டு அமைத்தேன்.

அண்ணா பிறந்த செப்டம்பர் மாதத்தில் இந்த குடிசை மாற்று வாரியம் தொடங்கப்பட்டது. தொடங்கப்பட்ட 70-ஆம் ஆண்டு முதல் இதுவரையிலே 67 ஆயிரம் குடியிருப்புகள் 350 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ளன.

இங்கே இன்றைக்குப் பறக்கும் ரயில் என்று சொல்லப்படுகின்ற விரைவு ரயில் சென்னையைச் சுற்றி அமைக்கப்பட்டுள்ள அந்தப் பகுதிகளில் குடியிருந்தவர்கள் அங்கே குடியிருக்க இயலாத காரணத்தால் அவர்களுக்கு மாற்று இடம் தருவதாக வாக்குறுதி அளித்து, அந்த வாக்குறுதியை நிறைவேற்றுவதற்காக இங்கே 3,000 குடியிருப்புகள் கட்டப்பட்டு அதிலே அவர்கள் குடியமர இருக்கிறார்கள்.

60 கோடி ரூபாய் செலவில், மொத்தம் 6,500 குடியிருப்புகள் கட்டுவதற்காகத் திட்டமிட்டிருக்கிறோம். மாதம் ஒன்றுக்கு 150 ரூபாய் வீதம் இருபதாண்டுகள் செலுத்தி அந்தக் குடியிருப்புகளைத் தங்களுக்குச் சொந்தமாக்கிக் கொள்ளக் கூடிய அந்த வாய்ப்பும் அவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்றது என்பதை மிகுந்த மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். அந்த மூவாயிரம் பேரில் இதுவரை இரண்டாயிரத்திற்கு மேற்பட்டவர்கள் தங்களுடைய பெயர்களைப் பதிவு செய்து கொண்டு நாளை முதல் இங்கே குடிவரவிருக்கின்றார்கள் என்பதையும் நான் கூறக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

### மூன்றாண்டு காலத்தில் 10,470 வீடுகள் கட்டப்பட்டுள்ளன

70-ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட இந்தத் திட்டத்தின் மூலம் 67 ஆயிரம் வீடுகளை இந்த முப்பதாண்டு காலத்திலே கட்டி முடிக்கப் பட்டுள்ளது என்று சொல்கின்ற நேரத்தில் நீங்கள் ஒரு ஒப்பீட்டையும் பார்க்க வேண்டும்.

இந்த 67 ஆயிரம் வீடுகளில் கடந்த ஐந்தாண்டு கால ஆட்சியில் கட்டப்பட்ட அடுக்கு மாடி குடியிருப்புகள் 6,774. அது மக்கள் விஸ்வாச சர்க்கார்! அதனால் ஐந்தாண்டு காலத்தில் 6,774 வீடுகளை மெல்ல மெல்லக் கட்டி முடித்தார்கள்.

ஆனால் இந்த மக்கள் விரோத சர்க்கார் இருக்கிறதே, இது 96-ஆம் ஆண்டிற்குப் பிறகு இந்த மூன்றாண்டு காலத்தில் கட்டி வழங்கிய அடுக்குமாடி குடியிருப்புகளின் எண்ணிக்கை 10,470. இது மக்கள் விரோத சர்க்கார், அதனால் மக்களுக்கு அதிகமாகக் கட்டிக் கொடுத்திருக்கின்றது என்பதை நீங்கள் எல்லாம் புரிந்துக் கொள்ள வேண்டுமென்பதற்காகச் சொல்கிறேன்.

தமிழ்நாட்டிலே திராவிட முன்னேற்றக் கழக அரசு பேரறிஞர் அண்ணா அவர்களுடைய தலைமையில் 67-ஆம் ஆண்டு பொறுப்பேற்ற பிறகு இரண்டாண்டு கால ஆட்சிக்குப் பிறகு அண்ணா மறைந்த பின் அந்தப் பொறுப்பினை ஏற்றுக்கொண்டு நான்கு முறை நான் முதல்வராகப் பொறுப்பேற்றுக் கொண்டிருக்கின்ற காலக் கட்டத்தில், மக்களுக்காக எத்தகைய நன்மைகள், எத்தகைய திட்டங்கள் தீட்டப்பட்டு வருகின்றன என்பதையெல்லாம் நீங்கள் எண்ணிப் பார்ப்பீர்கள் என்றே நான் நம்புகிறேன்.


இப்போது இந்த மூன்றரை ஆண்டுகளில் நாம் அறிவித்த நடைமுறைப்படுத்துகின்ற திட்டங்களை மாத்திரம் எண்ணினால் கூடப் போதும். ஏற்கனவே கண்ணொளித் திட்டம், பிச்சைக்காரர் நல்வாழ்வுத் திட்டம், குடிசைமாற்று வாரியத் திட்டம், குடிநீர் வாரியத் திட்டம், ஆதிதிராவிட மக்களுக்கு இலவசமாக காங்கிரீட் வீடுகள் கட்டித்தருதல் போன்ற பல திட்டங்கள். இந்தத் திட்டங்களில் பலவற்றை இந்தியாவிலேயே தமிழ்நாட்டில் தான் நாம் நிறைவேற்றினோம். அதைப் பார்த்து அகில இந்திய அளவிலே இந்தத் திட்டங்களைத் தத்தெடுத்துக் கொண்ட ஆட்சி மத்திய ஆட்சி என்பதையும் உங்களுக்கு நான் சுட்டிக் காட்டுகிறேன்.

### கிராமப்புற மக்களுக்கு அடிப்படை வசதிகளை உருவாக்கித் தர அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்

இந்த மூன்றாண்டு காலத்திலே தான் அண்ணா மறுமலர்ச்சித் திட்டம், ஒவ்வொரு கிராமத்திலும் அடிப்படை வசதிகள் அனைத்தும் சீர்செய்யப்பட வேண்டும், அடிப்படைத் தேவைகள் அனைத்தும் நிறைவேற்றப்பட வேண்டும், குடிதண்ணீர், சுகாதார வசதி, தெரு விளக்கு போன்ற இத்தனை வசதிகளையும், வாய்ப்புக்களையும் அந்த மக்களுக்கு உருவாக்கித்தர அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தைத் தொடங்கி மிகச் சிறப்பாக நடத்திக் கொண்டிருக்கிறோம்.

இந்தியாவிலே பாராளுமன்ற உறுப்பினர்களுக்குத் தான் பாராளுமன்றத் தொகுதித் திட்டம் என்ற பெயரால் அவர்களுக்கு ஒரு தொகை ஒதுக்கப்பட்டு ஏறத்தாழ தொடக்கத்திலே அவர்களுக்கு ஒரு கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு அந்தத் தொகை பிறகு இரண்டு கோடி ரூபாயாக ஆக்கப்பட்டு பாராளுமன்ற உறுப்பினர்களின் தொகுதித் திட்டம் இன்றைக்கு இந்தியாவிலே நிறை வேற்றப்பட்டு வருகின்றன.

வேறு எந்த மாநிலத்திலும் தொடங்காத காலக் கட்டத்தில் தமிழ்நாட்டில் 96-ஆம் ஆண்டு நாம் ஆட்சிக்கு வந்தவுடன் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு இருந்த அந்தத் திட்டத்தைப் போல் சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் ஒரு திட்டம் உண்டு என்று சொல்லி ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினருக்கும் முப்பது இலட்சம் ரூபாய் என்று தொடங்கி இப்போது ஐம்பது இலட்ச ரூபாய் அவர்களுக்குத் தரப்படுகின்றது.



## இந்தியாவிலேயே தமிழ்நாட்டில் தான் சட்டமன்ற தொகுதி மேம்பாட்டுத் திட்டம்

நீங்கள் கணக்குப் போட்டுப் பார்த்தால் ஆறு சட்டமன்றத் தொகுதிகளுக்கு ஒரு பாராளுமன்ற உறுப்பினர். ஆகவே ஆறு சட்டமன்றத் தொகுதிகளுக்கு அவர்களுக்கு தரப்படுகின்ற பணம் இரண்டு கோடி ரூபாய். ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினருக்கும் நாம் தருகின்ற நிதி ஐம்பது இலட்சம். நீங்கள் இந்த ஐம்பது இலட்சத்தை ஆறு தொகுதிகளுக்கென்று ஆறால் பெருக்கிப் பார்த்தால் மூன்று கோடி ரூபாய் நாம் தருகிறோம் ஒரு பாராளுமன்றத் தொகுதிக்கு.

இந்தத் திட்டம் இந்தியாவிலே தமிழ்நட்டைத் தவிர வேறெங்கும் இருப்பதாகத் தெரியவில்லை. அப்படி இருந்தால் கூட, அது தமிழ்நாட்டிற்குப் பிறகு ஆரம்பிக்கப்பட்ட திட்டமாக இருக்குமே தவிர, நமக்கு முன்பு ஆரம்பிக்கப்பட்ட திட்டமாக இருந்திட முடியாது.

தொடர்ந்து 'நமக்கு நாமே' திட்டம், நம்முடைய பணிகளை நாமே செய்து கொள்ளவேண்டும். நம்முடைய ஊர் காரியங்களை - தேவைகளை - உதாரணமாக பள்ளிக்கூடம் தேவையா, மருத்துவமனை தேவையா, ஒரு சிறிய சாலை போட வேண்டுமா, ஒரு குளம் வெட்டிக்கொள்ள வேண்டுமா, இதற்கான நிதி எவ்வளவு தேவைப்படுகிறதோ, அதிலே ஒரு பகுதியைப் பொதுமக்கள் வசூலித்துத் தருவது, இன்னொரு பகுதியைச் சர்க்கார் தருவது. இந்த இரண்டையும் இணைத்து 'நமக்கு நாமே' திட்டத்தை அவர்களே பாடுபட்டு - பணம் தர இயலாத பொதுமக்கள் தங்களுடைய உழைப்பைத் தருவது - உழைப்பை ஒரு பங்காக வைப்பது என்று திட்டமிட்டு இந்த ஆட்சி கடந்த மூன்று நான்கு ஆண்டுக் கர்லமாக நிறைவேற்றிக் கொண்டு வருகிறது.

அதைத் தொடர்ந்து தான் உழவர் சந்தை. விவசாயிகள் தாங்கள் பயிரிடும் காய்கறிகளை இடைத் தரகர்களை வைத்துக் கொண்டு விற்பனை செய்கின்ற காரணத்தால் அதை வாங்கிச் சாப்பிடுகின்ற பொதுமக்களும் அதிக விலை கொடுக்க வேண்டியிருக்கின்றது. விவசாயிகளும் நல்ல இலாபத்தைப் பெற முடியவில்லை. இடையிலே வருகின்ற தரகர்கள் அந்த இலாபத்தைப் பங்கிட்டுக் கொண்டு போய் விடுகிறார்கள். எனவே இடைத்தரகர்களுக்கு இடம் இல்லாமல் அந்தக் காய்கறிகளை அவர்களே கொண்டு வந்து ஒரு இடத்திலே வைத்து விற்பதற்கேற்ற வகையிலே ஏறத்தாழ இருபது நகரங்களில் இன்றைக்கு உழவர் சந்தைகள் தொடங்கப்பட்டுள்ளன. மொத்தம் 100 நகராட்சி மன்றங்களிலும் 100 உழவர் சந்தைகளை அமைக்கத் திட்டமிட்டிருக்கிறோம். இந்த ஆண்டு இன்னும் ஏழெட்டு மாதங்களில் 100 உழவர் சந்தைகளும் அமைக்கப்பட்டு விடும்.

மதுரையிலும், திருச்சியிலும் உழவர் சந்தைகளில் ஒவ்வொரு நாளும் ஒரு இலட்சத்து எண்பதாயிரம் ரூபாய், ஒரு இலட்சத்து தொண்ணூறாயிரம் ரூபாய் என்ற அளவிற்கு விற்பனையாகிறது. சேலத்திலே ஒவ்வொரு நாளும் ஐம்பதாயிரம், அறுபதாயிரம் ரூபாய்க்கு உழவர் சந்தையிலே வியாபாரம் ஆகிறது. இப்படி இருபது ஊர்களிலும் வியாபாரமாகிறது. சில சின்ன ஊர்களில் மாத்திரம் தான் ஒரு நாளைக்கு இருபதாயிரம் ரூபாய், முப்பதாயிரம் ரூபாய் என்ற அளவிற்கு விற்பனையாகிறது.

## நேர்மையாக - நாணயமாக நடைபெறும் உழவர் சந்தைகள்

இது இந்தியாவிலே தமிழ்நாட்டைத் தவிர வேறு எந்த மாநிலத்திலும் இல்லாதத் திட்டம். உழவர் சந்தைக்கு விவசாயிகள்

காய்கறிகளைக் கொண்டு வரலாம். அவர்களுக்கு ஒதுக்கப்படும் இடம் - ஒவ்வொரு நாளும் யார் முந்தி வருகிறார்களோ அவர்களுக்கு இடம் தருவதில் முன்னுரிமை தரப்படும். அது மாத்திரமல்ல, அந்த இடத்திற்கு வாடகை கிடையாது. அந்த இடத்திற்கு வர அவர்கள் கிராமத்திலிருந்து பேருந்திலே வரும் போது அவர்களுக்கு மாத்திரம் தான் டிக்கெட். அவர்கள் கொண்டு வருகின்ற காய்கறி மூட்டைக்கு லக்கேஜ் கட்டணம் கிடையாது. அதுவும் இனாம். ஒவ்வொரு நாளும் காய்கறிகளுக்கான விலையை உழவர் சந்தையிலே அமைக்கப்படும் குழு கூடித் தீர்மானிக்கும். விலைப்பட்டியல் போர்டிலே எழுதி தொங்க விட்டுவிட வேண்டும். அதைப் பார்த்து வாங்க வருபவர்கள் பணம் கொடுத்து வாங்குவார்கள். எந்தப் பிரச்சினையும் இல்லாமல் வியாபாரம் நடைபெறும்.

ஒரு முக்கியமான விஷயம் என்னவென்றால் அரசாங்கமே அவர்களுக்கு தராசு, படிக்கல், எல்லாம் வாங்கிக் கொடுத்து விடுகிறது. கொடுப்பது மாத்திரமல்ல, அது ஒழுங்காக வேலை செய்கிறதா - இவர்கள் ஒழுங்காக வேலை செய்தால்கூட சில நேரங்களில் தராசு ஒழுங்காக வேலை செய்யாது. முள் ஒழுங்காக ஆடுகிறதா, படிக்கல் தேயாமல் இருக்கிறதா என்பதையெல்லாம் கண்காணிப்பதற்கு அதிகாரிகள். இப்படி உழவர் சந்தைகள் நேர்மையாக, நாணயமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

தமிழ்நாட்டிலே நேர்மையாக, நாணயமாக ஒரு காரியம் நடைபெறுகிறதென்றால் அது எவ்வளவு கஷ்டம் என்பது உங்களுக்குத் தெரியும். ஏனென்றால் நாணயமில்லாதவர்களை ஆதரிக்கின்ற சிலபேர் நாட்டிலே இன்றைக்கு இருக்கிறார்கள் என்பது உங்களுக்குத் தெரியும். நேர்மை இல்லாதவர்கள் பக்கம் போகின்ற சிலபேர் இன்றைக்கும் நாட்டிலே இருக்கின்றார்கள். எனவேதான் உழவர் சந்தையிலே நேர்மை, நாணயம் காப்பாற்றப்பட வேண்டும் என்பதற்காக எல்லா விதமான கண்காணிப்போடும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

அடுத்து 'வருமுன் காப்போம்' திட்டம். இந்தியாவிலே அப்படி ஒரு திட்டம் வேறெங்காவது உண்டா என்று கேட்டுப் பாருங்கள். வருமுன் காப்போம் திட்டம் நம்முடைய மருத்துவர்கள் மருத்துவ சாதனங்கள், மருந்துகள் இவைகளோடு ஒவ்வொரு மாவட்டமாகப் பிரித்துக் கொண்டு அந்த மாவட்டங்களுக்குச் சென்று கொண்டிருக்கின்றார்கள்.

முதன் முதலாகக் கடந்த மாதம் திருவள்ளூர் மாவட்டத்தில் இது தொடங்கப்பட்டது. அந்த ஒரு நாள் மாத்திரம் ஏறத்தாழ எட்டாயிரம் பேர், பத்தாயிரம் பேர் வந்து சிகிச்சை செய்து கொண்டார்கள். தங்களுக்கு உடலிலே என்ன நோய் இருக்கிறது என்பதை அறிந்து கொள்ளவும், உடனடியாக அதற்கான மருந்தைப் பெற்று நோயைப் போக்கிக் கொள்ளவும், சில நோய்கள் பெரிய மருத்துவமனைக்குச் சென்றால் தான் தீருமென்றால் அந்தப் பெரிய மருத்துவமனைகளுக்கு அங்கிருந்தே சிபாரிசுக் கடிதங்கள் கொடுத்தனுப்பவும், நகரத்திலே உள்ள மருத்துவமனைகளிலே உள்ள டாக்டர்கள் அவர்களுக்கு இலவசமாகவே வைத்திய உதவிகளைச் செய்யுமான இந்த ஏற்பாட்டிற்குப் பெயர் 'வருமுன் காப்போம்' என்ற திட்டமாகும். இதிலே 8,400 முகாம்கள் தமிழ்நாடு முழுதும் நடைபெற வேண்டியிருக்கின்றது. இதுவரையிலே ஏறத்தாழ 500 முகாம்கள் நடந்து முடிந்திருக்கின்றன. மீதம் உள்ள முகாம்களும் இந்த ஆண்டு நடந்து முடியவிருக்கின்றன.

### ஜெயப்பிரகாஷ் நாராயண் பாராட்டிய குடிசைமாற்று வாரியத் திட்டம்

மனிதர்களை மாத்திரம் பார்த்தால் போதுமா? மனிதர்களை விட நன்றி உடையவை ஆயிற்றே கால்நடைகள். எனவே அந்தக் கால்நடைகளையும் கவனிக்க வேண்டும் என்பதற்காக கால்நடைப் பாதுகாப்புத் திட்டம் என்ற ஒரு திட்டத்தைத் தொடங்கி வாயில்லாத ஜீவன்களுக்கு - மனிதர்களாவது வலிக்கிறது, மயக்கம் வருகிறது என்று சொல்லக் கூடிய அளவிற்கு வாய்த்திறன் பெற்றவர்கள். அம்மா என்று கதறுவதைத் தவிர வாயில்லாத ஜீவன்களாக இருக்கின்ற அந்தப் பிராணிகளுக்கு வைத்திய உதவி செய்ய நம்முடைய கால்நடைத் துறையினுடைய மருத்துவர்கள் கிராமம் கிராமாகச் செல்கின்ற திட்டம் அண்மையிலே திருக்கழுக்குன்றத்திலே தொடங்கப்பட்ட தமிழ்நாடு முழுதும் பரவலாகப் பல மாவட்டங்களிலே நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.


இப்படி வேறு எந்த மாநிலங்களிலும் இல்லாத மக்கள் நலத் திட்டங்கள், மக்களுடைய வசதி வாய்ப்புக்காக அவர்களையே நாடிச் செல்கின்ற திட்டங்களாக அமைக்கப்பட்டு, இன்றைக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

இத்தகைய திட்டங்களோடு தான் 70-ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட இந்தக் குடிசைமாற்று வாரியத் திட்டத்தையும் நாம் நிறைவேற்றிக் கொண்டு வருகிறோம். இதைத் தொடங்கிய அந்தக் காலக் கட்டத்திலே இதற்குத் தலைவராக இருந்து பெரும்பணி ஆற்றியவர் என்னுடைய ஆருயிர் சகோதரர் அருமை அரங்கண்ணல் என்பதை நீங்கள் எல்லாம் நன்கறிவீர்கள். அவருடைய பெயரால் இரண்டொரு இடங்களிலே அரங்கண்ணல் நகரம் என்றே உருவாக்கியிருக்கிறோம்.

ஜெயப்பிரகாஷ் நாராயண் குடிசைமாற்று வாரியத் திட்டத்தைக் கண்டு வியந்து பாராட்டியிருக்கிறார். பாபு ஜெகஜீவன்ராம் அவர்கள் குடிசைமாற்று வாரியத் திட்டத் திறப்பு விழா ஒன்றிலே கலந்துக் கொண்டு பாராட்டியிருக்கிறார். ஆதிதிராவிடர்களுக்காக கட்டப்பட்ட வீடுகளைக் கண்டு அதிசயித்துப் போய் அதைப் பாராட்டியிருக்கிறார். இவைகளோடு இப்போது ஒரு புதிய திட்டமாக - இதற்கெல்லாம் ஒரு குடியிருப்புக்கு 60 ஆயிரம் ரூபாய், 70 ஆயிரம் ரூபாய் ஆகிறது என்பதால் இன்னும் எளிய முறையிலே வீடுகளைக் கட்டித்தர கல்நார் தகடுகளால் ஆன தீப்பிடிக்காத ஓட்டுக் கூரைகளோடு கூடிய வீடுகளை அமைக்கும் திட்டத்தை இப்போது நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோம். இந்தத் திட்டத்தின்படி 12,500 ரூபாய்க்கு ஒரு குடும்பத்திற்காக ஒரு சிறிய வீட்டை அமைத்துத் தர முடியும்,

அதன்படி கடந்த இரண்டாண்டுகளில் இந்த அரசு அமைத்துள்ள புதிய கல்நார் தகடு வேய்ந்த குடியிருப்புகளின் எண்ணிக்கை 20,611. இப்போது நான் ஆரம்பித்து இரண்டாண்டுகளில் இருபதாயிரம் கல்நார் வீடுகள் கட்டித் தரப்பட்டிருக்கின்றன.

கட்டித் தரும் திட்டம் நிறைவேறிக் கொண்டு வருகின்றது. எனவே மனிதனுடைய தேவைகளையெல்லாம் நிறைவேற்றுகின்ற அரசாக, மக்களுடைய வசதி வாய்ப்புகளைக் கவனிக்கும் அரசாக, இருக்கின்ற, இந்த அரசு உங்களுடைய அரசு.




## மனிதனுடைய தேவைகளை நிறைவேற்றுகிற அரசு

ஒரு நாட்டின் பிரஜையின் முக்கியமான தேவை உணவு, உடை, உறையுள். உண்ண உணவு வேண்டும், உடுக்க உடை வேண்டும், இருக்க வீடு வேண்டும். இந்த மூன்று முக்கியமான பிரச்சினைகளில் ஒரு பிரச்சினையை, உணவுப் பிரச்சினையைத் தீர்த்துக் கொண்டு வருகிறோம். இந்தியாவிலே வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு இங்கே தான் ரேஷன் கடைகளிலே அரிசி விலை குறைவு. அதைப் போலவே இந்தியாவிலே எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு இங்கே தான் இப்படிப்பட்ட உறையுள், வீடுகளைக்

## 'கண்ணகி நகர்' எனப் பெயர் சூட்டல்

வீட்டுவசதித் துறை செயலாளர் கோவிந்தன் அவர்கள் இந்தப் புதிய நகருக்கு ஒரு புதிய பெயரைச் சூட்ட வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். நான் என்ன பெயர் சூட்டுவதென்று யோசித்து யோசித்துப் பார்த்தேன். இந்த ஆட்சியில் பல நல்லவர்களுடைய பெயர்கள் எல்லாம் சூட்டப்பட்டாகி விட்டது. அவர்கள் வேறு கட்சிக்காரர்களாக இருந்தாலும் வித்தியாசம் பாராமல் அவர்களுடைய பெயர்கள் எல்லாம் சூட்டப்பட்டாகி விட்டது. எனவே ஒரு இலக்கிய பெயராகவே சூட்டுவதென்று முடிவு செய்து ''கண்ணகி நகர்'' என்று பெயர் சூட்டி விடைபெறுகிறேன். ★



# தமிழ்க் கல்வி

தமிழ்க்கல்வி தமிழ்க்கல்வி என்றுபாடு – தமிழா!
தமிழில்கற்றுநீ முன்னேற்ற நடைபோடு!
தமிழ்க்கல்வி! தமிழ்க்கல்வி! என்றுபாடு – தமிழா!
தன்மான முன்னேற்றச் சிந்தையோடு!
தமிழ்க்கல்வி! தமிழ்க்கல்வி! என்றுபாடு – தமிழா!
தமிழோடு தமிழர்க்கு வாழ்வுதேடு!

அறிவிற்கு அடித்தளம் தமிழ்மொழியே – தமிழா!
ஆங்கிலம்போல் ஆகாதென்பது வீண்பழியே!
அறிவிற்கு மூலமும்–முதலும் தமிழ்மொழியே – தமிழா ! உன்,
பிள்ளைக்குக் கொடுப்பாய்த் தமிழ்க்கல்வியே!

முயன்றால் முடியாதது ஒன்றும் இல்லை – தமிழா!
முடியாதென்பது மனிதனுக்கு அழகோ? இல்லை!
அனைத்தும் தமிழால் முடியுமென்று நம்பு!
அறிவிழந்து தமிழா! நீ, பேசாதே வம்பு!

தமிழ்மழலையர் தமிழில் பேசினால் தண்டனை – இது
ஆங்கிலப் பள்ளியின் அதிகார நிபந்தனை
எப்படி இருக்கிறது ஆதிக்கத் தோரணை – இது
ஆங்கில மோகத்தின் உச்சக்கட்ட வேதனை!

தலைமையும், முதன்மையும் தமிழுக்குத் தருவோம்– அறிவு
வளமையும், செழுமையும் வாழ்வினில் பெறுவோம்!
அயல்மொழி ஆதிக்கம் தமிழகத்தில் எதற்கு? – அதன்
பாதிப்புத் தெரியாது இப்போது நமக்கு!

அறிவார்ந்த தமிழ்க்கல்வியை அறியாமல் இகழாதே – தமிழா
'ஆங்கிலம்! ஆங்கிலம்!' என்று அலைந்து திரியாதே!
அன்னைத்தமிழை மறந்து அடையாளம் தெரியாமல் – தமிழா
அழிந்தொழிந்து போகாதே! இழிவுநீ அடையாதே!

தமிழ்வழிக் கல்வியைத் தமிழரின் உரிமையென்று கூறு!
தமிழ்வழிக் கல்வியே தமிழரின் பெருமையெண்ணிப் பாரு!
தமிழ்வழிக் கல்வியே தமிழகஅரசின் கடமையென்று கோரு!
தமிழுக்கு மாறானது வேண்டாதது; சிந்தித்துத் தேறு!


தமிழரின் சொல்லும் செயலும் தமிழாகட்டும்
தமிழரின் வாழ்க்கைக கூறுகள் அனைத்தும்
தமிழரைத் தமிழரென்று அடையாளம் காட்டட்டும்
தமிழரின் தனித்தன்மை தமிழ்முகம் ஆகட்டும்!

தமிழ்மண்ணில் தமிழ்க்கல்வியைத் தமிழர்தாம்
ஏற்கவேண்டும் வளர்க்கவேண்டும் தமிழர் நாம்,
தமிழரென்று சொல்வதற்குத் தகுபொருளைத்
தமிழா! நீ சிந்தித்துச் செயலாக்க வேண்டும்!

தமிழ்மண்ணில் தமிழ்வழிக் கல்விக்கு எதிர்ப்பா?
ஆங்கிலத்திற்கு ஆதரவாக வழக்குத் தொடுப்பா?
இதற்குப் பெயர்தான் ஆங்கிலக்கல்வி வளர்ப்பா?
இவனெலாம் ஒருபிறப்பா? இதுவுமொரு பிழைப்பா?

மனிதஆற்றலை மலினப்படுத்திப் பணம்குவிக்கின்றார்!
பாவப்பட்டோர் தங்களின் பரிசுத்த வணிகத்தைப்
புனிதப்படுத்திக் கொள்ளப் போராட்டம் தொடுக்கின்றார்!
அவர்களை யாரென்று அடையாளம் காட்டுகின்றார்.

தமிழுரிமைத் தமிழ்மண்ணில் தமிழ்வழிக் கல்வியைத்
'திணிப்பு' என்று சொல்வது திமிரான திரிபுவாதம்;
மனச்சாட்சி அற்றோரின் மானமிலா வாக்குமூலம்!
மனநோய் மனிதர்களின் அநாகரிக அவலஓலம்!



– பழனி மகிழ்நன்




தமிழ்மண்ணில் தமிழ்மொழியை அன்னியமாக்கிப் பேசுதல்
கண்ணியமற்ற அறிவிலிகளின் உண்மையற்ற கதைப்பாகும்
ஈனப்பிறப்பின் அடையாளம் இதுவென்பதே சரியாகும்
இதற்குமேல் சொல்வது நமக்கன்றோ தாழ்வாகும்.

உரிமையெலாம் தமிழென்று உளம்கொள்வாய் தமிழா!
உயர்வெலாம் தமிழென்று உண்மைஅறிவாய் தமிழா!
நன்மையெலாம் தமிழென்று நாளும்செய்வாய் தமிழா
நானிலம்போல் வளர்வாய்! உயர்வாய்! தமிழா!

எங்கும் எதிலும் தமிழே!
என்னும் கொள்கை நமதே!
எங்கும் எதிலும் தமிழே!
என்னும் அரசும் நமதே!


வீதிக்கு வீதி தமிழ்முழக்கம்
தமிழ்க் கல்விக்குத் தரட்டும் நல்விளக்கம்!
வீட்டிற்கு வீடு ஆதரவைத்
தேடிப் பெறட்டும் சான்றோரின் தமிழியக்கம்!

நாடும் மக்களும் நம்பக்கம்
அரசிற்கு வேண்டாமே தயக்கம்!
தமிழ்வழிக் கல்விக்கிது தொடக்கம்;
தொடரட்டும் ஆகட்டும் சட்டம்!

கேட்டினைப் போக்கி நாட்டினைக் காத்திட
அரசினர் ஆக்கினர் தமிழ்வழிக் கல்வி
தமிழ்வழிக் கல்வியே தமிழர்க்கு ஆக்கம்
தமிழ்வழிக் கல்வியில் காட்டுவோம் ஊக்கம்!

தமிழ்வழிக் கல்விக்கு ஆணையிட்டத்
தமிழக அரசுக்கு நன்றிசொல்வோம்!
தமிழ்வழிக் கல்வியைச் சட்டமாக்கிடத்
தமிழக அரசைநாம் வேண்டிநிற்போம்!

ஆரம்பக்கல்வி முதல் ஆராய்ச்சிக்கல்வி முடிய
அனைத்தும் இங்கே தமிழாகட்டும்
அறிவியல்தமிழ் வளர்த்து அறிவியல் மாந்தராய்
அவனியில் தமிழர் வாழ்வுயரட்டும்!



தமிழால் ஒருவர்க்கொருவர் உறவென்று
தமிழ்வழி ஒன்றுபடுவோம் தமிழரென்று
தமிழால் தமிழர்க்கு உயர்வுண்டு
தமிழ்வழிக்கல்வி காப்போம் உறுதிகொண்டு!

தமிழே தமிழரின் உயிர்க்கூறு
தமிழ்வழிக் காப்போம் தமிழ்ப்பண்பாடு
தமிழே தமிழரின் நிலைப்பாடு!
தமிழ்வழி நிற்பதே தமிழ்நாடு!

தமிழ்க்கல்வி! தமிழ்க்கல்வி! என்றுபாடு – தமிழா!
தமிழில்கற்றுநீ முன்னேற்ற நடைபோடு!
தமிழ்க்கல்வி! தமிழ்க்கல்வி! என்றுபாடு – தமிழா!
தன்மான முன்னேற்றச் சிந்தையோடு
தமிழ்க்கல்வி! தமிழ்க்கல்வி! என்றுபாடு – தமிழா
தமிழோடு தமிழர்க்கு வாழ்வுதேடு! ★

## பிரச்சினை

*இராமநாதபுரம் மாவட்டம், திருவாடானை வட்டம், தீர்த்தாண்டதானம் கிராமம். இந்த கிராமத்தில் மிகவும் புனிதம் நிறைந்த சகல வினையும் தீர்க்கும் சர்வதீர்தேஸ்வரர் ஆலயம் உள்ளது. ஆடி அமாவாசை, தை அமாவாசை காலங்களில் தீர்த்தம் ஆட வெளியூரில் இருந்து ஆயிரக் கணக்கானோர் வருகின்றனர். அது போல தினமும் 100க்கும் மேற்பட்டவர்கள் கடலில் நீராடி சுவாமி தரிசனம் செய்ய வருகிறார்கள். ஆனால் வருபவர்கள் சேது சாலையில் இருந்து ஊருக்குள் வரும் சாலை வழியாகக் கடலுக்கும், கோவிலுக்கும் வர மிகவும் சிரமப்படுகிறார்கள். அந்தச் சாலை போட்டு சுமார் 30 ஆண்டுகள் இருக்கும். மாவட்ட கவுன்சிலர், ஒன்றிய கவுன்சிலர், ஊராட்சிமன்றத் தலைவரிடம் நாங்கள் முறையிட்டு அவர்கள் முயற்சியினால் ரோடு போட முயன்றால், அந்தச் சாலை கணக்குகளில் மீனவர் சாலை என்று இருப்பதால், யூனியன் மூலமாகவோ, பஞ்சாயத்து மூலமாகவோ போட முடியாத நிலை உள்ளது. எங்கள் கிராமத்தின் மீது கருணை கொண்டு, இந்தச் சாலையைத் தார்ச்சாலையாக போட்டுத்தர ஏற்பாடு செய்து, எங்களையும், ஆலயத்திற்கு வழிபட வருபவர்களையும், சிரமப்படாத வகையில் தார்சாலை அமைத்துத் தரும்படி பணிவுடன் கேட்டுக் கொள்கிறோம்.*

– கிராமப் பொது மக்கள் சார்பாக எஸ்.வள்ளிநாயகம்
தீர்த்தாண்டதானம் கிராமம், திருவாடானை ஒன்றியம்
இராமநாதபுரம் மாவட்டம்.

## தீர்வு

இராமநாதபுரம் மாவட்டம் திருவாடானை ஊராட்சி ஒன்றியம் புல்லக்கடம்பன் ஊராட்சியில் அமைந்துள்ள தீர்த்தாண்டதானம் சர்வதேஸ்வரர் ஆலயத்திற்குச் செல்லும் சாலை மேம்பாடு மற்றும் தீர்த்தக்கரை அடிப்படை வசதிகள் செய்யும் திட்டத்தில் வேலையை "சமன்பாடு மற்றும் ஊக்க நிதி" 1999–2000–இல் (சுற்றுலாத் தலங்கள் மேம்பாடு) ரூ.5 இலட்சம் மதிப்பீட்டில் எடுத்துச் செய்ய தேர்வு செய்து பிரேரணை அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. நிதி ஒதுக்கீடு மற்றும் அனுமதி வரப்பெற்றவுடன் மேற்படி வேலையை எடுத்துச் செய்யப்படும் என்பதை அன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்.


– கேபாலகிருஷ்ணன்
ஆணையாளர், ஊராட்சி ஒன்றியம்
திருவாடானை.

* * *

## பிரச்சினை

*நாகப்பட்டினம் மாவட்டம் கீழ்வேளூர் முதல்நிலை பேரூராட்சியில் 2–வது வார்டு கலைஞர் நகர் மதகடித் தெரு, பகுதிச் சாலையைச் சிமெண்ட் கான்கிரீட் சாலையாக்கிட "செயற்பொறியாளர், குடிசைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம், திருச்சி" என்ற முகவரியில் இருந்து அதிகாரிகள் வந்து சாலையைப் பார்வையிட்டு அளந்து சென்றார்கள். மன்னார்குடியைச் சேர்ந்த திரு பூமிநாதன் அவர்கள், ஒப்பந்தப் பணியை எடுத்துள்ளதாகவும் அறிகிறேன். ஆனால், இரண்டு ஆண்டு காலமாக எந்தப் பணியும் நடைபெறவில்லை. பணி விரைந்து நடந்து முடிந்திட நடவடிக்கை எடுத்து உதவிட வேண்டுகிறேன்.*

– ச.இராமகிருஷ்ணன், துணைத் தலைவர்
கீழ்வேளூர், நாகை மாவட்டம்.




## தீர்வு

பேரூராட்சிகளில் 1999–2000–ஆம் ஆண்டுக்கான சிமெண்ட் சாலை அமைக்கும் மான்யத் திட்டத்தில், கீழ்வேளூர் பேரூராட்சியில் 2–வது வார்டு கலைஞர் நகர் (மதகடித் தெரு) பகுதிச் சாலையை, சிமெண்ட் சாலையாக அமைக்க, ரூ.3.19 இலட்சத்தில் பணி மேற்கொள்ளப்பட்டு, 300மீ. நீளம் சிமெண்ட் சாலை அமைக்கும் பணி ஒப்பந்தக்காரர் திரு.ஏ.எஸ்.என்.ராஜாராமன் என்பவரிடம் 17.9.99–ஆம் தேதியில் ஒப்படைக்கப்பட்டு, பணி நடைபெற்று வருகிறது. மேற்படி பணி இம்மாத இறுதிக்குள் முடிவடைந்துவிடும் என்ற விவரம் தெரிவிக்கப்படுகிறது.

– மு. பாலசுப்ரமணியன்
பேரூராட்சிகள் உதவி இயக்குநர்
பனகல் கட்டடம், தஞ்சாவூர் மாவட்டம்.

* * *

# எங்கள் ஊர் பிரச்சினை



# திருவள்ளுவர் உணர்த்தும் மொழிசார் சிந்தனைகள்

பொற்கோ

**மொழியியல்**

மனிதனோடு கூடப்பிறந்த ஒரு ஈடு இணையற்ற கருவியாகவும் உறுப்பாகவும் செல்வமாகவும் விளங்குவது மொழி. மொழியைப் பற்றிய சிந்தனைகள் பழங் காலத்தில் இலக்கணம் என்ற அளவில் இருந்தது. இக்காலத்தில் மொழியைப் பற்றிய சிந்தனைகள் பல்வேறு கோணங்களில் விரிந்து பரந்து வளர்ந்திருக்கிறது.

**திருக்குறள் காட்டும் மொழிச் சிந்தனைகள்**

திருவள்ளுவர் திருக்குறளில் கூறியுள்ள செய்திகள் இன்ன இனத்துக்கு மட்டும் உரியது என்றோ, இன்ன சமயத்துக்கு மட்டும் உரியது என்றோ, இன்ன நாட்டுக்கு மட்டும் உரியது என்றோ கூற இயலாததாய் உலகப் பொதுமை பெற்றவை என்பதை மனத்திற்கொண்டு பார்க்கும்போது, அவர் மொழி பற்றிக் கூறிய செய்திகளும் இன்ன மொழிக்கு மட்டும் உரியது என்றில்லாமல் எல்லா மொழிக்கும் உரியதாய் அமைந்துள்ள உண்மை இனிது விளங்குகிறது. எழுத்தமைப்பு, சொல்லமைப்பு முதலாய மொழியமைப்புகளை விளக்குவதும் உலக மொழிகளின் வகைகளை ஆராய்வதும் திருவள்ளுவர் எடுத்துக்கொண்ட நூற்பணிக்கு இயைபில்லாதன. எனவே, அவருடைய நூலில் காணும் மொழிச் சிந்தனைகள் (1) சொற்பயன், (2) சொல்லாட்சி, (3) சொல்லின் தன்மை, (4) சொல் நயம், (5) கருத்துப் பரிமாற்றம் என இத்தகைய முறைகளிலேயே அமைந்துள்ளன. சொற்பயன், சொல்லாட்சி, சொல்லின் தன்மை, சொல் நயம், கருத்துப் பரிமாற்றம் முதலானவை மக்கள் வழங்கும் எல்லா மொழிகட்கும் பொதுவானவை, மொழி யாராய்ச்சிக்கு இத்தகைய ஆய்வுகளும் ஒரு நிலையில் தேவையான ஆய்வுகளே.

**சொற்பயன்**

பேசுவோர் மனநிலைக்கும் கேட்பார் மனதில் ஏற்படும் விளைவுகளுக்கும் ஏற்ப வள்ளுவப் பெருந்தகை சொற்களை இன்சொல் இன்னாச்சொல் எனப் பொதுவாக இருவகையாகப் பிரித்துள்ளார். இவையன்றியும் சொற்களைப் பயனுள்ள சொல், பயனிலாச் சொல் எனவும் பிறவாறும் வகை பிரித்துச் சுட்டுவார் வள்ளுவர்.

இனிய சொற்களையே ஆளுவதால் ஏற்படும் பயன்களைப் பற்றி வள்ளுவர் இனியவை கூறல் என்ற அதிகாரத்தில் பேசுகிறார். சுருக்கமாகச் சொன்னால்,

1. இன்சொல்லால் அறம் பெருகும் *(96);*
2. இன்சொல் நன்றி பயக்கும், அதாவது நன்மை உண்டாக்கும் *(97);*
3. இன்சொல் இன்பம் தரும் *(98);*
4. இன்சொல் இனிது ஈனும் *(99)*

— என்று கூறலாம்.

இவையன்றியும் பயனிலாச் சொற்களால் விளையும் கேடுகளைப் பற்றியும் பயனிலாச் சொற்களை விளக்கவேண்டிய இன்றியமை யாமை பற்றியும் பயனில சொல்லாமை என்ற அதிகாரத்தில் வள்ளுவர் விளக்கமாகப் பேசிச் செல்கிறார்.




ஒரு சொல் எப்படிப்பட்டவர் வாயிலிருந்து வருகிறது என்பதைப் பார்த்துத்தான் அதன் பயனைப் பற்றிச் சரியாக மதிப்பிட முடியும். சிறந்த ஒழுக்கமுடைய மனிதனின் வாய்ச்சொல் வழுக்கல் நிலத்தில் நாம் சறுக்கி விழாமல் நம்மைக் காப்பாற்றுகிற ஊன்று கோலைப் போல உதவிபுரியும் என்ற கருத்தில், "இழுக்கல்...வாய்ச் சொல்" (415) என்று கூறிச் செல்கிறார் வள்ளுவர்.

சொல் எத்தகையதோ அதற்கேற்றபடி பயன் மாறுபடும். சொல் யாரிடமிருந்து பிறந்ததோ அதற்கேற்றபடி அதன் பயன் மாறுபடும். சொல் யாரைச்சென்று சேர்கிறதோ அதற்கேற்பவும் அதன் பயன் வேறுபடும். சொல்லின் பயன்பற்றி வள்ளுவர் பல்வேறு வாய்ப்புகளில் ஆங்காங்கே பேசிச் சென்றிருக்கிறார்.

வள்ளுவர் சொற்களை எந்தெந்த முறையில் வகைப்படுத்துகிறார் என்றும், சொல்லின் பயனைப்பற்றி என்ன கருதுகிறார் என்றும் திட்டவட்டமாக ஆராய்வது பயனுள்ள முயற்சியாக இருக்கும். சொற்களை இலக்கண அடிப்படையில் பெயர், வினை இடை, உரி என்று வகைப்படுத்துவது வேறு; அவற்றையே மொழி வரலாற்று நோக்கில் இயற்சொல், திரிசொல், திசைச் சொல், வட சொல் என்று வகைப்படுத்துவது வேறு; பயன்பாட்டு நோக்கில் சொற்களைப் பயனுள்ள சொல், பயனில்லாச் சொல் என்றும் இன்சொல், கடுஞ்சொல், புன்சொல் என்றும் வகைப் படுத்துவது வேறு. ஆய்வுத் தேவைக்கேற்ப வகைப்பாடுகளும் வகைப் பாட்டின் அடிப்படைகளும் மாறுபட்டுள்ளன. நடைமுறை வாழ்வியல் நோக்கில் சொற்களைப் பாகுபடுத்திப் பார்த்தால் அந்த வகைப்பாடு திருக்குறளில் காணும் சொல் வகைகளை விளங்கிக் கொள்ள உதவும்.

**சொல்லாட்சி**

வாழ்வில் சொற்களை ஆளும் முறைமை பற்றித் தெளிவாகச் சில வழிமுறைகளை வகுத்துத் தருகிறார் வள்ளுவர். தன்மனதில் உள்ளபடியே கருதுகின்ற ஒன்றை வெளிப்படுத்த ஒருவன் சொல்லை அல்லது மொழியைக் கையாளுகிறான். அதனை நாம் வாய்மை என்போம். தான் உள்ளபடியே கருதாத ஒன்றை, உள்ளபடியே தான் அதைக் கருதுவதாகப் பிறர் நம்புகின்ற வகையில், வெளிப்படுத்தவும் ஒருவன் மொழியைக் கையாளலாம். அதனை நாம் பொய்மை என்போம். இவற்றுள் வாய்மையின் சிறப்பை வள்ளுவர் வாய்மை என்ற அதிகாரத்தில் விளக்கிச் செல்கிறார். பயனில்லாத சொற்களை ஆளுதல் வேறு; பொய் பேசுதல் வேறு. சொற்களை ஆளும்போது பயனில்லாத



முறையில் ஆள்வதை வள்ளுவர் கண்டித்து ஒதுக்குகிறார்.

பொய் பேசுதலும் பயனின்றிப் பேசுதலும் கடிந்து ஒதுக்கப்பட்டது போலவே புறம் பேசுதலும் வள்ளுவத்தில் கடிந்து ஒதுக்கப் படுகிறது. புறங்கூறாமை என்ற அதிகாரத்தில் புறங்கூறாமையின் சிறப்பையும் புறங்கூறலின் இழிவையும் விளக்கிச் சொல்கிறார் வள்ளுவர்.

ஒருவரையொருவர் நன்கு உணர்ந்து ஒத்த அன்பு பூண்ட காதலர்கள் சொற்களைச் சற்று வேறுபட்ட முறையில் ஆள்வதும் உண்டு. மிகுந்த அன்புடைய காதலி தன் காதலனிடம் பேசும்போது, சில நேரங்களில், வேண்டாத வர்களிடம் அல்லது அயலவர்களிடம் பேசுவது போல் பேசுதலும் உண்டு. இந்தப் பேச்சும் பொய்மையும் வேறு வேறு என்பது சொல்லாமலே விளங்கும். இத்தகைய சொல்லாட்சியைப் பற்றி "செறாஅச்.....குறிப்பு" (1097) என்ற குறளின் மூலம் தெளிவாக உணர்ந்துகொள்கிறோம்.

மேலும் அவையறிதல், அவையஞ்சாமை, சொல்வன்மை முதலாய அதிகாரங்களில் சொல்லாட்சி பற்றி விளக்கிச் செல்கிறார் வள்ளுவர்.

**சொல்லின் தன்மை**

ஒரெழுத்தொருமொழி, ஈரெழுத்தொரு மொழி, இரண்டிறந்திசைக்கும் தொடர்மொழி என்றும்; நிலைமொழி, வருமொழி என்றும்; தனிமொழி, தொடர்மொழி என்றும் சொற்களையும் தொடர்களையும் இலக்கண நூலார் மொழியியல் நோக்கில் அவற்றின் தன்மைக்கேற்ப வகைப்படுத்திப் பேசுவர். ஆனால், வாழ்வியல் நோக்கில் சொற்களின் பயன்பாட்டுக்கேற்பவும், மன உணர்ச்சிக் கேற்பவும் வள்ளுவப் பெருந்தகை சொற்களை வேறொரு முறையில் வகைப்படுத்திப் பேசுகிறார். பயனில் சொல் (196), பண்பில் சொல் (194), இன்சொல் (91), கடுஞ்சொல் (566), ஒழுக்கம் உடையார் வாய்ச் சொல் (415), செறாஅச் சிறு சொல் (1097) என வள்ளுவர் வேறொரு அடிப்படையில் – வேறொரு நோக்கில் சொற்களை வகைப்படுத்திப் பேசுதல் காண்க. நடைமுறை வாழ்வியல் நோக்கில் சொற்களையும் தொடர்களையும் வகைப் படுத்துவதும் பயனுள்ள ஒரு ஆய்வாக அமையும். சொல்லின் தன்மைக்கேற்ப வள்ளுவர் பயன்படுத்திய குறியீடுகள் இந்த முறையில் நம் சிந்தனையைத் தூண்டுகின்றன.



**சொல் நயம்**

சொல் நயம் பற்றித் தனியே திருவள்ளுவர் பேசவில்லை யாயினும், சில குறள்களில் அவர் சொற்களை ஆண்டுள்ள முறை சொல் நயத்தில் அவருக்கிருந்த ஈடுபாட்டையும் திறனையும் நமக்கு உணர்த்துகிறது எனலாம். "யாரினும்...என்று" (1314) என்ற குறள் மேற்கூறிய கருத்துக்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டு. யாரினும் காதலம் என்ற தொடருக்கு இரு பொருள்கள் உண்டு. 1. நீயும் யானும் (நாம்) நம்மைப்போன்ற காதலர்கள் எல்லாரினும் அன்புடையேம் என்பது ஒரு பொருள். 2. யாம் (யான்) மற்றெல்லாரினும் உன் மீது காதலம் (அன்புடையேன்) என்பது இன்னொரு பொருள். தலைவன் முதலாவது பொருளிலேயே அத்தொடரை ஆளுகிறான் என்று தெரிந்தும் தலைவி இரண்டாவது பொருளில் அத்தொடரைத் தான் உணர்ந்ததாகக் காட்டிப் பொய்க் கோபம் கொண்டு யாரினும் யாரினும் என்று கேட்டு ஊடுகிறாள். இங்கே வள்ளுவர் பயன் படுத்தியுள்ள இரு பொருள் நயம் மொழியியல் நோக்கில் உணர்ந்து சுவைக்கத் தகுந்தது.


**கருத்துப் பரிமாற்றம்**

மேற்கூறிய எல்லாவற்றினும் மேலாகத் திருவள்ளுவப் பெருந்தகை கருத்துப் பரிமாற்றம் பற்றிக் கூறியுள்ள செய்திகள் எல்லா மொழியினரும் உணர்ந்து போற்றத் தக்கனவாம். உணர்தற்கரிய அரிய பொருள்களையும் நீ மற்றவர்க்குச் சொல்லும் போது எளிதில் அவர்கள் விளங்கிக் கொள்ளத்தக்க முறையில் சொல்லுக; ஆனால், மற்றவர் எளிதில் விளங்கிக் கொள்ளக்கூடிய முறையில் சொல்லாவிட்டாலும் நீ அவர்களின் பேச்சில் உள்ள நுண் பொருள்களைத் தவறாமல் கண்டுகொள்ள வேண்டும். இந்தக் கருத்தில் திருவள்ளுவர் வழங்கிய "எண்பொரு ளவாக...அறிவு" (424) என்ற குறள், இங்கே குறிக்கத்தக்கது. கருத்துப் பரிமாற்றத் திறன்



வளரவும் அறிவுத் துறை வறுமை எய்தாமல் வளம் பெறவும் இக்கருத்து என்றும் எங்கும் மிகவும் தேவையான கருத்து.

பிறர் விரும்பும்படி நீ பேசவேண்டும்; ஆனால், பிறர் வேறு வகையில் பேசினாலும்



நீ அவர்கள் பேச்சின் பயனைத் தவறாமல் பெற்றுக்கொள்ள வேண்டும். இந்தக் கருத்தை "வேட்பத்தாம் சொல்லி...கோள்" (946) என்ற குறளின் மூலம் உணர்த்துகிறார் வள்ளுவர். "கேட்டார்ப் பிணிக்கும்...சொல்" (642) என்ற குறளும் கருத்துப் பரிமாற்றத் திறம் பற்றி வள்ளுவர் கொண்டுள்ள எண்ணத்தை நமக்கு உணர்த்துகிறது.

**மொழியின் தலையாய பயன்கள்**

பேசத் தெரிந்த நாள் முதல் மனித வாழ்வில் உணர்தலும் உணர்த்தலும் தொடர்ந்து நடக்கும் தொழில்கள், கற்றும் கேட்டும் உணர்ந்து கொள்ளுதல் மொழியின் பயன்பாடுகளுள் முதன்மையான ஒன்று. இதனைக் கல்வி, கல்லாமை, கேள்வி, அறிவுடைமை முதலான அதிகாரங்களில் பல்வேறு கோணங்களில் வற்புறுத்துகிறார் வள்ளுவர்.

கற்றும் கேட்டும் உணர்ந்தவற்றைப் பிறரும் உணரும் வகையில் உணர்த்துகின்ற திறன் எவ்வளவு இன்றியமையாதது என்பதை, "இணரூழ்த்தும்...உரையாதார்" (650) என்ற குறளில் தெளிவுபடுத்துகிறார் வள்ளுவர்.

கற்றும் கேட்டும் உணர்ந்து கொள்ளுதல், கற்றதைப் பிறர் உணர விரித்துரைத்தல் ஆகிய இரண்டும் மொழியால் நேரடியாக விளையும் தலையாய பயன்களே. இவை இரண்டினும் மேலான இன்னொரு பயனும் உண்டு. தான் பக்குவம் பெற்று விளங்குதலே ஏனைய பயன்களினும் ஒருவனுக்குச் சிறந்த பயன் என்பதை, "ஓதி உணர்ந்தும்...பேதையார் இல்" (834) என்ற குறளில் தெளிவாக எடுத்துக் கூறி நம் உள்ளத்துக்கு வலிமையூட்டி ஒருமுகப்படுத்தி உயர்த்துகிறார் வள்ளுவர்.

✡ ✡ ✡ ✡ ✡

**திருக்குறள் ஒரு வாழ்வியல் நூல்; நல்வாழ்வு வாழ்ந்து நல்லின்பம் துய்ப்பது எப்படி என்பதை எடுத்துக் காட்டுவது. வள்ளுவர் கூறும் வழியில் மாநில மக்கள் ஒழுகுவார்களேயானால், இவ்வுலகு இன்பத்தின் நிலைக் களனாய் இனிது விளங்கும்.**

**— சி. இலக்குவனார்.**

'கோட்டம் முதல் குமரி வரை' மலரிலிருந்து...




# புயல்

தெலுங்கு மூலம் – பாலகும்மி பத்மராஜு
தமிழில் – த.சா. கிரிபிரகாஷ்

வானம் மப்பும் மந்தாரமுமாக இருந்தது. புகைவண்டி தாமதமாக வந்தது. ராவ் அவர்கள் இரண்டாம் வகுப்புப் பெட்டியில் பயணம் செய்தார். அப்பொழுது அவருக்குத் தன் வீட்டின் நினைவு வந்தது. வீட்டுப் பொருட்களும், பழைய நிகழ்வுகளும் நிழலாடின. அவர் படிப்பறை சுத்தமாக இருந்தது. அங்கு, கரும்பலகை தென்பட்டது. அறையின் ஒரு மூலையில் பச்சை நிற தீபம் ஒளிர்ந்தது. அவர் அமர்ந்திருந்த நாற்காலியின் மெத்தை மேடு பள்ளங்களாகக் காட்சி தந்தது. மனைவி சோபாவில் அமர்ந்திருந்ததே தெரியவில்லை. அவருக்கு குழந்தைகள் நால்வர். இருவர் ஆண்கள், இருவர் பெண்கள். குழந்தைகளைப் பற்றிய பெருமிதம் அவருக்கிருந்தது.

ரயில்பெட்டியின் மூன்று இருக்கைகளையும் யாரோ பிடித்துக்கொண்டு படுக்கைகளைப் போட்டுள்ளனர். ராவ் வண்டியில் ஏறியதை,





அங்குள்ள பயணிகள் விரும்ப வில்லை. அதை அவர் யூகித்தார். வேறு பெட்டிக்குச் செல்வது நல்லது என்று நினைத்தார். ஆனால் 'போர்ட்டர்' அவருடைய பெட்டி, படுக்கைகளை நேரே இருக்கையின் மீது வைத்துச் சென்றுவிட்டான். வண்டியும் நகர்ந்தது. பெரியவர் ஒருவர் தன் விரிப்பைச் சுருக்கிக் கொண்டு, ராவுக்குக் கொஞ்சம் இடம் கொடுத்தார். ராவ் அங்கே அமர்ந்து, அக்கம் பக்கம் பார்க்கலானார்.

நால்வரும் வெகுதூரப் பயணிகள் என்று புரிந்து கொண்டார், ராவ். அவர்களுடைய காலணிகள் அனைத்தும் இருக்கைகளின் கீழ்க் கிடந்தன. சட்டைகள், பாண்ட்கள், கோட்டுகள் கொக்கிகளில் தொங்கின. நெகிழ்ச்சியான பைஜாமாக்களை ஆண் பயணிகள் அணிந்திருந்தனர். பொருட்கள் பலவாறு ஒழுங்கின்றிச் சிதறிக் கிடந்தன. ஜன்னல் ஓரத்தில் மெத்தையில் சாய்ந்துகொண்டு பெரியவர்கள் இருவர் இருக்கின்றனர். உள் இருக்கையில் ஓர் இளைஞனும், இளம் பெண்ணும் அமர்ந்திருக்கின்றனர். அவள் அவருடைய மனைவியாக இருக்கவேண்டும். சிகரெட் புகை நாற்றம், ராவின் மூக்கைத் துளைத்துச் சிறிது நேரம் கிறுகிறுக்க வைத்தது.

ரயில் பெட்டியில் புகை பிடிப்பது பற்றி ராவ் கடுமையான கருத்துக் கொண்டிருந்தார். பலவற்றில் அவருக்குத் தீவிரமான எண்ணங்கள் இருந்தன. உண்மையாக அவர் ஒரு வேதாந்தி. அவருக்குப் பிடித்த கொள்கை — கருத்து — ஒன்று உண்டு. வேதாந்தம் என்பது மனித வாழ்க்கையோடும், வாழ்க்கைப் போக்கோடும் மனிதனுக்கும் சமூகத்திற்கும் இடையே ஏற்படும் சிக்கல்களோடும் பின்னிக்கிடக்கும் ஒன்று என்பது அவர் கருத்து. வேதாந்தம் என்பது மனித வாழ்க்கைக்கும் பரந்த அனுபவங்களுக்கும் அப்பாற்பட்ட ஒன்று என்பதும் அவர் கருத்து. அவருடைய வாழ்க்கை ஏற்றத்தாழ்வின்றி சீராக நடைபெற்று வந்தது. அதிருப்தியால் வாழ்க்கை பற்றி நிறைந்த உற்சாகத்தோடும், தூய்மையான உத்வேகத்தோடும் பேசுவார். அவர் ஒரு வேதாந்தியாக மட்டுமில்லாமல் சிறந்த பேச்சாளராகவும் புகழ் பெற்றார். அவர் வேதாந்தத்தைத் தனக்கு ஈடு இணையில்லாமல் வேகத்தோடு விளக்கிக் கொண்டிருப்பார்.

ஒரு சொற்பொழிவை நிகழ்த்துவதற்காகத் தான் இந்தப் பயணத்தை மேற்கொண்டிருந்தார். "ஆஸ்திக மகா ஸமாஜம்" என்ற பெயர் கொண்ட அமைப்பின் அழைப்பின் பேரில் போகிறார். "சாம்யவாதமும் இரசனை இன்பமும்" என்ற பொருள் பற்றி. அவருடைய கருத்து, சாம்யவாதத்தில் இந்த இரசத்தின் ஆத்மா இருக்கிறதா? அல்லது அவ்விரண்டும் நேர் மாறுபாடு கொண்டனவா? அவற்றிற்கிடையே ஒரு பாலம் அமைக்க வேண்டுமா? இதை அறிவதற்கும் அவர் சொற்பொழிவு அடிப்படையாகும்.

ராவ், இளம் தம்பதியர்களைப் பார்த்தார். அந்தப் பெண்ணின் முகம் மிகவும் களைத்திருந்தது. அவளுக்கு உற்சாகம் ஊட்டுவதற்கோ என்னவோ, அந்த இளைஞன் சிரித்துக் கொண்டே அவள் காதில் ஏதோ சொன்னான். அவள், அவன் உத்தியோகம் பார்க்கும் தூரதேசத்திற்கு முதன்முதலாகத் தன் கணவனோடு போகிறாள் போல் இருக்கிறது. ராவுக்கு சமீபத்தில் பேசிய சொற்பொழிவு நினைவுக்கு வந்தது. "சத்வமும் தத்துவமும்". அவருடைய பேச்சின் தலைப்புகளில் வெறும் சொற்கள் மட்டும் இருக்குமேயல்லாமல், பொருளாழம் இருக்காது என்பது அவருடைய நண்பர்களின் கருத்து. அவ்வாறு பேசி அவரைக் கேலி செய்வார்கள். அவரும் அதை மறுக்கவில்லை. ஒலியின் மூலம் பொருள் புலப்படும் என்பது அவர் வாதம். அவருடைய உபந்நியாசங்களில் மிகவும் சிறந்தது 'பிரகிருதியும் பரிஷ்கிருதியும்'.

காற்று வேகமாக வீசியது. சன்னல் கதவுகளை மோதுகிறது. திடீரென்று பெட்டி இருண்டது. ஆனால் இன்னும் இரவு வரவில்லை. ராவின் பக்கத்தில் அமர்ந்திருந்த பெரியவர், தெரிந்தும் தெரியாததுமாக இருக்கும் சிறு வெளிச்சத்தில், துப்பறியும் நாவல் ஒன்றை மிகவும் ஆழ்ந்து படித்துக் கொண்டிருக்கிறார்.



புத்தகத்தை விலக்கிக் கொண்டு ராவிடம், "நேரம் என்ன?'' என்று கேட்டார். ராவ், சிறிது யோசித்தார். அவர் கையில் கடிகாரம் இருந்தாலும் 'மூன்று மணியாகி இருக்கலாம்' என்றார்.

'எப்படி இருட்டி விட்டது' என்றார் வியப்போடு பெரியவர். ராவ், அதற்குப் பதில் கூறாமல், பெரியவரைப் பார்த்தார். அவருக்கும் சமவயது இருக்கும். இந்த வயதில் ஒரு துப்பறியும் நாவல் படித்து இன்புறுவது ராவுக்கு விந்தையாகத் தோன்றியது. எதிரில் அமர்ந்த ஒரு கிழவர் கம்பீரமாக, சுருட்டைப் பிடித்துக் கொண்டு, அதன் சுவையில் இன்பம் துய்த்துக் கொண்டிருந்தார். சில மனிதர்கள் சுபாவம் இயல்புகள் இப்படித்தான் இருக்கும் என்று நினைத்தார். எதிரே அமர்ந்திருந்த பெரியவரின் வயது ராவை விட அதிகம். ஆனால், அவர் முகத்தில் இளமை ஊஞ்சலாடியது. ஆனாலும், அவருடைய முகம், அவரது வயதை மறைக்க முடியவில்லை. கன்னங்களில் சுருக்கங்கள், நெற்றியில் மடிப்புகள் இருந்தன. அவை வயதைப் பறை சாற்றின.

ராவுக்கு, சொற்பொழிவுக்கு ஒரு தலைப்பு கிடைத்துவிட்டது. 'வயது முதிர்ச்சியும் மன விவேகமும்.'

தான் மிகவும் திடகாத்ரம் உடையவர் என்று ராவுக்குக் கர்வம். அவருடைய முகம் இருண்டு சுருண்டிருக்கும். அவரை நோக்கும் போது அவருடைய மனைவி அவரைவிட வயதான வளாகத் தோன்றுவாள். இதைத் தெரியா தவர்கள் அவர் மனைவியைப் பார்த்து அக்காவா அல்லது அம்மாவா என்று கேட்பார்கள் என்று கேலியாகச் சொல்வார். அவருக்கு இருபத்தைந்து வயது நிரம்பிய ஒரு மகன் இருப்பதும், அம்மகனுக்கு இரண்டு குழந்தைகள் இருப்பதும், அவருடைய வக்கீல் தொழிலை அந்த மகன் பார்க்கிறான் என்பதும் ராவைப் பார்க்கும்பொழுது தோன்றாது. அவருடைய வயதில், இந்த அளவு சம்பாத்தியத்தைத் தரும் தொழிலை யாரும் விடமாட்டார்கள். ஆனால், அவர் தம் வாழ்க்கையில் சில நெறிகளைக் கடைப்பிடிக்க வேண்டுமென்று முடிவு செய்தார். , நெறிகளைத் தாண்டாமல் இருப்பதற்கான உறுதியும் அவரிடம் இருந்தது. நீதி, நெறி ஆகியவற்றில் அவருக்கு வெறி கிடையாது. ஆனால், மனிதனுடைய வாழ்க்கையை நெறிப்படுத்துவதற்குச் சில நெறிமுறைகள் இருக்கவேண்டும் என்பது அவருடைய கருத்து. அவர் தம் குழந்தைகளை மாதம் ஒரு முறை சினிமாவுக்கு அனுப்பி வைப்பார். அதற்கு மேல் அதிகம் போக விட மாட்டார். இளைஞர்களது கோரிக்கைகளின் நியாயத்தை அவர் உணர்ந்திருந்தார். அக்கோரிக்கைகள் நிறைவேற்றப்பட வேண்டும் என்றும் கருதினார். அப்பொழுதுதான் இளைஞர்கள் இதயம் பக்குவம் அடையும் என்பது அவர் கருத்து. ஆனால், கோரிக்கைகள் காரணமாக ஆன்மாவைக் கட்டிப் போடக்கூடாது என்பதும் அவர் கருத்து. அவர் வீட்டில் ஒரு ஒழுங்கான நடைமுறையை மிகச் சிரமப்பட்டுக் கொண்டு வந்தார். இந்த நெறிமுறை அவருடைய உடலுக்கும் உள்ளத்திற்கும் அமைதியையும் ஆனந்தத்தையும் கொடுத்தன.

அனைத்து ஜன்னல் கதவுகளும் அடைக்கப்பட்டன. வெளியே காற்றின் இரைச்சல், ஓலம், மழைத் தூறல்கள். கதவு இடுக்குகளின் வழியாக, மழைத் துளிகள் உள்ளே நுழைந்தன. தொட்ட இடமெல்லாம் சில்லிட்டது. அந்த இளைஞன், அந்த இளம் பெண்ணை நெருங்க முயன்றான். அந்தப் பெண் அக்கம் பக்கம் பார்த்துவிட்டு, சற்று விலகினாள்.

காற்றும் மழையும் கடுமையாக இருக்கிறது என்றான் இளைஞன். ராவின் பக்கத்தில் அமர்ந்திருந்தவர், முகத்தை நிமிர்த்திக் கொண்டு, ஏதோ சொல்ல வந்தவர், எதுவும் பேசாது, மறுபடியும் துப்பறியும் புதினத்தைப் படிக்கத் தொடங்கினார். இளைஞன் சிகரெட்டைப் பற்ற வைத்தான். அவள் முகத்தைச் சுளித்துக் கொண்டு, சிறிது நகர்ந்து சென்றாள். அவன் புன்னகையோடு புகைத்துக் கொண்டிருந்தான். அப்பெண்ணின் கூந்தல் இழைகள் நெற்றியிலும்,



கன்னத்திலும் அசைந்தாடின. தன்னுடைய குமாரிகள் எப்படித் தலை வார வேண்டும் என்பதை ராவ்தான் முடிவு செய்வார். அது அவர் நினைவுக்கு வந்தது. அவர்களுடைய அன்றாட நடைமுறைகள், நோன்புகள், நட்பு, ஆடைகள் அணியும் முறை ஆகிய எல்லாமே ராவ் கருத்துப்படி இருந்தால்தான் அவை அவர்களுடைய அழகுக்கும் மதிப்புக்கும் உகந்தவாறு இருக்கும் என்பது ராவ் எண்ணம்.

எதிரில் இருந்த பெரியவர், சுருட்டி வைத்திருந்த மெத்தையிலிருந்து சாம்பல் நிறச் சட்டையை எடுத்து அணிந்தார். அந்தச் சட்டையிலும், கோடிட்ட பைஜாமாவிலும் இருந்த அவர், விசித்திரமாகக் காட்சி தந்தார். தன் குவளையிலிருந்த காஃபியை எடுத்துக் குடிக்கத், தொடங்கினார். அப்பொழுது, ராவுக்கு 'ஒவல்டின்' நிறைந்த குவளை நினைவுக்கு வந்தது. அதை எடுத்து 'ஒவல்டின்னை' மிக சுவாரஸ்யமாகக் குடிக்கத் தொடங்கினார். ராவுக்கு ஒவல்டின் என்றால் மிகவும் பிரியம். விருப்பம். ஆனால, அதிகமாகக் குடித்து அடிமையாகவில்லை. அந்த இனிமையான சுவை நீரை ஒரு நாளைக்கு இரண்டு தரம் குடிப்பார்.

காற்று மிகவும் பயங்கரமாக வீசியது. பெரிய மழைத்துளிகள் பெட்டியில் மோதின. அந்தச் சத்தத்தில் ரயில் சத்தம் அடங்கிவிட்டது. ரயில் ஓடிக் கொண்டிருப்பதை, அசைவு மூலம்தான் தெரிய முடிந்தது. 'புயல் வரும் போலிருக்கிறதே' என்றான், இளைஞன் தன் மனைவியிடம். அவள் பதில் எதுவும் கூறாமல், கம்பளிப் போர்வையை எடுத்துப் போர்த்திக் கொண்டாள். அவள் முகத்தில் ஏதோ கவலைக் குறிகள் தென்பட்டன. ராவ், உள்ளத்தில் புயல் பற்றிய திகில் எழுந்தது.

ரயில் பெட்டியின் கதவு திறந்து கொண்டது. காற்றும் மழையும் பெட்டிக்குள் ஊடுருவின. கிழிந்த, நனைந்த உடைகளோடு ஒரு பெண் வண்டியில் நுழைந்தாள். உள்ளே இருப்பவர்கள் எவ்வளவோ தடுத்தும், இலட்சியம் செய்யாமல் ஈரத் துணிகளோடு ஒரு மூலையில் நின்றாள். முதியவர் கோபத்தோடு அவளை நோக்கி, "இது தூங்கும் பெட்டி. ரிசர்வ் செய்யப்பட்டது" என்று கூறினார்.

"தாத்தா... தாத்தா... இந்தப் பிச்சைக்காரிக்கு, நிற்பதற்குக் கொஞ்சம் இடம் கொடுங்கள்.

இரக்கம் மிகுந்த ஐயாக்களே! குழந்தைகளைப் பெற்றவர்களே! பிச்சைக் காரிக்கு காலணா கொடுங்கள் ஐயா!

பசி வயிற்றை எரிக்குது! பெரியவர்களே! பணம் படைத்தவர்களே! ஏழையை இப்படிச் சாக விடாதீங்க, ஐயா!".

ராவ் அவளைப் பார்த்தார். அவள் கண்களில் ஓர் ஏளனப் பார்வை, தளுக்கும் மினுக்கும் இருந்தன. அத்தோற்றம் ராவ் உள்ளத்தில் கோபக் கனலை மூட்டியது. அவளுக்குச் சுமார் முப்பது வயதிருக்கும். வயிறு நிறையச் சாப்பிட்டவள் என்று சொல்ல முடியாவிட்டாலும், பசி எடுத்தவள் போலவும் இல்லை. திக்கற்றவள் என்றாலும் அவளிடம் உறுதி இருந்தது. பிச்சை எடுப்பது ராவுக்குத் துளியும் பிடிக்காது. வெறுப்பு அதிகம். ஏழைகள், வறுமையில் வாடுபவர்கள் மீது ராவுக்கு இரக்கம் உண்டு. ஆனால், பிச்சை எடுப்பது அவருக்கு வெறுப்பாக இருக்கும். இவர் அருகில் வந்து பிச்சை கேட்டாள். கொஞ்சமும் இரக்கம் இல்லாமல் வெறுப்பாக, 'போ' என்று இரைந்தார். அவள் முகத்தைச் சுழித்துக் கொண்டு, அடுத்த பக்கம் போனாள். எதிரில் அமர்ந்திருந்த முதியவர் கால்களைத் தொட்டுக் கெஞ்சினாள். அவர் கால்களைப் பின்னிழுத்துக் கொண்டு, அசட்டுச் சிரிப்புச் சிரித்தார். 'போ! போ!' என்றார்.

"அப்படிச் சொல்லாதீங்க பெரியவரே! அவரைப் போல உங்களுக்குக் கல் நெஞ்ச மில்லை. அவருக்குத் துளி கூட இரக்கமில்லை. பசியோடு செத்துக் கொண்டிருக்கின்ற என்னைப் 'போ' என்று சொல்லிவிட்டார்".

நான் சொன்ன 'போ' என்ற சொல்லைத் திரும்பச் சொல்வதற்கு எவ்வளவு திமிர், இவளுக்கு இருக்கவேண்டும் என்று நினைத்தார், ராவ். ஆனால், எதுவும் சொல்லத்



தோன்றவில்லை, விருப்பம் இல்லாவிட்டாலும் அவளைக் கண் கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தார். பெரியவர் இனம் புரியாத அவஸ்தைக்கு ஆளானார். அவளுக்குக் காசு கொடுத்து அனுப்பினால் மற்றவர்கள் விரும்ப மாட்டார்களோ என்ற சந்தேகம். கொடுக்காவிட்டால் அந்தப் பிச்சைக்காரி அவதூறு செய்வாள் என்ற பயம்! இவற்றில் எது நல்லது என்று அவருக்குப் புரியவில்லை. கடைசியில் கடுமையாக 'போ' என்று சொல்லிவிட்டார். பிச்சைக்காரி கத்தத் தொடங்கினாள். "இந்தப் பெட்டியிலே பணக்காரங்க இருக்கிறாங்க. பசியோடே என்னைச் சாக விட மாட்டாங்கன்னு ஆசையோடு வந்தேன். கடவுளே! இன்னைக்கு எனக்கு சாப்பாட்டுக்குக் காசு கிடைக்கும் என்று நினைச்சேன். மோசம் போயிட்டேன் கடவுளே! இவங்களை விட மூன்றாம் வகுப்புப் பெட்டியிலே இருக்கிற ஏழைங்களுக்கு இரக்கம் இருக்கும். அவங்களுக்கு என் கஷ்டம் புரியும். பணக்காரத் துரைகள் எல்லாரும் கல்நெஞ்சக் காரங்கன்னு தெரியல்லையா? அந்தப் பக்கம் காத்தும் மழையும்! ரயில் ஓடிக் கொண்டிருக்கு. இரக்கம் உள்ளவங்ககிட்ட இங்கிருந்து எப்படிப் போறது கடவுளே! இங்கேயிருந்து எப்படிப் போறது கடவுளே!"

பிச்சைக்காரி எல்லாருடைய பார்வையையும் ஈர்த்தாள். ராவ் அருகில் இருந்த பெரியவர், துப்பறியும் நாவலை விட்டு விட்டு, அவளை விசித்திரமாகப் பார்த்தார். "உன் ஊர் எது?" என்று ஒரு தமிழன் தெலுங்கில் விசாரித்தான். "எங்கள மாதிரி இருக்கிற ஏழைகளுக்கு ஊரு ஏது? கிராமம் ஏது? உங்களை மாதிரிப் பெரியவங்களுக்கு ஊரும் இருக்கும், பேரும் இருக்கும், பெரிய பங்களாவும் இருக்கும். வாசலிலே 'வாட்ச்மேன்' உட்கார்ந்து, பிச்சைக்காரன்களை விரட்டிக்கிட்டு இருப்பாரு. என்னைப் போல ஏழைக்கு ஊரு ஏது? கிராமம் ஏது?", 'இவளுக்கு நாக்கு நீளம்' என்கிறார் அவர், ராவைப் பார்த்து.

"இங்கிலீசிலே எதுக்கய்யா திட்டறே! எனக்கு அந்த மொழி கிழி தெரியாது. ஒன்னும் தெரியாத முண்டை நானு! ஏழை!"

வெளியில் இருட்டி விட்டது. காற்று பலமாக வீசியது. ரயில் நீர்ப்பாம்பு போல ஊர்ந்து சென்றது. ராவ் இறங்க வேண்டிய நிலையம் நெருங்கி விட்டது. ஆஸ்திக சமாஜ நண்பர்கள் யாராவது வராமல் இருக்க மாட்டார்களா என்று ராவ் எண்ணினார். அவர் மனம் தடுமாறியது. நானும் சாமான்களோடு ரயிலிலிருந்து இறங்கவேண்டும். அதுதான் இப்போதிருக்கும் பிரச்சனை. உடன் பயணிகள் உதவி செய்வார்கள். காற்று சீறியெழும் கடல் போல் இரைந்து கொண்டிருந்தது. மரங்கள் விழும் அலங்கோல ஓசை காதில் விழுந்தது. அந்தக் காற்றுக்கும், மழைக்கும் முன்னர் ஊர்ந்து செல்லும் வண்டிக்காரனான மனித ஆற்றல் பயனற்றது போலவும், மிகவும் அற்பமான தாகவும் தோன்றியது. பெட்டி வசதியாகத் தானிருக்கிறது. ஆனால் அதிலிருந்து இறங்க வேண்டும்.

பிச்சைக்காரி இளம் தம்பதியருக்கு நடுவில் எதிரில் உட்கார்ந்தாள். சிறிது நேரம் கழித்துத் திரும்பவும் தொடங்கினாள்.


"அப்பாடா! என்னுடைய சின்னம்மா இங்கிருக்கிறாங்க. சின்னையாவும் இங்கயே இருக்கிறாங்களே! இனி என்ன? பாக்கவேயில்லை, பைத்தியக்காரி... சின்னம்மா! சின்னையாவிடம் சொல்லி, காசு கொடுக்கச் சொல்லம்மா! எதுக்குத்தாயி! முகத்தைத் திருப்பிக்கிறே! என்ன சின்னய்யாவுக்கும் — சின்னம்மாவுக்கும் சின்னச் சண்டை ஏதும் வந்துச்சா! சின்னையா எப்பப் பார்த்தாலும் சிகரெட் பிடிக்கிறாரே சின்னம்மா! குடிக்கவிடக் கூடாது. ஆகா! சின்னத்தாய்க்குச் சிரிப்பு வருது."

அந்த இளம் பெண்ணால் சிரிக்காமல் இருக்க முடியவில்லை. இளைஞனும் வயிறு குலுங்கச் சிரித்தான். சொன்னான் அவன்:

"எங்களோட நீயும் வரக்கூடாதா? வேலை கீலை பாக்கலாம் — சாப்பாடும் துணியும் கொடுத்திடறோம்."



"ஏதாவது அவளுக்குக் கொடுத்து அனுப்பக் கூடாதா?" இளம் பெண் கேட்டாள் கணவனிடம்.



"எனக்குத் தெரியும். சின்னம்மா இரக்கம் உள்ளவங்க. தாத்தா எனக்கு ஒரணா குறையாமல் கொடுப்பாரு. நான் ஒரு கிறுக்கு. அந்த ஐயாவுக்கு கோபம் வர்றாப்பலே நடந்திருக்கக்கூடாது. தாத்தாவை மாதிரி நல்லவங்க, எங்கேயும் கிடையாது. தாத்தா இரக்கமுள்ள ராஜா."

ராவைத் தவிர மற்றவர்கள் ஏதோ கொடுத்தனர். அவள் பேச்சு எல்லோருக்கும் வேடிக்கையாக இருந்தது. ராவ் நெஞ்சம் எங்கோ இருந்தது. அவர் காற்றும் மழையும் பற்றியும், இறங்கிச் செல்வது பற்றியும் சிந்தித்துக் கொண்டிருக்கிறார்.

ரயில் நின்றது. ராவுக்கு ரயில் நின்றதே தெரியவில்லை. அப்பொழுது காற்றும் மழையும் தீவிரம் அடைந்தது. அவர் குடையும் கையுமாக



எழுந்தார். கதவைத் திறக்க முடியாத அளவுக்கு காற்று அவரைப் பின்னே தள்ளியது. அவர் கீழே விழுந்துவிட்டார். அதைப் பார்த்த அந்தப் பிச்சைக்காரி அவருடைய சாமான்களைக் கீழே இறக்குவதாகச் சொன்னாள். அந்த நேரத்தில் ராவ் நல்லது கெட்டதை யோசிக்க நேரமில்லை. அவள் உதவியை மறுக்க இயலவில்லை. ஆனால், சொல்ல முடியாத ஏதோ ஒரு துன்பம் அவர் உள்ளத்தை உறுத்தியது. இறங்கியதும் நேராக 'ஸ்டேஷனுக்குள்' ஓடினார். பிச்சைக்காரி அவருடைய பெட்டிப் படுக்கைகளைத் தூக்க முடியாமல் தூக்கிக் கொண்டு மெதுவாக நடந்தாள. சாமான்களைத் தங்கும் அறையில் வைத்தாள. எங்கும் விளக்கில்லை. ராவ் ஏதோ பணம் கொடுக்கப் போனார். ஆனால், அவள் ஏதும் கூறாமல் திடீரென மாயமாகிவிட்டாள்.

சலனம் ஏதுமின்றி ராவ் தங்கும் அறையில் உட்கார்ந்து கொண்டார். குளிரினால் கால்கள் நடுங்கின. ஆடைகள் நனைந்துவிட்டன. பெட்டியைத் திறப்பதற்கு அங்குமிங்கும் தடவினார். 'டார்ச் லைட்' கைக்குப் பட்டது. மகிழ்ச்சி அடைந்தார். அவருக்கு அப்படி விளக்கு இருந்ததே நினைவில்லை. ஈர ஆடைகளைக் கழற்றி விட்டு, புதிய ஆடைகளை அணிந்து கொண்டார். கம்பளிச் சட்டையையும் அணிந்து கொண்டார். 'மப்ளர்' சுற்றிக் கொண்டார். பெட்டியைப் பூட்டவும் மறந்து நாற்காலியில் அமர்ந்தார். தன் நிலையைப் பற்றிச் சிந்திப்பதற்கும் கூட அவருக்குப் பிடிக்கவில்லை. புகைவண்டி நகர்ந்தது. யாரேனும் வெளியே இருக்கமாட்டார்களா என்று நினைத்து வெளியே வந்தார்.

யாரோ இருவர் நடைமேடையைத் தாண்டினார்கள். ராவ், அவர்களை உரக்கக் கூவி அழைத்தார். இருவரும் நின்றனர். ஒருவர் ஸ்டேஷன் மாஸ்டர். இன்னொருவர் சேவகர்.

"நான் ஊருக்குள்ளே போகவேண்டும்" என்றார் ராவ்.

"மிகவும் கஷ்டம். சாலையில் ஒவ்வொரு அங்குலத்திற்கும் மரங்கள் விழுந்து கிடக்குது. தொலைபேசித் தந்திகள் அறுந்து கிடக்குது. செய்தித் தொடர்பே இல்லை. காற்றும் மழையும் அடுத்த முப்பத்தாறு மணி நேரம் இருக்கும். ரயில் வண்டிகள் ஓடாது என்று எங்களுக்குத் தகவல் வந்திருக்கிறது. ஆனால், ஸ்டேஷனில் வேறு யாருமில்லையே. நான் என்ன செய்வேன்? எப்படியோ ஸ்டேஷனில் நீங்கள் காலத்தை ஓட்டவேண்டும்".

ஸ்டேஷன் மாஸ்டர் போய்விட்டார். ராவ் திரும்பவும் தங்கும் அறைக்குச் சென்றுவிட்டார். 'ஈசி சேரில்' அமர்ந்தார். அறையின் கதவைத் தாளிட்டுக் கொண்டால், காற்றும் மழையும் வராது என்று அவர் நினைக்கவில்லை. ஜன்னல் கதவுகள் இரண்டும் உடைந்த நிலையில் இருந்தன. சில ஓடுகளும் பறந்துவிட்டன. ஏதோ கெட்ட சக்திகள் பகவான் படைப்புக்களை அழிக்க வந்தது என்று நினைத்தார். இத்தகைய சூழ்நிலைகளில் தெம்பு தரும் வேதாந்தம் எதுவும் ராவுக்குத் தோன்றவில்லை. நடைமுறை நியமங்கள், வாழ்க்கைக் குறிக்கோள்கள எல்லாம் அழிந்து போனதை – இப்பொழுது தான் வாழ்க்கையில் முதன் முதலாகத் தெரிந்து கொண்டார். இயற்கை வெகுண்டெழுந்து எல்லாவற்றையும் நாசமாக்கினால் மனிதன் எவ்வாறு தன்னைக் காத்துக் கொள்ள முடியும்? எப்பொழுதுமில்லாத பயம் ராவுக்கு ஏற்பட்டது. அந்தத் துன்பம் மிகவும் கடுமையாக இருக்கிறது, அவருக்கு. தன்னைச் சுற்றி எங்கும் மனித இதயமே இல்லை என்று நினைத்தார். காற்றும் மழையும் மேலும் உக்கிரமானது. அவர் உள்ளம் ஒரு கெட்ட கனவில் சிக்குண்டது போல் இருந்தது. அந்த அறையில் ஏதோ வேறொரு பொருள் இருப்பதாக ராவுக்குத் தெரிந்தது. திறந்த கதவு வழியாக யாரோ உள்ளே நுழைவது தெரிந்தது. 'டார்ச்' அடித்துப் பார்த்தார். பிச்சைக்காரி நடுக்கத்தோடு உள்ளே நுழைந்தாள். ஈர உடையுடன் – நீர் சொட்ட – மூலையில் நின்றாள். அவள் நனைந்த கூந்தல் முகத்திலும் கன்னத்திலும் படிந்திருந்தது. கூந்தலிலிருந்தும் நீர் வடிந்தது.



''பாபுகாரு! கதவைச் சாத்தவில்லையே! கொஞ்சம் வெப்பமாயிருக்குமே!" குரலைப் பெரிதாக்கிக் கொண்டு கேட்டாள். அவர் இயந்திரம் போல் எழுந்து கதவை மூடுவதற்கு முயன்றார். முடியவில்லை. அவள் உதவினாள். அவர் கதவை மூடித் தாளிட்டார். ஆனால், காற்று மிகுந்து வேகமாக வீசியது. தாழ்ப்பாள் கழன்று கீழே விழுந்துவிட்டது. இருவரும் உள்ளேயிருந்த மரச் சாமான்கள், மேசை, நாற்காலி ஆகியவற்றை அண்டை கொடுத்துக் கதவை மூடினர். கதவை மூடவேண்டும் என்ற எண்ணம் எப்படித் தோன்றாது இருந்தது என்று ராவ் ஆச்சரியப்பட்டார். இப்பொழுது கொஞ்சம் வெப்பமாக இருந்தது. பயமும் குறைந்துவிட்டது. எங்கிருந்தோ ஒரு பேரிரைச்சல் காதில் விழுந்தது. ஏதோ விழுந்துவிட்டது. "ஸ்டேஷன் உள்ளேயே ஏதோ விழுந்துவிட்டதோ என்னவோ? பாபுகாரு, என்ன காற்றும் மழையுமிங்கு! நான் பிறந்ததிலிருந்து இப்படிப்பட்ட காற்று மழையைப் பார்த்ததில்லை" என்கிறாள் பிச்சைக்காரி. அவள் குரலில் எந்தவித சலனமும் இல்லை. இவ்வளவு அமைதியாக அவள் எப்படிப் பேசுகிறாள் என்று ராவ் வியந்தார்.

அவள் மீது ''டார்ச்'' அடித்தார். ஒரு மூலையில் கூனிக் குறுகிக் காலை மடக்கிக் கொண்டு அமர்ந்திருந்தாள். ராவ் பெட்டியைத் திறந்து, ஒரு வேட்டியை எடுத்து அவளிடம் வீசி, 'நனைந்த ஆடைகளை' நீக்கிவிட்டு இதைக் கட்டிக் கொள் என்கிறார். அவர் சொன்னது அவள் காதில் விழவில்லை. ஆனால், அவள் காய்ந்த ஆடைகளைக் கட்டிக் கொண்டாள், நன்றியோடு. அந்த மூலையில் ஈரமில்லாத இடத்தில் அமர்ந்தாள்.

ராவுக்குப் பசி நினைவுக்கு வந்தது. பெட்டியிலிருந்து ஒரு பிஸ்கெட் பாக்கெட் எடுத்தார். ஒவ்வொன்றாகச் சாப்பிடத் தொடங்கினார். மூலையில் உள்ளவள் முகத்தைப் பார்த்தார். அவளுக்கும் பசி இருக்கும் என்று எண்ணினார்.

"பிஸ்கெட் சாப்பிடுகிறாயா?" என்றார்.

"என்ன சொன்னீங்க!" என்றாள் அவள் உரத்த குரலில். காற்றின் ஒலியில் ஒருவர் பேச்சு, இன்னொருவருக்குக் கேட்கவில்லை. அவர் அவள் அருகில் வந்து சில பிஸ்கெட்டுகள் கொடுத்தார். ''இவைதான் இருக்கிறது சாப்பிடறதுக்கு," என்று ஏதோ தவறு செய்த பாணியில் கூறினார். "ஒன்றுமே இல்லாததுக்கு, இது நல்லது இல்லையா?'' தன்னுடைய இடத்திற்குத் திரும்பிப் போய், பெட்டியில் அமர்ந்தார். நாற்காலிகளை அண்டைக் கொடுத்திருக்கிறார். அவள் அறையில் இருப்பதால் அவருக்குத் தைரியம். யாருமே இல்லாத நிலையில், அவள் இருப்பது நல்லது. அவள் எதைப் பற்றியும் கவலைப்பட மாட்டாள். காற்றும் மழையும் அவளை எதுவும் செய்யாது. வாழ்க்கையில் கஷ்ட நஷ்டங்கள் அவளுக்கு சகஜம். அதனால் எந்த நிலையையும், அவள் அஞ்சாமல் சமாளிப்பாள். ராவ் கடிகாரத்தைப் பார்த்தார். அப்பொழுதுதான் மணி 9 ஆகியிருந்தது. ஆனாலும் ரயிலிலிருந்து இறங்கி பல யுகங்கள் கழிந்தன போல் தோன்றியது. அவர் மற்ற பயணிகளோடு அடுத்த நிலையம் வரையில் பயணம் செய்திருந்தால் நன்றாக இருந்திருக்கும். தான் இறங்குவது ஒரு சிறு நிலையம் என்றும், காற்றும் மழையும் மேலும் வெகுண்டு வீசும் என்றும் அப்பொழுது அவருக்குத் தோன்றவில்லை. நிலையத்திலிருந்து ஊர் சுமார் 2 மைல் இருக்கும். ஊருக்கு, அடுத்த நிலையத்திலிருந்து எளிதாகச் சேர்ந்திருக்கலாம். எல்லாவற்றையும் நன்றாகச் சிந்திக்கும் அவர் உள்ளம், காற்றின் வேகத்தைச் சிந்தித்துக் கொண்டிருந்தது. காற்று மணிக்குப் பெரும்பாலும் எண்பது அல்லது நூறு மைல் வேகத்தில் வீசலாம். அது பெரும் பயத்தை உண்டாக்கியது. இந்த அறையும் விழுந்து விடுமோ, வெளியில் போகும் வழியும் – மேசை நாற்காலிகளால் மூடி இருக்கிறது. பிச்சைக்காரி உட்கார்ந்திருக்கும் இடத்திற்கு அவர் திகிலோடு ஓடினார். ''இந்த வீடு விழுந்துவிடாது இல்லையா?" என்றார் அவர்.

“யாரால் சொல்ல முடியும்? பார்ப்பதற்கு வீடு பலமாகத்தான் இருக்கிறது. காற்று வேகமாக வீசினால் எது தாங்க முடியும்?”

அவள் பேச்சில் தைரியம் உண்டாக்கும் எதுவும் இல்லாவிட்டாலும், ஏதோ ஒரு நெருக்கம் இருந்தது. அவர் மறுபடியும் பெட்டியின் மீது அமர்ந்தார். அவளும் அவர் இடத்திற்கு அருகில் உட்கார்ந்தாள். “அங்கு உட்கார்ந்தால் ஒருவர் பேச்சு இன்னொருவருக்குக் கேட்காது” என்றாள்.

“காற்றும் மழையும் இவ்வளவு கடுமையாகும் என்று நான் நினைக்கவில்லை” என்றார்.

“பாபுகாரு! எதற்கு அப்படிப் பயப்படறீங்க.” ஒருவர் இருப்பதைவிட இருவர் இருக்கிறோ மில்லையா? டிக்கெட் கலெக்டர், மிகவும் பொல்லாதவன். ரயில் போய்க்கிட்டு இருக்கும்போது என்னை இறக்கி விட்டுட்டான். என்ன செய்வேன். இங்கே இருந்துட்டேன். ஆனாலும் எனக்கென்ன கவலை? பாபுகாரு கட்டிக் கொள்ள ஒரு காய்ந்த துணி போட்டீங்க! என்னமோ, பசிக்குக் கொஞ்சம் உணவு போட்டீங்க! வர்ற டேஷனில் இந்த சுகங்கூட இருக்கும்னு எப்படி நினைக்க முடியும்? இருக்கிறதெ வைச்சுட்டு சுகமா இருக்கணும் பாபுகாரு. அதில்லை இதில்லை என்று சிரமப்படறதுலே என்ன பயன்?”

அவள் குரல் இப்படி ஓங்கி ஒலிக்கும்பொழுது அவர் உள்ளம் அமைதி அடைந்தது. அவள் உடலைப் பார்க்கும்பொழுது அவருக்கு அசிங்கமாகத் தோன்றியது. அவளுக்கும் அவருக்கும் அருவருப்பாக எவ்வளவோ வேறுபாடு. ஆனாலும் அந்தக் கும்மிருட்டில் தனக்குத் துணையாக அவள் இருப்பது, அவர் உள்ளத்தில் நன்றியுணர் வூட்டியது.

“உனக்கு யாரும் உறவினர் இல்லையா?” என்று கேட்டார், ராவ். இவ்வளவு அனுசரணையாகக் கேட்டதற்கு, சிறிது துணுக்குற்றார். தான் வண்டியில் அவளுக்கு ஒரு பைசாக் கூடக் கொடுக்காதது, அவளுக்கு ஏதேனும் கோபமிருக்குமோ? என்று அவர் சந்தேகித்தார். ஆனால், அவள் பேச்சிலோ, செயலிலோ எத்தகைய கோபமும் தென்பட வில்லை. ஆனால், உரத்த குரலில் பேசுவதற்குத் தேவை யில்லாமல் அவள் அருகில் வந்தார்.



“உறவினர்கள் எல்லோரும் இருக்கிறாங்க? என்ன பயன் பாபுகாரு. எங்கப்பன் குடிக்கிறான். அவனே எங்க ஆத்தாவைக் கொன்னுட்டான். எனக்குக் கல்யாணம் ஆவலே. ஆகட்டும் பாபுகாரு, ஒரு பொல்லாப் பயலோட சேர்ந்திருந்தேன். எனக்கு இரண்டு பசங்க. அவனுக்குச் சூதாட்டமும், குடிப்பழக்கமும் வந்துட்டுது. ஒவ்வொரு நாளும் ஆயிரக் கணக்கா ஜயிப்பான். தோத்துப் போவான்... என்ன செய்வேன் பாபுகாரு. வீட்டிலே சாப்பாடு கீப்பாடு என்னோட சம்பாத்தியம்தான். பசங்க இன்னும் சின்னவங்க. பிச்சை எடுக்கமுடியாது. என் புருஷனுக்குக் குடிக்க நாலணா கொடுப்பேன், ஒரு நாளைக்கு. அவனுக்கு எம் மேலே ரொம்பப் பயம். குடிக்கலைன்னா, என் முன்னாலே நிக்க முடியாது. அதுக்குத்தான் குடிக்கிறான். எல்லோருக்கும் குடிக்கிறது அப்படித் தாங்க பழக்கமாகுது.”


“நீ எவ்வளவு சம்பாதிப்பே?” என்று அவர் கேட்டார்.

“சில நாளைக்கு அஞ்சு ரூபாய் வரைக்கும் கிடைக்கும். சில நாளைக்கு காலணா கூடக் கிடைக்காது. ஆனாலும் பாபுகாரு, நான் கேட்டு இல்லைன்னு சொன்னதில்லே, ஒங்களைத் தவிர. கொஞ்சம் நேரம் சிரிச்சுப் பேசினேன்னா கொடுத்துடுவாங்க.”

தன்னையறியாமலேயே ராவ் ‘டார்ச்’ லைட்டை அவள் மீது அடித்தார். அவள் புன்னகைத்தாள். யாராக இருந்தாலும் அவள் சமாளித்துவிடுவாள். ஆனால், அவள் உள்ளத்தில் விருப்பு வெறுப்புக்கள் இல்லை என்று எண்ணினார். நிகழ்காலத்தைப் பற்றித்தான் அவள் சிந்தனை. கடந்த காலம்



எதிர்காலம் பற்றி அவள் கவலைப்படுவதில்லை. அவள் நடத்தையை விளக்கும் இலக்கணங்கள் ஏதும் இல்லை. அந்த இலக்கணங்களுக்கு விதிவிலக்கும் இல்லை. ஒவ்வொரு நாளும் தர்மம், அதர்மம் பற்றிய



சிந்தனை அவளுக்கு இல்லை. நாகரிகமான மனிதர்களுக்குரிய உள்ளப் பக்குவமும் இல்லை. தான் முன்பின் எப்பொழுதும் அறியாத ஆண்களுடன் இன்பமாக உடலுறவு கொள்வாள். ராவ் அவள் புன்னகையில் லயித்துவிட்டார்.

''என்னங்க, பாபுகாரு, என்னையே பார்த்துக்கிட்டே இருக்கீங்க!" என்றாள், அவள். ''முன்னாடி இருந்த நிறம் என்கிட்டே இல்லைங்க!"

ராவ் வெட்கத்தோடு தலைகுனிந்தார். கெட்ட எண்ணத்தோடு அவள் பேசுவது அவருக்கு வெறுப்பைத் தந்தது.

"உன்னை நான் பார்க்கவில்லை" என்றார் ஆணித்தரமாக.

"டார்ச் லைட்டை அணைக்க மறந்துட்டேன்"

திடீரென்று பேரிரைச்சல் கேட்டது. அறையின் கதவுகள் சட்டென்று திறந்து கொண்டன. கதவுக்கு அண்டை கொடுத்திருந்த மரக்கட்டைகள் சிதறி விழுந்தன. ஒரு கதவு முழுவதுமாக கீழே விழுந்தது; நாற்காலியில் மோதி விழுந்தது. ராவுக்குத் தூக்கி வாரிப் போட்டது. ஓடிச் சென்று சக்தியையெல்லாம் ஒன்று திரட்டி, ஓடிக் குதித்து, அந்தப் பிச்சைக்காரியைக் கெட்டியாக அணைத்துக் கொண்டார். ஆனால், உடனே உணர்ந்து கூச்சப்பட்டார். நாணம் அடைந்தார். ஆனால், அவள் அவர் கையைப் பற்றிக் கொண்டு ஒரு மூலைக்கு இழுத்துச் சென்றாள். உட்காரச் செய்தாள். தானும் அவர் அருகில் உட்கார்ந்து, கைகளால் சுற்றி வளைத்தாள். அவளுக்கு அவ்வாறு செய்ததில் ஒரு சலனமும் இல்லை, ஆனால், ராவுக்கு ஒரு பிரளயமே தோன்றியது



போல இருந்தது. ஆனால், அந்த ஆலிங்கன வெப்பம், வெதுவெதுப்பு அவர் உயிருக்குத் தேவையாக இருந்தது. அவர் தடை செய்யவில்லை.

"சரியாக உட்கார்ந்து என்னை அணைத்துக் கொள்ளுங்கள். குளிருக்கு அடக்கமாக இருக்கும். பாவம்! பாபுகாரு நடுங்குகிறீங்க!"

அந்தப் பேச்சுக்கள் ராவுக்கு அநாகரிகமாகத் தோன்றின. அவள் மேலும் நகர்ந்து அவர் உடலின் மீது சாய்ந்து விழுந்தாள். அவர் முழங்கால் மீது தன் மார்புகளை உராய்ந்தாள். இவர் முழங்காலைச் சுருக்கிக் கொண்டு நாணத்தோடு சிந்தனையில் ஆழ்ந்தார். அவள் பேச்சைத் தொடர்ந்தாள்.

"இந்த மூலையில் பயமில்லீங்க! பாபுகாருக்கு வீட்டிலே அழகான பெண்கள் இருப்பாங்க. பாபுகாரு அவங்களை நெனச்சிட்டிருக் காங்களோ என்னவோ? எங்க குடிசை இன்னேரம் பறந்து போயிருக்கும். எங்க குழந்தைகளும் என்ன ஆனாங்களோ? அக்கம் பக்கம் இருக்கிறவங்க பாத்துக்கிருவாங்க. என் புருஷன் ஒரு பைத்தியம். எந்த வேலைக்கும் லாயக்கில்லாதவன். நல்லா குடிச்சு வந்திருந்தா குடிசை பறக்கிறது அவனுக்கு எப்படித் தெரியும்? பசங்க எப்படியிருக்காங்களோ?"

ஒரு மனித இதயத்திலிருந்து வெடித்து வந்த இந்தக் கருத்துக்கள், அவர் உள்ளத்தினைத் தொட்டு வெடித்துவிடும் போலிருந்தது. பெரிய வேதனையோடு, அந்தப் பிச்சைக்காரியை இறுக்கமாக அணைத்துக் கொண்டார். அவருடைய வேதனையைத்தான் புரிந்து கொண்டவள் போல பிச்சைக்காரி அவர் முழங்காலைத் தட்டினாள். படிப்படியாக அவர் மனது சிந்திப்பதைத் துறந்தது. காற்றின் பேரோசை மனதைச் சிதறடித்தது. அவர் கால்கள் மீதும், மார்பின் மீதும் புரண்டு கிடந்த மனித உடல் ஒன்றின் வெப்பம்தான் அவருக்குத் தெரிந்தது.

நேரம் மிக மெதுவாகவே நகர்கிறது. நேரம் போவது தெரியவில்லை. காற்றும் மழையும் மீண்டும் தீவிரமடைந்தன. நான்கு பக்கங்களிலிருந்தும் பேரிரைச்சல். காலை விடியும்பொழுது ஒரு மரமாவது விழாமல் இருக்குமா? என்று சந்தேகம் வந்தது. மேலே கூரையின் ஓடுகள் பெரும்பாலும் பறந்து போய்விட்டன. மழைத்தூறல்கள் மட்டும் அவர்களை நெருங்கவில்லை.

சிறிது நேரம் கழிந்தது. ராவின் கால்கள் மரத்துப் போய்விட்டன. படுத்துக்கொண்டே கால்களை மெதுவாக நகற்றினார். உள்ளம் மெதுவாக விழித்தது. 'டார்ச் லைட்டில்' அவள் முகத்தைப் பார்த்தார். தூக்கத்தில் அவள் முகம் ஒரு பாவமுமறியாதது போல், சலனமில்லாது இருந்தது. அவள் முகத்தில் புதுப்பொலிவு இருந்தது.

காற்றும் மழையும் மேலும் வெகுண்டு அடித்தது. ஆனால், அவர் மனதில் அமைதி நிறைந்திருந்தது. அவர் உடல் களைத்துப் போயிருந்தது. அவருக்கு ஓய்வு தேவையானது. மெதுவாக அவர் தன்னை மறந்து தூங்கிவிட்டார்.

தூங்கி எழுந்தபொழுது மழை குறைந்து இருந்தது. காற்று மட்டும் பலமாக வீசியது. பிச்சைக்காரி எழுந்து போய்விட்டாள். கடிகாரத்தைப் பார்த்தார். காலை மணி 5 ஆகியிருந்தது. எழுந்து நின்றார். முழங்கால் பிடித்துக் கொண்டது. தன்னையறியாமலேயே பைகளைத் தொட்டுப் பார்த்தார். அவர் முதல்முதலாக முணுமுணுத்தார்: "திருட்டு முண்டை அவள்!"

அவ்வாறு திருடியிருப்பாள் என்று எண்ணத் தோன்றவில்லை. அறையின் நான்கு மூலைகளிலும் தேடினார். எங்கும் காணவில்லை. நேற்று இரவில் பயத்தில் எங்காவது விழுந்துவிட்டதோ என்னவோ! அறையிலிருந்து வெளியே வந்தார். வெளித்தோற்றம் மிகவும் பயங்கரமாக அதிர்ச்சியளித்தது. பிளாட்பாரம் தவிர எல்லாமே தண்ணீரில் மூழ்கிக் கிடந்தன. சிலர் பிளாட்பாரம் படிக்கட்டு வழியாக நடந்தனர். அநேகமாக அவர்கள் ஊரிலிருந்து வரலாம் என்று நினைத்தார்.



விபத்துக்குள்ளானவர்கள் ஸ்டேஷனின் மறுபுறம் விழுந்து கிடந்தனர். தொலைவில் இருந்து பார்த்துவிட்டு முகத்தைத் திருப்பிக் கொண்டார். ஆஸ்பத்திரிகளில் வெண்மையான போர்வைக்குக் கீழே அடுக்கடுக்காக இருக்கும் உடல்களைப் போல் — அவர்கள் படும் துன்பங்களைப் போல் — சடலங்கள் கிடந்தன. அவருக்குக் குமட்டிக் கொண்டு வந்தது. பின்னே திரும்பினார்.

'டிக்கெட் கௌண்டர்' முழுமையும் விழுந்துவிட்டது. கதவுகள் எங்கும் காணப்படவில்லை. அறைக்கு உள்ளே மேசை நாற்காலிகள் சிதறிக் கிடந்தன. தங்கும் அறையும் விழுந்திருந்தால் என்னவாயிருக்கும் என்று நினைத்தார். இந்தக் காட்சிகளையெல்லாம் அமைதியாகப் பார்த்துக் கொண்டே பிரமித்து நின்றுவிட்டார்.

உள்ளே இருக்கும் இருட்டுக்குப் பழக்கப்பட்ட கண்களுக்கு, சாமான்களிடையே ஏதோ ஒரு உடல் விழுந்து கிடப்பது போலத் தோன்றியது. விளக்கை அடித்துப் பார்த்தார். பிச்சைக்காரி. அவரால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. குனிந்து நெற்றியைத் தொட்டுப் பார்த்தார். அவள் இறந்து போய்விட்டாள். கைகள் இரண்டும் பக்கத்தில் விரிந்து கிடந்தன. கீழ்ப்பகுதிகள் நசுங்கிப் போய்விட்டன. ஒரு கையில் அவருடைய மணிப்பர்சு. இன்னொரு கையில் சில கரன்சி நோட்டுகள், சில்லறை இருக்கின்றன. டிக்கெட் விற்ற பணமாக இருக்கலாமோ என்னவோ! குமாஸ்தா, அந்தப் பணத்தை டிராயரில் வைத்துவிட்டு வீட்டுக்குப் போயிருப்பான்.

ராவ் சட்டென்று சிறு பிள்ளை மாதிரி அழத் தொடங்கிவிட்டார். குனிந்து சென்று அந்த நெற்றியை முத்தமிட்டார். முந்தைய இரவு நடந்த நிகழ்ச்சிகள் அவருக்குத் திரும்பத் திரும்ப நினைவுக்கு வந்தன. தனக்குத் தன்னம்பிக்கையையும் காற்றையும் மழையையும் தாங்கிக் கொள்ளும் சக்தியையும் கொடுத்த அந்தத் திருவுருவம் கீழே கிடக்கிறது. காற்றுக்கும் மழைக்கும் அவள் பலியாகிவிட்டாள். அவர் உள்ளம் புயலாக மாறியது. கடல் போன்று கொந்தளித்தது. அவருக்கு எஞ்சியிருந்த ஒரேயொரு இன்பமும் மகிழ்ச்சியும் போய்விட்டது போல் தோன்றியது. தன்னுடைய 'பர்சை' திருடியது குறித்தோ, அத்துணை காற்று மழையில் அந்த அறைக்குச் சென்று பணத்தை எடுத்ததற்கோ அவளை அவர் பழிக்கவில்லை. அவளின் கடைசி எண்ணம் அவருக்குத் தெரியும். இப்பொழுது அவளுடைய கேளிக்கையும் சிரிப்பும் அவரை மகிழ்ச்சியூட்டுவதாக இருந்தது.

உள்ளத்தின் ஆழத்தில், அடித்தளத்தில் இருந்த மனிதத்தன்மை அப்பொழுதுதான் அவருக்கு மலர்ந்தது. அவருடைய மனைவியோ, குழந்தைகளோ இவளைப் போல அவரை நெருங்கி வர முடியவில்லை. இந்தப் பெண்ணுக்கு உயிர் கொடுக்க முடியும் என்றிருந்தால், அவர் கொண்டிருந்த தர்ம சிந்தனைகள், வேதாந்தங்கள், கொள்கைகள் எல்லாவற்றையும் கூட விடத் தயாரானார்.

மறுபுறம் மக்கள் நடமாட்டம் இருந்தது. ராவ், கண்களைத் துடைத்துக் கொண்டு சிந்தித்தார். பிறகு ஓர் உறுதிப்பாட்டுடன் அவள் கையில் இருந்த பணத்தைப் பிடுங்கி எடுத்துப் போட்டுவிட்டு மூடினார். ஆனால், தன்னுடைய பர்சை, அவள் கையிலிருந்து எடுப்பதற்கு அவர் மனம் இடம் தரவில்லை. தனக்குத் தொடர்புடைய ஏதோ ஒன்று அவள் உடம்பில் நினைவுச்சின்னமாக இருக்கவேண்டுமென்று நினைத்தார். மற்றவர்கள், இவள் திருடினாள் என்று நினைத்தால், பொறுத்துக் கொள்ள முடியாது. அதனால், அந்தப் பணப்பையில் உள்ள தன்னுடைய பெயர் அட்டையை எடுத்துவிட்டு, உள்ளச் சுமையுடன் அங்கிருந்து நகர்ந்தார். ✧

கண்ணோட்டம் என்னும் கழிபெருங் காரிகை
உண்மையான் உண்டிவ் வுலகு.

'கோட்டம் முதல் குமரி வரை' மலரிலிருந்து...

## சென்னை— சர்தார் பட்டேல் சாலை மேம்பாலம்

இன்றைய தினம் இரண்டு மேம்பாலங்கள் சென்னை மாநகரத்திலே திறந்து வைக்கப்படுகின்றன. கடந்த ஆண்டு 31.1.99 அன்று மேம்பாலங்கள் அடிக்கல் நாட்டு விழாவினை நான் நிறைவேற்றி வைத்தேன். 115.5 கோடி ரூபாய் செலவில் பத்து மேம்பாலங்கள் கட்டத் திட்டமிட்டு அடிக்கல் நாட்டுகின்ற விழா 31.1.99–இல் நடைபெற்றது. சரியாக ஓராண்டு காலத்திற்குள்ளாக இரண்டு மேம்பாலங்கள் முடிவடைந்து இன்றைக்குத் திறப்பு விழாக்கள் நடத்தப்படுகின்றன.

நாங்கள் பொறுப்பு ஏற்றுக் கொண்டிருக்கின்ற எந்த இடமானாலும் அங்கே நிறைவேறுகின்ற காரியங்கள் சரியாக நிறைவேறும். விரைவாக நிறைவேறும் என்பதற்கு இந்த இரண்டு பாலங்களுடைய திறப்புவிழா ஒரு சான்று என்பதை நான் இங்கே எடுத்துக்காட்டக் கடமைப்பட்டிருக் கின்றேன்.

பத்து மேம்பாலங்கள் 115.5 கோடி ரூபாய் செலவில் கட்ட திட்டமிட்டு அந்தப் பத்து மேம்பாலங்களிலே இன்றைய விழாவில் மாத்திரம் 15.50 கோடி ரூபாய் செலவில் இரண்டு மேம்பாலங்கள் திறக்கப்படுகின்றன. எஞ்சிய 8 மேம்பாலங்களின் கட்டுமானப் பணிகளும் மிக வேகமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. விரைவிலே அந்தப் பாலங்களுடையத் திறப்பு விழாக்களும் நடைபெற இருக்கின்றன.

பெரம்பூர் இரயில்வே நிலையத்தின் அருகில் 21 கோடி ரூபாய் செலவிலே ஒரு மேம்பாலம். பீட்டர்ஸ் சாலை – வெஸ்ட்காட் சாலை சந்திப்பில் 8 கோடியே 50 இலட்ச ரூபாய் செலவில் ஒரு மேம்பாலம்.

பாந்தியன் சாலை – காசா மேசர் சாலை சந்திப்பில் 8 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் ஒரு மேம்பாலம். புரசைவாக்கம் நெடுஞ்சாலை – ஹண்டர்ஸ் சாலை சந்திப்பில் 12 கோடி ரூபாய் செலவில் ஒரு மேம்பாலம்.

டாக்டர் ராதாகிருஷ்ணன் சாலை – ராயப்பேட்டை நெடுஞ்சாலைச் சந்திப்பில் 8 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் ஒரு மேம்பாலம், டாக்டர் ராதாகிருஷ்ணன் சாலை – டி.டி.கே. சாலைச் சந்திப்பில் 15 கோடி ரூபாய் செலவில் ஒரு மேம்பாலம்.

**நேரத்தை குறைக்க, தொலைவை குறைக்க, விபத்துக்களை தவிர்க்க இந்த பாலங்கள் பயன்படும்**

– சென்னையில் இரு மேம்பாலங்கள் திறப்பு விழாவில் முதலமைச்சர் **கலைஞர்.**

ஆழ்வார்ப்பேட்டை – எல்டாம்ஸ் சாலை சந்திப்பில் 11 கோடி ரூபாய் செலவிலே ஒரு மேம்பாலம், சர்தார் படேல் சாலை – லாட்டிஸ் பாலம் சாலை சந்திப்பில் 15 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவிலே ஒரு மேம்பாலம்.

இவை தவிர மேலும் 10 மேம்பாலங்கள் சென்னை மாநகரின் முக்கியச் சந்திப்புகளில் 125 கோடியே 50





இலட்ச ரூபாய் செலவில் கட்டுவதற்கும் திட்டமிடப்பட்டுள்ள சூழ்நிலையிலே தான் இந்தப் பாலத்தை நான் இப்பொழுது உங்கள் முன்னால் திறந்து வைத்திருக்கின்றேன்.

பாலங்கள் கட்டுவது நம்முடைய வளர்ந்து வருகின்ற சென்னை மாநகரத்திற்கு மிகமிக அத்தியாவசியத் தேவை என்பதை நீங்கள் எல்லாம் மிக நன்றாக அறிவீர்கள்.

நேரத்தைக் குறைக்கவும், தொலைவைக் குறைக்கவும், செல்ல வேண்டிய இடங்களுக்கு விரைவிலேச் செல்லக்கூடிய வாய்ப்பை வழங்கவும் இந்தப் பாலங்கள் பெரிதும் பயன்படுகின்றன. முக்கியமாக விபத்துக்களைத் தவிர்ப்பதற்கும், பாலங்கள் பயன்படுகின்றன.

பாலம் கட்டவேண்டும் என்பது நகரைப் பொறுத்த மாத்திரமல்ல; நாட்டைப் பொறுத்தும் கூட சமுதாயத்திலே கட்டவேண்டிய பாலம் அதிகமிருக்கிறது. ஏற்றத்தாழ்வு இல்லாமல் பல்வேறு சமூகங்களுக்கிடையே பாலம் கட்டுகின்ற பணியிலே நாம் ஈடுபட்டிருக்கின்ற காரணத்தால் தான் சமத்துவபுரங்களைத் தமிழகத்திலே உருவாக்கிக் கொண்டிருக்கின்றோம். அங்கே கட்டப்படுகின்ற பாலம் சமுதாயத்திலே ஒற்றுமை ஏற்படுத்த கட்டப்படுகின்ற பாலம். இந்தப் பாலம் ஜனநெருக்கடியைச் சமாளிக்கக் கட்டப்படுகின்ற பாலம்.

நாங்கள் எங்கே பொறுப்பிலே இருந்தாலும், ஆட்சிப் பொறுப்பிலே இருந்தாலும் நம்முடைய தம்பி மேயர் ஸ்டாலின் அமர்ந்திருக்கிற மாநகராட்சி மன்றப் பொறுப்பிலே இருந்தாலும் எந்தப் பொறுப்பிலே இருந்தாலும் அது திறந்த புத்தகம் என்பதை நான் உங்களுக்குச் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை.

ஒரு திட்டமிடுவது என்பது வேறு ஏதோ திட்டமிட்டு செய்யப்படுகின்ற திட்டம் அல்ல. அதெல்லாம் கடந்த காலத்திலே தான் திட்டங்கள் வேறு ஏதோ திட்டமிட்டு அறிவிக்கப்படுகின்ற திட்டங்களாக இருக்கும். இந்தக் காலத்திலே அப்படியல்ல. நான் இங்கே பாலத்தைத் திறக்க வந்திருக்கிறேன். சில பேர் தங்கள் பாவத்தைப் போக்க இந்த இடத்திற்கு வேறு நேரங்களிலே வந்து சென்றார்கள் என்றும் கேள்விப்பட்டிருக்கிறேன். எனவே நான் உங்களுக்குச் சொல்லிக் கொள்ள மீண்டும் மீண்டும் விரும்புகின்றேன். பாலங்கள் 10, கட்டுகிறீர்கள், 20 கட்டுகிறீர்கள். ஒவ்வொரு பாலத்திற்கும் ஒரு பெயர் வைக்க வேண்டும் என்று சில பேர் கடிதம் எழுதியிருக்கிறார்கள். வேண்டாம் அந்த விபரீத யோசனை என்று எல்லோருக்கும் நான் சொல்லிக் கொள்ள விரும்புகின்றேன்.

ஒரு பாலத்திற்குப் பெயர் வைத்தால் இன்னொரு பாலத்திற்கு இன்ன பெயர் வையுங்கள் என்று ஒரு குரலிலே கூட சொல்லமாட்டார்கள். பல குரலில் பல மனுக்கள் வர நேரிடும். எனவே எந்தப் பாலத்திற்கும் பெயர் இல்லை. எல்லா பாலத்திற்கும் ஒரே பெயர் தான். எந்தத் தெருவிலே அந்தப் பாலம் அமைந்திருக்கிறதோ அந்தத் தெருவின் பெயராலே அந்தப் பாலத்தை அழைத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொண்டு இந்தப் பாலத் திறப்பு விழாவிலே உங்களையெல்லாம் சந்திக்கின்ற நல்ல வாய்ப்பு கிட்டியமைக்காக நன்றி தெரிவித்து, மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## சென்னை-பீட்டர்ஸ் சாலை மேம்பாலம்

இன்று முதலிலே ஒரு பாலத்தைத் திறந்து வைத்துவிட்டு இரண்டாவதாக இந்தப் பாலத்தையும், இதையொட்டி சென்னை-கடற்கரை காமராசர் சாலையில் எழிலகத்திற்கு அருகேயுள்ள சுரங்க

நடைபாதையும் திறக்கின்ற நிகழ்ச்சியிலே கலந்து கொண்டு உங்களையெல்லாம் சந்திக்கும் நல்வாய்ப்பை நான் பெற்றமைக்காக பெருமகிழ்ச்சியடைகிறேன்.

## குறிப்பிட்ட காலத்திற்கு முன்னதாகவே நிறைவுற்ற பாலம் கட்டும் பணி

இந்தப் பாலம் கட்டுகின்ற மாபெரும் திட்டம் கடந்த ஆண்டு மாநகராட்சி மன்றத்தினால் தொடங்கி வைக்கப்பட்டு – தொடக்க நிகழ்ச்சியிலும் நான் கலந்து கொண்டு, எனக்கு முன்னால் பேசியவர்கள் எல்லாம் குறிப்பிட்டதைப் போல, குறிப்பிட்ட காலத்திற்கு முன்னதாகவே நிறைவேறி திறந்து வைக்கப்பட்டிருக்கிறது. மீதம் உள்ள எட்டு பாலங்களும் தொடர்ந்து மாதாமாதம் திறந்து வைக்கப்படும் நிகழ்ச்சிகள் நடைபெறுமென்று நான் நம்புகிறேன்.

இங்கே பேசிய தம்பி டி.ஆர்.பாலு மெத்த வருத்தத்தோடு இந்தப் பாலங்களைப் பற்றி யாரோ சில பத்திரிகைகளிலே எழுதியிருப்பதைச் சுட்டிக் காட்டினார். இவைகளையெல்லாம் நாம் ஏற்றுக்கொண்டுதான் ஆகவேண்டும். மேயர் தம்பி ஸ்டாலின் பேசும்போது கட்டப்பட்டுள்ள இந்தப் பாலங்கள் எவ்வளவு பெரிய வாகனங்கள் வந்து மோதினாலும் அசையாது என்று சொன்னார்.


இந்தப் பாலம் தம்பி ஸ்டாலின் சொன்னதைப் போல நிச்சயமாக ஆடாது, அசையாது, நெளிந்து கொடுக்காது, வளைந்து சாயாது என்று நான் இங்கே எடுத்துக் காட்டக் கடமைப் பட்டிருக்கிறேன்.

நம்முடைய தம்பி வெற்றிவேல் இரண்டு மூன்று வரிகளிலே தன்னுடைய பாராட்டுதலைத் தெரிவித்துக் கொண்டார். அவர் பேசும்போது, வேறு பாலம்

இதைக்கூட சில பேர் குறை கூறக்கூடும். குறை பிரசவம் என்று கூடச் சொல்லக் கூடும். ஏனென்றால் நல்லது செய்தாலும், அல்லது செய்தாலும் இரண்டையும் பகுத்துப் பார்த்து எது நல்லது, எது அல்லது என்பதை நிர்ணயித்து விமர்சிக்காமல், இதை யார் செய்தார்கள் என்பதை எண்ணிப் பார்த்து விமர்சனம் செய்கிற சமுதாய குறுகிய நோக்கு இன்றைக்கு இருக்கின்ற காரணத்தால் இதுவும் அவ்வாறு விமர்சிக்கப்படலாம். ஆனால் இது விரைவில் நடைபெற்று முடிந்துள்ள ஒரு அருமையான சாதனையாகும்.

## விரைந்து முடிவெடுக்கும் அரசு

விரைந்து செய்வதற்கும், அவசரப்பட்டு செய்வதற்கும் ஆங்கிலத்திலே இரண்டு சொற்கள் உண்டு. Hasty decision என்பது அவசரப்பட்டு எடுக்கின்ற முடிவு – Quick decision என்பது விரைந்து எடுக்கின்ற முடிவு. எப்போதுமே திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொறுப்பு. அது ஆட்சிப் பொறுப்பாக இருந்தாலும், மாநகராட்சிப் பொறுப்பாக இருந்தாலும் Quick decision தான், Hasty decision இல்லை என்பதற்கு இன்றைய விழா ஒரு நற்சான்று என்று நான் எடுத்துக்காட்டக் கடமைப் பட்டிருக்கிறேன்.



நினைவுக்கு வந்தது. 96–ஆம் ஆண்டு தி.மு.க.வுக்கும் தமிழ் மாநிலக் காங்கிரசுக்கும் பாலம் கட்டியவர்களில் ஒருவர் தம்பி வெற்றிவேல். நல்லவேளை, இன்றைக்குப் பாலம் கட்ட வராவிட்டாலும், பாலம் திறக்கின்ற நிகழ்ச்சிக்கு வந்திருக்கிறார் என்பதிலே எனக்கொரு மகிழ்ச்சி.

நான் முன்பு நடைபெற்ற நிகழ்ச்சியில் குறிப்பிட்டேன். சமுதாயத்திலே நாம் கட்டவேண்டிய பாலங்கள், சமூக ஒற்றுமையைக் கட்ட வேண்டிய பாலங்கள். மதத்திற்கு மதம் கட்ட வேண்டிய ஒற்றுமைப் பாலங்கள். இந்தப் பாலங்களை நாம் கட்டி முடிக்க வேண்டும். அதற்கெல்லாம் எடுத்துக் காட்டாக இந்தப் பாலங்களின் திறப்பு விழாக்கள் இன்றைக்கு அமைந்திருக்கின்றன என்று நான் சொன்னேன். பாலு சொன்னதை நான் நினைவுப் படுத்தி அதைப்பற்றி ஓரிரு வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன்.

ஒரு ஆங்கிலப் பத்திரிகையிலே இன்றைக்கு வந்த ஒரு செய்தியை நான் பார்த்தேன். தி.மு.க. 96–இல் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் நிதி நிலை அறிக்கையிலே ஒரு அறிவிப்பைச் செய்தோம். எந்தத் திட்டமானாலும் அவைகள் எல்லாம் ஒளிவு மறைவற்ற திட்டங்களாக நடைமுறைப்படுத்தப்படும் என்று சொன்னேன்.

அது மாதத்திரமல்ல, இன்னொன்று, Right to Information அதாவது அந்தத் திட்டத்தைப் பற்றி யார் வேண்டுமானாலும் தகவல் தெரிந்து கொள்ளலாம். யார் விரும்பினாலும் அந்தத் திட்டத்திற்கு மதிப்பீடு எவ்வளவு, டெண்டர் எப்படி விடப்பட்டிருக்கிறது, டெண்டரை எடுத்தவர் யார், அது Lowest டெண்டரா? Highest டெண்டரா? எதற்குத் தரப்பட்டுள்ளது என்ற இந்த விவரங்களையெல்லாம் தெரிந்து கொள்ள தமிழ்நாட்டில் உள்ள எந்த ஒரு குடிமகன் விரும்பினாலும் அவர்களுக்குத் தர நாங்கள் கடமைப்பட்டிருக்கிறோம் என்கிற அறிவிப்பு மாத்திரமல்ல, அதற்கான சட்டத்தையே செய்திருக்கின்ற ஆட்சி தான் தி.மு.க. ஆட்சி. அதைப் போல இன்றைக்கு நம்முடைய வெற்றிவேலைப் பற்றியும், இந்தப் பாலங்களைப் பற்றியும் ஒரு செய்தி.

அந்த ஆங்கிலப் பத்திரிகையைப் புரட்டினால் அழகான படம், பாலத்தின் படம் இருக்கிறது. பரவாயில்லை, இவர்கள் கூட படம் போட்டு செய்தி போட்டிருக்கிறார்களே, என்று ஆச்சரியத்தோடு கண்களை அகல விரித்துச் செய்தியைப் படித்துப் பார்த்தால், ஏதோ அந்தப் பாலம் கட்டியதிலே தவறு அல்லது முறைகேடு நடைபெற்றிருப்பதைப் போல தலைப்புச் செய்தி.

**இதைக்கூட சில பேர் குறை கூறக்கூடும். குறை பிரசவம் என்று கூடச் சொல்லக் கூடும். ஏனென்றால் நல்லது செய்தாலும், அல்லது செய்தாலும் இரண்டையும் பகுத்துப் பார்த்து எது நல்லது, எது அல்லது என்பதை நிர்ணயித்து விமர்சிக்காமல், இதை யார் செய்தார்கள் என்பதை எண்ணிப் பார்த்து விமர்சனம் செய்கிற சமுதாய குறுகிய நோக்கு இன்றைக்கு இருக்கின்ற காரணத்தால் இதுவும் அவ்வாறு விமர்சிக்கப்படலாம். ஆனால் இது விரைவில் நடைபெற்று முடிந்துள்ள ஒரு அருமையான சாதனையாகும்.**

விஷயம் என்னவென்று விளக்கமாகப் படித்துப் பார்த்தால், மாநகராட்சி மன்றத்திலே எதிர்க்கட்சித் தலைவராக இருக்கின்ற வெற்றிவேல் அவர்கள் இந்த Right to Information என்ற சட்டத்தைப் பின்பற்றி இந்தப் பாலத்தைப் பற்றிய விவரங்களைக் கேட்க, அதிலே ஒரு பகுதி விவரங்கள் தரப்பட, மீதமுள்ள இதன் தொடர்பான விவரங்களும் தேவையென்று அவர் கேட்க, விரைவில் தரப்படும் என்று அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். இது தான் செய்தி.

இதைப் போட்டு விட்டு ஏதோ விவரங்களே தரப்படவில்லை என்பதைப் போல அந்த ஆங்கிலப் பத்திரிகை தன்னுடைய இஷ்டத்திற்கு செய்தியை வெளியிட்டுருக்கின்றது. இது சகஜம்.

ஒரு ஆசிரியர் பள்ளியிலே அருமையாகப் பாடம் சொல்லிக் கொண்டிருந்தார். இலக்கியம், காவியம், சரித்திரம், பூகோளம் இவைகளை எல்லாம் கரைத்துக் குடிக்கிற அளவிற்கு உள்ள ஆசிரியர், மாணவர்களுக்கு அருமையாக பாடம் சொல்லிக் கொண்டிருந்தார். அப்போது ஒரு பையன் பாடத்தைக் கவனிக்காமல் சுவரையே பார்த்துக் கொண்டிருந்தான். ஒரு எலி சுவரில் உள்ள பொந்தில் நுழைந்து கொண்டிருந்தது. அதையே பார்த்துக் கொண்டிருந்தான். ஆசிரியர் அவன் காதைப் பிடித்துத் திருகி, "என்னடா? நான் சொல்லிக் கொடுத்தது உன் காதில் நுழைஞ்சுதா?" என்று கேட்டார். அதற்கு அவன் "நுழைஞ்சுது சார், வால் தான் பாக்கி" என்றான். என்னவென்றால் சுவரிலே உள்ள பொந்தில் எலியின் உடம்பு முழுவதும் நுழைந்து விட்டது. வால் மாத்திரம் பாக்கியிருந்தது. அதைத்தான் அந்த மாணவன் ஆசிரியர் கேட்டதைப் புரிந்து கொள்ளாமல் கூறினான்.

அதைப் போல வால் மாத்திரம் பாக்கியிருக்கின்ற ஒரு சில பேர் வழிகள் நாட்டிலே பத்திரிகை நடத்திக் கொண்டிருக்கின்றார்கள். அவர்கள் வேண்டுமென்றால் இதைப்பற்றியெல்லாம் எழுதலாம். அதற்காக நாம் கவலைப் படத் தேவையில்லை.

## நமது வழியில் ஒழுங்காக நடந்தால் விமர்சனங்கள் பற்றி கவலை தேவையில்லை

நாம் நம்முடைய வழியிலே நேராக நடந்தால், ஒழுங்காக நடந்தால், செம்மையாக நடந்தால், ஊழலற்ற தன்மையிலே நம்முடை நடையை அமைத்துக் கொண்டால் எந்தவிதமான விமர்சனங்களைப் பற்றியும் கவலைப்படத் தேவையில்லை. நம்முடைய மனச்சாட்சிக்கு, நாம்செய்வது சரி என்று

பட்டால், நம்முடைய மனச்சாட்சி நம்மை உறுத்தாமல் இருந்தால், நீ தவறு செய்து விட்டு நாட்டிலே நடித்துக்கொண்டிருக்கிறாய் என்று கூறுகின்ற அளவிற்கு நம்முடைய நிலை இல்லாமலிருந்தால் நாம் எதற்காகவும் கவலைப்படத் தேவையில்லை. அந்த வகையிலேதான் சென்னை மாநகராட்சி மன்றத்திலே பணிகள் இன்றைக்கு நல்ல நோக்கத்தோடு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

ஒரு பாலம் அமைப்பது அழகுக்காக அல்ல. பாலம் அழகாக இருக்கிறது. அது வேறு விஷயம். ஆனால் இந்தப் பாலத்தால் ஏற்படுகின்ற பயன்கள் என்னவென்று பார்த்தால் நெருக்கடியைச் சமாளிக்கிறது. நாம் நெருக்கடியையே சமாளித்தவர்கள் அல்லவா. எனவே நாம் பாலம் கட்டி ஜனநெருக்கடியை இங்கே சமாளிக்கவிருக்கிறோம். அது மாத்திரமல்ல, நேரத்தை மிச்சப்படுத்தித் தருகிறது.

இன்னொன்று சொல்ல விரும்புகிறேன். இதே மேயர் தம்பி ஸ்டாலின் குழந்தையாக இருக்கும் போது கோடம்பாக்கம் கேட் என்று ஒன்று உண்டு. அந்தக் கோடம்பாக்கம் கேட்டைத் தாண்டி ஜக்கரியா காலனி உள்ளது. அங்கே நான் அப்போது ஒரு வாடகை வீட்டில் வாழ்ந்து கொண்டிருந்தேன். அப்போது ஸ்டாலின் கைக்குழந்தை. ஒரு நாள் ஸ்டாலின் ஊர்ந்து சென்று ஒரு திறந்த ஊக்கை விழுங்கி விட்டான். உடனடியாக டாக்டரிடம் அழைத்துச் செல்ல வேண்டுமென்றுவீட்டில் உள்ளவர்கள் ஸ்டாலினைத் தூக்கிமடியில் வைத்துக்கொண்டு ஒரு காரை எடுத்துக்கொண்டு புறப்பட்டார்கள்.

புறப்பட்டால் நூறு கெஜ தூரத்திற்கெல்லாம் கோடம்பாக்கம் கேட் வந்துவிட்டது. அந்தக் கேட் மூடப்பட்டால் மீண்டும் திறக்க ஒருமணி நேரமாகும். எல்லா ரெயிலும் போய், சென்னைக்கும் செங்கற்பட்டிற்கும் போகிற மின்சார ரெயில் எல்லாம் போய் முடிந்து அதற்குப் பிறகு தான் அந்தக் கேட் திறக்கப்படும். இந்த ஒரு மணி நேரத்திற்குள் தொண்டை வரை போயிருந்த ஊக்கு வயிற்றுக்குள் போய்விட்டது. அதற்குப் பிறகு கேட் திறக்கப்பட்டு பிறகு டாக்டர் வீட்டிற்கு வந்து, அதற்குள் எல்லோரும் என்னவாகுமோ என்று அலறித் துடித்து, ஆப்பரேஷன் பண்ணித் தீர வேண்டுமோ என்ற அளவிற்கு வந்துவிட்டது. நான் அன்றைக்கு திருச்சியிலே ஒரு கூட்டத்திற்குச் செல்ல வேண்டும். பார்த்துக் கொள்ளுங்கள் என்று சொல்லிவிட்டுச் சென்று விட்டேன். திருச்சியிலிருந்து டெலிபோன் செய்து என்னவாயிற்று என்று கேட்டேன். பரவாயில்லை, ஊக்கு வெளியே வந்துவிட்டதென்று மகிழ்ச்சியாக சொன்னார்கள். அன்று ஊக்கை விழுங்கியவன் தான் இன்று ஊக்கத்தோடு சென்னை நகரமெங்கும் பாலங்களைக் கட்டியிருக்கிறார் என்பதைக் காணும் போது நான் மகிழ்ச்சியடைகிறேன்.

அந்தக் கோடம்பாக்கம் கேட்டை வைத்து நான் "அய்யோ ராஜா" என்ற தலைப்பிலே ஒரு கதை கூட எழுதினேன். ஸ்டாலின் விவகாரத்தை ஞாபகத்திலே வைத்துக் கொண்டு எழுதினேன். வி.ஐ.பி.க்கள் பல பேர் சென்னைக்கு வந்திருக்கிறார்கள். அவர்களுடைய கார்கள் எல்லாம் போவதற்காக போலீசார் ஆயிரக்கணக்கிலே ஆங்காங்கு நின்று வழி செய்து கொண்டிருக்கிறார்கள். ஆனால் கோடம்பாக்கம் கேட் மூடப்பட்டுள்ளது. ஒரு பெண் தன்னுடைய குழந்தைக்குத் தாங்க முடியாத காய்ச்சல் என்பதால் டாக்டரிடம் தூக்கிக் கொண்டு வருகிறாள். கேட் மூடப்பட்டு விட்டது. போக முடியவில்லை. ஒரு மணி நேரம் காத்திருந்து கேட்டிற்கு வெளியே நின்றிருந்த அந்தப் பெண், டாக்டரிடம் காட்ட வேண்டிய அந்தக் குழந்தையை சவமாக வீட்டிற்குப் தூக்கிக் கொண்டுப் போனாள் என்று 'அய்யோ ராஜா' என்ற தலைப்பிலே ஒரு கதை எழுதியிருந்தேன்.

### சென்னை மாநகரில் மேலும் 10 பாலங்கள்

இப்போது ஸ்டாலின் செய்துள்ள வேலை, இது போன்ற கதைகளை யாரும் எழுத முடியாத அளவிற்கு செய்துவிட்டார். அந்த அளவிற்கு இப்போது சென்னை மாநகரத்திலேப் பத்து பாலங்கள், ஏற்கனவே சிறிய சிறிய பாலங்களாக நாற்பது, ஐம்பது பாலங்கள் இந்த மூன்றாண்டு காலத்திலே கட்டப்பட்டிருக்கின்றன. இதற்குப் பிறகு மேலும் பத்து பெரிய பாலங்கள் கட்டப்படும் என்று கூறியிருக்கிறார்.

எனவே எல்லா வகையிலும் சென்னை வளருகிறது. முன்னேறுகிறது. சிங்கப்பூர் போன்ற மாநகரங்களை நோக்கி இன்றைக்கு நடை போட்டுக் கொண்டிருக்கின்றது என்ற இந்த மகிழ்ச்சியான செய்தியை உங்களோடு நானும் பரிமாறிக் கொண்டு சென்னை மாநகராட்சி மன்றத்தை வாழ்த்துகிறேன். அவர்களுடைய இந்தச் செயலை வரவேற்கின்றேன்.

*– சென்னை பீட்டர்ஸ் சாலை மற்றும் சர்தார் பட்டேல் சாலை மேம்பாலங்களை 5–2–2000 அன்று திறந்துவைத்து முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரைகளிலிருந்து...*

> **அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார் என்பும் உரியர் பிறர்க்கு.**
> – குறள்



# இரண்டாம் வெண்மைப் புரட்சி காணும் தமிழகம்

– இரா. சௌமியன் இளவல், எம்.ஏ.,

கிராமப்புறங்களை அதிகமாகக் கொண்டிருக்கின்ற நம் இந்திய நாடு கால்நடை வளர்ப்பில் குறிப்பிடத்தக்க அங்கம் வகிப்பதாக ஆய்வுக்குறிப்புகள் தெரிவிக்கின்றன. கால்நடை மூலமான வருவாய், விவசாயிகளின் மொத்த வருவாய் அளவில் மூன்றில் ஒரு பங்காக உள்ளதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

தமிழகத்தைப் பொறுத்தவரையில், குறு விவசாயிகளுக்கும், நிலமற்ற ஏழை விவசாயத் தொழிலாளர்களுக்கும், கால்நடை என்பது அவர்களுடைய வாழ்வியலில் பெருஞ்சொத்தாகப் பேணப்படுகிறது; அதனாலேயே 'கால்நடைச் செல்வம்' என்று அழைக்கப்படுவது, மிகைப்படுத்தப்பட்ட ஒன்றல்ல என்பது புலனாகும்.

ஏனெனில், கால்நடைகள் மூலமான வருவாயும், வேலைவாய்ப்பும் ஆண்டு முழுவதும் கிடைக்க வாய்ப்பிருக்கிறது. மேலும், கால்நடை வளர்ப்பில் 60 சதவீதத்திற்கு மேலாகப் பெண்களின் உழைப்பே செலவிடப்படுகிறது. எனவேதான், அரசின் நலிவுற்றோர் பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களின் மூலம் மானியத்துடன் கூடிய கடனுதவி வழங்குவதில் கால்நடை வளர்ப்பிற்கு முன்னுரிமை தரப்படுகிறது.

மேலும், கிராமப்புறங்களில் அதிலும் குறிப்பாக விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட ஏழை விவசாயத் தொழிலாளர்களுக்கு, முழுமையாக இல்லாவிட்டாலும் ஒரு தொடர் வேலைவாய்ப்பினை கால்நடை வளர்ப்பின் மூலம் பெறமுடிகிறது என்றால், அது மிகையாகாது. இதனை ஒரு சுயவேலைவாய்ப்பு என்ற நோக்கில் பார்த்தால், மிகப்பெரிய அளவிலான முதலீடின்றி, வறிய நிலையிலிருப்பவர்கள் கூட 'சுயசேமிப்பு' அடிப்படையில் கால்நடை வளர்ப்பினை, அது கோழி வளர்ப்பாகவோ, ஆடு வளர்ப்பாகவோ, கறவை மாடு வளர்ப்பாகவோ மேற்கொள்ள முடியும்.

அதனாலேயே மத்திய–மாநில அரசின் வறுமை ஒழிப்புத் திட்டங்களில் கால்நடை வளர்ப்பு முன்னிலை வகிக்கிறது என்பது மிகையாகாது. அந்த அடிப்படையில் விவசாயத்திற்கு அடுத்தபடியாக என்று கூட இல்லாமல், விவசாயத்திற்கு இணையான தொழிலாக கால்நடை வளர்ப்பு அமைந்துவிடுகிறது. அதிலும் குறிப்பாக, கிராமங்களில் வாழும் ஆண்–பெண் இருபாலரின் 'மனித உழைப்பு' நம் நாட்டில் முழுமையாகப்

பயன்படுத்தப்படவில்லை என்ற கூற்று இன்றளவும் நிலவி வருகிறது. எனவேதான், நம் தேசப்பிதா காந்தியடிகள் கிராம சுயராஜ்யம் பற்றிக் குறிப்பிடுகையில், ''நம் நாட்டில் பல்கிப் பெருகியிருக்கின்ற கிராமங்களில் மனித வளம் அதிகமிருந்தும், அவை உரிய முறையில் பயன்படுத்தப்படவில்லை. ஒவ்வொரு மனிதனும் சக்திக்கேற்ப உழைக்க வேண்டும்'' என்று குறிப்பிட்டுள்ளார். கிராமங்கள் உண்மையான பொருளாதார மேம்பாட்டினை எய்த வேண்டுமெனில், அந்தந்த வட்டாரத்தில் உள்ள சாத்தியக் கூறுகளை அடிப்படையாக வைத்து அனைவரும் உழைத்திட வேண்டுமென்பது காந்தியச் சித்தாந்தமாகும். அந்த நோக்கில் பார்த்தால்கூட, நடைமுறையில் எளிதாக சாத்தியப்படுவதும் கால்நடை வளர்ப்புதான்.

**இதனை ஒரு சுயவேலைவாய்ப்பு என்ற நோக்கில் பார்த்தால், மிகப்பெரிய அளவிலான முதலீடின்றி, வறிய நிலையிலிருப்பவர்கள் கூட 'சுயசேமிப்பு' அடிப்படையில் கால்நடை வளர்ப்பினை, அது கோழி வளர்ப்பாகவோ, ஆடு வளர்ப்பாகவோ, கறவை மாடு வளர்ப்பாகவோ மேற்கொள்ள முடியும்.**

வானம் பொய்த்துப் போகிற போதெல்லாம் கால்நடைகள் கைகொடுக்கின்றன. உழவனுக்கு காப்பீடு (**Insurance**) என்பது கால்நடை வளம்தான். ஆனால் முந்தைய கிராமிய அமைப்பில், விவசாய நிலம் அது நன்செய், புன்செய் என்பதோடு மேய்ச்சல் நிலம் என்ற பகுதியும் அதில் உள்ளடக்கி இருந்து வந்தது. பெருகிவரும் மக்கட்தொகையின் அசுரப் பசியின் காரணமாக, காலப்போக்கில் மேய்ச்சல் நிலம் என்று கூறப்பட்டவையெல்லாம் வெவ்வேறு பயன்பாடுகளுக்காக எடுக்கப்பட்டு விட்டன. எனவே, கால்நடைகளின் மேய்ச்சல் என்பது இப்பொழுது அருகிக் குறுகிப் போய் விட்டது என்றே சொல்லலாம்.

இந்நிலையில் கால்நடைகளைக் கட்டிவைத்துத் தீனி போட வேண்டிய கட்டாயம்; அப்படி அந்தத் தீனிகளை உற்பத்தி செய்ய மீண்டும் இடப்பிரச்சினை வரும். எனவேதான் நம்முடைய ஆராய்ச்சியாளர்கள், குறுகிய நிலப்பகுதியில், அதிக அளவில் உற்பத்தியாகக் கூடிய சத்து நிறைந்த புதிய தீவனங்களை ஆராய்ந்து அறிமுகப்படுத்தியுள்ளனர்.

இது ஒரு புறமிருக்க, கால்நடைகளை நோய்த் தாக்குதல்களிலிருந்து காப்பாற்றி, தரமான கால்நடை உற்பத்திப் பொருட்களை உண்டாக்குவதும் ஒரு முக்கியமான அம்சமாகும். இந்நோக்கில் நம் தமிழகத்தைப் பொறுத்தவரையில், உழவுத்தொழிலுக்குத் தருகின்ற அதே முக்கியத்துவத்தை கால்நடை பராமரிப்பிற்கும் அளித்திட அரசு முன் வந்திருக்கிறது.

உழவர் பெருமக்கள் உற்பத்தி செய்கின்ற காய்கறி, கனி வகைகளை உரிய முறையில் விற்று இடைத்தரகரற்ற நிலையினை உருவாக்கிட 'உழவர் சந்தை' திட்டம் நல்ல வரவேற்பினைப் பெற்றுப் பன்முகப் பாராட்டினைப் பெற்றுள்ளது.



நடுத்தர வர்க்கத்து நுகர்வோர் இதனால் பெரும் பயன் அடைந்ததோடு, டாக்டர் எம்.எஸ். சுவாமிநாதன் கூறுவது போல் **Self Sufficiency** (உணவுச் சுயசார்பு) என்கிற நிலையில் இருந்து முன்னேறி **Nutrient Adequancy** (சத்துக்களிலும் தன்னிறைவு) எனும் நிலையை அடைய மிகவும் உதவும்.

அடுத்த முயற்சியாக, ஏழை விவசாயிகளும், நிலமற்ற ஏழை விவசாயத் தொழிலாளர்களும் பயன்பெற்றிட வேண்டும் என்ற அடிப்படையில், தொடங்கப்பட்ட 'கால்நடை பாதுகாப்புத் திட்டம்' வரவேற்கக்கூடிய ஒன்றே.

தமிழகத்தில் கோழிகளைத் தவிர்த்து, 2.56 கோடி கால்நடைகள் உள்ளதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. இவற்றைப் பராமரித்திட 2,126 துணை கால்நடை மருந்தகங்களும் (இதற்கு இணையாக **visiting sub-centres**), 141 கால்நடை மருத்துவமனைகளும், 838 கால்நடை மருந்தகங்களும் உள்ளன; இவற்றில் 1,642 கால்நடை மருத்துவர்களும், 3,188 ஆய்வாளர்களும் பணியாற்றுகின்றனர்.

கால்நடைகளை வெகுதூரம் மருத்துவமனைகளுக்கு அழைத்துச் செல்வது சிரமம் என்பதாலும், துணை மருந்தகங்களில் பல ஆபத்தான நோய்களுக்கு சிகிச்சையளிப்பது கடினம் என்பதாலும், உயர்தரக் கால்நடைகளைப் பற்றியும், கலப்பினப் பசுக்களைப் பற்றியும் விழிப்புணர்வை ஏற்படுத்துவது தேவை என்பதாலும், அருகி வரும் மேய்ச்சல் நிலங்களை அனுசரித்து சிறந்தத் தீவனப் பயிர்களைக் குறித்த பிரக்ஞையை ஏற்படுத்துவது அவசியம் என்பதாலும், நீலநாக்கு நோய் போன்றவற்றைத் தடுக்கும் பாதுகாப்பு முறைகளை விவசாயிகளுக்கு உணர்த்த வேண்டியிருப்பதாலும் ஒவ்வொரு துணை கால்நடை மருந்தகங்களை மையமாகக் கொண்டு சிறப்பு முகாம்களை நடத்திடத் திட்டமிடப்பட்டுள்ளது. வழக்கமாக கால்நடை பராமரிப்புத்துறை நடத்துகிற முகாம்களில் கலந்துகொள்கிற அலுவலர்கள் குறைவு. ஆனால் அரசு அறிமுகப்படுத்தியுள்ள முகாம்களில் குறைந்தது 10 மருத்துவர்களாவது கலந்துகொள்வார்கள் என்பதும், கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகமும் பங்கேற்கிறது என்பதும், இது வீரியம் மிகுந்த கவனம் குவிந்த மருத்துவ முகாமாக மலரும் என்கிற பெரிய நம்பிக்கையை ஏற்படுத்தியிருக்கிறது.

ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனிலும் மாதம் ஒன்றுக்கு ஒரு முகாம் நடத்துவது என்ற அடிப்படையில் இந்த அணுகுமுறை கடைப்பிடிக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த முகாம்களில் நிபுணர்கள் அடங்கிய மருத்துவக்குழுவும், சில முக்கியப் பகுதிகளில் பல்கலைக்கழக விஞ்ஞானிகளும் பங்கேற்பதால் கால்நடைகளுக்கும் கோழிகளுக்கும் ஏற்படும் நோய்கள், நோய்த் தடுப்பு முறைகள் ஆகியவற்றை விளக்கும் கண்காட்சிகள் இடம்பெறுவது பெரிய விழிப்புணர்வை நோக்கிய முக்கிய படியாக அமையும்.

முகாமில் தீவனப் பயிர்கள் குறித்து விவசாயிகளுக்கு விளக்கிச் சொல்லப்படுவதோடு விவசாயிகளுக்கு தீவனங்களின் விதைகள், கட்டைகள் போன்றவை விநியோகிக்கப்படும்;

விவசாயிகளுக்குத் தீவனப் பயிர்களை ஊடுபயிர்களாக வளர்ப்பது குறித்தும், தீவனத்தை மேம்படுத்து வதற்கான வழிமுறைகள் குறித்தும் விளக்கிச் சொல்லப்படும்;

அதிக அளவில் நாட்டு மாடுகளே உள்ள இடங்களைக் கண்டறிந்து அங்கு ரகமேம்பாடு **(Upgradation of germplasm)** செய்ய வழிவகை செய்யப்படும்;

செயற்கைக் கருவூட்டல், மலடு நீக்கம் போன்ற சிகிச்சைகளுக்கு மிகுந்த முக்கியத்துவம் அளித்து கால்நடை ரக மேம்பாடு உறுதி செய்யப்படும்.

முகாமில் பசுக்களுக்கும் எருமைகளுக்கும் மட்டும் ஒரு பதிவு அட்டை வழங்கப்பட்டு அது தொடர் சிகிச்சைகளைப் பதிவு செய்யும் ஆவணமாக இருக்கும்;

சிறந்த கால்நடைகளைத் தேர்ந்தெடுத்து இம்முகாம்களில் பரிசளித்து விவசாயிகளிடையே உற்சாகத்தையும், ஊக்கத்தையும் ஏற்படுத்த வாய்ப்பு அளிக்கப்படும் என்கிற வரையறைகள் தொடர்ந்து கடைபிடிக்கப் படுமேயாயின் அவற்றால் நல்ல நன்மைகள் விளைய வாய்ப்புண்டு.

**கால்நடைகளை நோய்த் தாக்குதல்களிலிருந்து காப்பாற்றி, தரமான கால்நடை உற்பத்திப் பொருட்களை உண்டாக்குவதும் ஒரு முக்கியமான அம்சமாகும். இந்நோக்கில் நம் தமிழகத்தைப் பொறுத்தவரையில், உழவுத்தொழிலுக்குத் தருகின்ற அதே முக்கியத்துவத்தை கால்நடை பராமரிப்பிற்கும் அளித்திட அரசு முன் வந்திருக்கிறது.**

எப்படிப்பார்த்தாலும் இந்த நல்ல முயற்சிகை கூடுமேயானால் தமிழ்நாட்டில் உண்மையான வெண்மைப் புரட்சி நிச்சயம் விளையும். ★

# கிராம சபை

கிராம மக்களுக்குப் பயன்படத்தக்க வகையில் ஊராட்சி அமைப்புகள் மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்து விவாதித்து, முடிவெடுக்கும் வகையில், ஒவ்வொரு ஊராட்சி மன்றத்திலும் ஒரு ஆண்டில் நான்கு முறைகளாவது கிராம சபைகளைக் கூட்டி, பொதுமக்களுடைய கருத்துக்களைக் கேட்டறிந்து, கிராமங்களில் மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்து முடிவுகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஏற்கனவே அறிவித்துள்ளார்.

தமிழ்நாட்டில், 1996–ஆம் ஆண்டு, மூன்றடுக்கு உள்ளாட்சி அமைப்புகளுக்குத் தேர்தல் நடத்தி முடிக்கப்பட்ட பின், தமிழகம் முழுவதும் கிராமசபைக் கூட்டங்கள் நன்முறையில் நடத்தப்பட்டு, கிராம மக்கள் தங்களது கிராமங்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளைக் கீழிலிருந்து மேல் நோக்கித் திட்டங்களைத் தேர்ந்தெடுத்துச் செயலாக்கும் மனப்பான்மையும், நடைமுறையும் உருவாகி வருகிறது.

இந்த ஆண்டில், குடியரசு நாளான சனவரி மாதம் 26–ஆம் நாள் கிராமசபைக் கூட்டங்கள் சிறப்பான முறையில் நடத்தப்பட வேண்டுமென்று, தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் இதுபற்றிப் பல்வேறு நாளிதழ்கள் மூலமாக வேண்டுகோள் விடுத்திருந்தார். மேலும், முதலமைச்சர் அவர்கள், தமிழகத்தில் மொத்தம் உள்ள 12,619 ஊராட்சிமன்றத் தலைவர்களுக்கும் நேர்முகக் கடிதம் மூலமாகக் கிராமசபைக் கூட்டம் நடத்துவது குறித்தும், அந்தக் கூட்டங்களில் விவாதித்து முடிவெடுக்கப்பட வேண்டிய பொருட்கள் குறித்தும் விளக்கமாகத் தெரிவித்திருந்தார். மாவட்ட ஆட்சித் தலைவர்களால் மேற்பார்வை அலுவலர்கள் நியமிக்கப்பட்டும், ஒவ்வொரு கிராமத்திற்கும் கிராமசபைக் கூட்டம் நடப்பதை ஒருங்கிணைக்க ஒரு பற்றாளர் நியமிக்கப்பட்டும், துண்டுப் பிரசுரங்கள் மூலமாகவும், அனைத்து மக்களுக்கும் 26.1.2000ல் கிராமசபைக் கூட்டங்கள் கூட்டப்படுகின்ற தகவல் தெரிவிக்கப்பட்டது.

அனைத்துப் பணிகளையும் மேற்பார்வையிட்டு, சிறப்பு அறிக்கை அனுப்பும் பொருட்டு, ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு உயர் அரசு அலுவலர் நியமிக்கப்பட்டு ஆணைகள் பிறப்பிக்கப்பட்டன. இவ்வாறு, தமிழ்நாட்டில் சனவரி 26–ஆம் நாள், 12,436 கிராம ஊராட்சி மன்றங்களில், கிராமசபைக் கூட்டங்கள் கூட்டப்பட்டதில், 25 இலட்சம் மக்கள் கலந்து கொண்டு, கிராமசபைக் கூட்டத்தின் சிறப்பான நடவடிக்கைக்கு வழிவகுத்து, கிராம மக்கள், தாங்கள் ஆற்றிட வேண்டிய மக்களாட்சிக் கடமைகளை அறிந்து, உணர்ந்து சிறப்பாக நிறைவேற்றி உள்ளனர். ★

# நாட்டு நலப்பணித் திட்டம்

இந்தியாவில் 1969–ஆம் ஆண்டு முதன்முதலாக நாட்டு நலப்பணித் திட்டம் 37 பல்கலைக்கழகங்களில் செயல்பட ஆரம்பித்தது. தமிழ்நாட்டிலும் 1969–ஆம் ஆண்டு மாணவர்கள் பங்கேற்கும் நாட்டு நலப்பணித் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. தொடக்கத்தில் 3,000 மாணவர்கள் எண்ணிக்கையுடன் ஆரம்பிக்கப்பட்ட இத்திட்டத்தில் தற்போது 1,65,000 மாணவர்கள் பங்கேற்றுள்ளனர்.

இத்திட்டத்திற்கு மைய அரசும், மாநில அரசும் முறையே 7:5 என்ற விகிதத்தில் நிதி ஒதுக்கீடு செய்கிறது. இந்த நிதி ஆண்டில் நிதி ஒதுக்கீடு ரூ.511.5 இலட்சம் ஆகும். இதில் மைய அரசின் பங்கு ரூ.298.375 இலட்சமும் மாநில அரசின் பங்கு ரூ.213.123 இலட்சமும் ஆகும்.

நாட்டு நலப்பணித் திட்டம் தொடர்ப் பணிகள், சிறப்பு முகாம்கள் ஆகிய இரு வகைகளில் செயல்படுகிறது.

அன்றாடப் பணிகளில் மருத்துவமனை சேவை, உடல் நலம் குறித்த கல்வி, சுற்றுப்புறச்சூழல், மாசுக்கட்டுப்பாட்டு விழிப்புணர்வு, சமூக பொருளாதார மதிப்பீடு, போக்குவரத்தைக் கட்டுப்படுத்துதல், குருதி தானம், முதியோர் கல்வி, மரம் நடுதல், சிறு குடும்பம் குறித்து பிரச்சாரம் செய்தல், நுகர்வோர் பாதுகாப்பு, எய்ட்ஸ் விழிப்புணர்வு முதலியவை அடங்கும். சிறப்பு முகாம்களில் இணைப்புச் சாலைகள் போடுதல், சமுதாயக் கூடங்கள் கட்டுதல், குறைந்த செலவில் வீடுகள் கட்டித்தருதல், பள்ளிக் கட்டிடங்கள் கட்டுதல், வேலி அமைத்தல், ஏரிகள் மற்றும் குளங்களில் தூர் எடுத்து ஆழப்படுத்துதல், தரிசு நிலம் சீராக்கம், வளாகத்தினைப் பசுமைப்படுத்துதல், பேருந்து நிழற்கூடங்கள் கட்டுதல் முதலியன அடங்கும்.

1988 முதல் புதுதில்லியில் குடியரசு தின அணிவகுப்பில் நாட்டு நலப்பணித்திட்டம் பங்கு பெற்று வருகிறது. இந்த நடவடிக்கைகளில் தமிழ்நாடு இந்நாட்டின் முன்னோடியாகத் திகழ்வதுடன் 1988 முதலே குடியரசு தின அணிவகுப்புகளில் கலந்து கொண்டு வருகிறது. இந்த அணிவகுப்பில் பங்குபெற நாட்டின் பல்வேறு இடங்களில் நடைபெறும் குடியரசு தின அணிவகுப்பு முகாம்கள் மூலம் தெரிவு செய்யப்படுகிறது. 1998/99–ஆம் ஆண்டில் சென்னை பச்சையப்பன் கல்லூரியில் மேற்படி முகாம் நடந்தது.

நடப்பு ஆண்டில் தமிழ்நாட்டில் இருந்து 7 மாணவர்கள், 7 மாணவியர்கள் 1 திட்ட அலுவலர் கொண்ட குழு புதுடில்லியில் 2000 ஆண்டில் நடைபெற்ற குடியரசு தின அணி வகுப்பில் பங்கேற்றது.

இந்த அணிவகுப்பில் சென்னை டாக்டர் அம்பேத்கர் அரசு கலைக் கல்லூரியினைச் சார்ந்த செல்வி.வி.சி.விமலா என்ற மாணவி இந்த தேசிய அளவிலான நாட்டு நலப்பணித் திட்டக் குழுவினை வழி நடத்தியுள்ளார். தமிழ் நாட்டில் நாட்டு நலப்பணித்திட்ட வரலாற்றிலேயே முதன்முறையாக இந்நிகழ்வு தமிழ்நாட்டிற்குப் பெருமைச் சேர்ப்பதாக அமைந்துள்ளது.

2000 ஆண்டு குடியரசு தின அணிவகுப்பில் பங்கேற்ற நாட்டு நலப்பணிக்குழுவை ஆளுநர் அவர்கள் 2.2.2000 அன்று சிறப்பித்தார். ★

# தெருவிளக்கு, குடிநீர் வசதி - பராமரிக்க தீவிர நடவடிக்கை

மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறைகளின் பல்வேறு பணிகளின் முன்னேற்றம் குறித்து ஆய்வு மேற்கொண்ட போது, உள்ளாட்சி அமைப்புகளில் உள்ள தெருவிளக்குகள் அனைத்தும் நூறு சதவீதம் தொடர்ந்து எரிவதை உறுதி செய்யும் பொருட்டு, ஒவ்வொரு காலாண்டிலும் இப்பணியினை மேற்கொள்ளும் துறைகளின் பிரதிநிதிகள், எல்லா தெருவிளக்குகளையும் பார்வையிட்டு, அனைத்து தெருவிளக்குகளும் நன்முறையில் எரிவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என அறிவுறுத்தியிருந்தார். இதே முறையில், குடிநீர் வழங்கும் ஆழ்துளைக் கிணறுகள், விசைப் பம்புகள் மற்றும் கைப்பம்புகள் தொடர்ந்து நன்முறையில் பழுதின்றி இயங்குவதற்கான ஏற்பாடுகளையும் செய்திட வேண்டும் என்றும் வலியுறுத்தியிருந்தார்.

மேலும், கடந்த டிசம்பர் திங்கள் 23 மற்றும் 24 தேதிகளில் நடைபெற்ற மாவட்ட ஆட்சித்தலைவர்களின் கூட்டத்தில், மாவட்ட ஆட்சித்தலைவர்களால் நடத்தப்படும் சிறப்பாய்வுக் கூட்ட நடவடிக்கைகளை மிகை ஆய்வு செய்து, ஆலோசனை வழங்குவதற்காக, மூத்த அரசு அலுவலர்களை ஒவ்வொரு மாவட்டத்திற்கும் அனுப்ப வேண்டும் என முதல்வர் கலைஞர் அவர்கள் முடிவெடுத்து அறிவித்திருந்தார். அதனடிப்படையில், தமிழ்நாட்டில் உள்ள 29 மாவட்டங்களுக்கும், ஒரு மாவட்டத்திற்கு ஒரு அதிகாரி என்ற முறையில், 29 மூத்த ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் பற்றாளர்களாக (Nodal Officers) நியமிக்கப்பட்டனர். இந்தப் பற்றாளர்கள், சனவரித் திங்களில் தங்களது முதல் சிறப்பாய்வினை, ஊராட்சிகள், பேரூராட்சிகள், நகராட்சிகள், மாநகராட்சிகள், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மற்றும் தமிழ்நாடு மின்வாரியம் ஆகிய துறை அலுவலர்களுடன் மேற்கொண்டு, அரசுக்குத் தனி அறிக்கையினை அனுப்பியுள்ளனர்.

முதல்வர் கலைஞர் அவர்களின் அறிவுரைகளின் படி, அரசு மேற்கொண்டுள்ள இந்த சிறப்பு நடவடிக்கைகளின் காரணமாக 95 சதவீத தெருவிளக்குகளும், 97 சதவீத கைப்பம்புகளும், 95 சதவீத விசைப்ப்ம்புகளும் நல்லமுறையில் இயங்கி வருகின்றன.

**தெருவிளக்குகள்**

ஊராட்சிகளில் 10,41,300 தெருவிளக்குகள்; பேரூராட்சிகளில் 2,79,776 தெருவிளக்குகள்; நகரார்சிகளில் 3,18,478 தெருவிளக்குகள்; மாநகராட்சிகளில் 2,01,868 தெருவிளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன. இதில், ஊராட்சிகளில் 9,71,936 தெருவிளக்குகள், பேரூராட்சிகளில் 2,74,985 தெருவிளக்குகள், நகராட்சிகளில் 3,11,173 தெருவிளக்குகள், மாநகராட்சிகளில் 1,97,867 தெருவிளக்குகள் நல்ல நிலையில் இயங்குகின்றன. ஆகவே, மொத்தம் அமைக்கப்பட்டுள்ள 18,41,422 தெருவிளக்குகளில் 17,55,961 அதாவது, 95 சதவிகித தெருவிளக்குகள் சரியாக எரிகின்றன. எரியாமல் உள்ள 75,461 தெருவிளக்குகளை எரியச் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**குடிநீர் வழங்கல்**

குடிநீர் வழங்கும் சாதனங்களைப் பொறுத்தவரை, ஊராட்சிகளில் 1,73,191 கைப்பம்புகள், பேரூராட்சிகளில் 24,506 கைப்பம்புகள், நகராட்சிகளில் 16,813 கைப்பம்புகள், மாநகராட்சிகளில் (சென்னை நீங்கலாக) 5,249 கைப்பம்புகள் உள்ளன. இதில், ஊராட்சிகளில் 1,68,598 கைப்பம்புகள், பேரூராட்சிகளில் 23,846 கைப்பம்புகள், நகராட்சிகளில் 15,989 கைப்பம்புகள், மாநகராட்சிகளில் (சென்னை நீங்கலாக) 5,136 கைப்பம்புகள் நன்முறையில் இயங்குகின்றன. ஆகவே, மொத்தம் அமைக்கப்பட்டுள்ள 2,19,759 கைப்பம்புகளில் 2,13,569 கைப்பம்புகள், அதாவது 97 சதவிகித கைப்பம்புகள் சரியாக இயங்குகின்றன. மொத்தத்தில் இயங்காமல் உள்ள 6,193 கைப்பம்புகளைச் சரி செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளன.

விசைப்பம்புகளைப் பொறுத்தவரை, ஊராட்சிகளில் 35,809 விசைப்பம்ப்புகள், பேரூராட்சிகளில் 4,770 விசைப்பம்புகள், நகராட்சிகளில் 1,511 விசைப்பம்புகள், , மாநகராட்சிகளில் (சென்னை நீங்கலாக) 1,181 விசைப் பம்புகள் உள்ளன. இதில், ஊராட்சிகளில் 34,885 விசைப்பம்புகள், பேரூராட்சிகளில் 4,680 விசைப்பம்புகள், நகராட்சிகளில் 1,484 விசைப்பம்புகள், மாநகராட்சிகளில் (சென்னை நீங்கலாக) 1,147 விசைப்பம்புகள் நன்கு இயங்குகின்றன. ஆகவே, மொத்தம் அமைக்கப்பட்டுள்ள 43,271 விசைப்பம்புகளில், 41,079 விசைப்பம்புகள், அதாவது 95 சதவிகித விசைப்பம்புகள் சரியாக இயங்குகின்றன. மொத்தத்தில் இயங்காமல் உள்ள 1,075 விசைப்பம்புகளைச் சரிசெய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன.

அரசு, தொடர்ந்து எடுத்துவரும் இத்தகைய சிறப்பு நடவடிக்கைகளினால், உள்ளாட்சி அமைப்புகளில் உள்ள தெருவிளக்குகள் நூறு சதவீதம் எரிவதற்கும், கைப்பம்புகள் மற்றும் விசைப்பம்புகள் அனைத்தையும் செம்மையாக இயங்கிடச் செய்ய முனைப்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, பொது மக்களுக்குத் தேவையான குடிநீர் வசதி தங்கு தடையின்றிக் கிடைத்திடவும் அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன. ★




# தமிழக தேசிய மாணவர் படையின் சாதனை போற்றத்தக்கது

– முதலமைச்சர் கலைஞர்

தேசிய மாணவர் படையினரின் – முதல் அமைச்சர் பேரணி அணிவகுப்பு விழா சென்னை–கலைவாணர் அரங்கில் 4–2–2000 அன்று நடைபெற்றது. இவ்விழாவில் முதல்வர் கலைஞர் அவர்கள் ஆற்றிய ஆங்கில உரையின் தமிழாக்கம் வருமாறு :

தேசிய மாணவர் படையினர் நடத்திடும் முதலமைச்சரின் முதல் பேரணியில் பங்குபெறுவது எனக்கு மிகுந்த மகிழ்ச்சியை அளிக்கிறது.

புதுடெல்லியில் நடைபெற்ற குடியரசு தின அணிவகுப்பில் தமிழக தேசிய மாணவர்படை இயக்கத்திலிருந்து பங்குகொண்டு பரிசுபெற்ற வீரர்களை நாம் அனைவரும் பாராட்டுகிறோம். குடியரசு தின அணிவகுப்பில், தமிழக என்.சி.சி. மிகச்சிறந்த சாதனைப் படைத்தமையை அறிந்து மகிழ்கிறேன்.

**ஐந்தாண்டுக்குப் பின்
பிரதமரின் பதாகை**

ஐந்தாண்டுக்குப் பின்னர், புதுடெல்லியில் குடியரசு தின அணிவகுப்பில் தமிழக அணி பாரதப் பிரதமரின் பதாகையை வென்றுள்ளது. மேலும், தமிழக தேசிய மாணவர் படையினர் பல போட்டிகளில் வென்று கோப்பையையும் கைப்பற்றியுள்ளனர். இவர்களின் இச்சாதனை கண்டு பெருமிதம் எய்துகிறேன்.

என்.சி.சி. பணிகளில் தமிழகம் மிகச் சிறப்பாக இயங்கி வருகிறது. தேசிய மாணவர்படை தொடங்கப்பட்ட 1948–ஆம் ஆண்டு முதலாகவே பிரதமரின் பதாகையைத் தமிழகம் அதிகமுறை அதாவது 11 முறை பெற்று படைத்துள்ள சாதனை மிகவும் போற்றத்தக்கதாகும்.

கடந்த நான்கு ஆண்டுகளாக மிகக் குறைந்த புள்ளிகளிலேயே இப்பதாகையை வென்றிடும் வாய்ப்பினைத் தமிழகம் இழந்து வந்துள்ளது. இந்த ஆண்டில் நாம் இப்பதாகையை மறுபடியும் கைப்பற்றியுள்ளோம். இது உங்கள் அனைவரின் அயராத உழைப்பினாலும் ஒட்டு மொத்த மன உறுதியாலும், உங்களுடைய தளராத முயற்சிகளாலும் தான் சாத்தியமாகி உள்ளது. இதற்காக எனது இதயங்கனிந்த நல்வாழ்த்துக்களை உங்களனைவருக்கும் உரித்தாக்குகிறேன்.

இவ்வெற்றியை ஈட்டுதற்கேற்ப பயிற்சிகள் அளித்து ஊக்கமும், உறுதியும் அளித்துவரும் அலுவலர்கள் அனைவரையும் நான் பாராட்டுகிறேன். இதுபோன்றே தொடர்ந்து வருமாண்டுகளிலும் எல்லா முயற்சிகளிலும் நீங்கள் தொடர்ந்து வெற்றிபெற வேண்டும் எனவும் அன்புடன் வாழ்த்துகிறேன்.

தமிழ்நாடு, பாண்டிச்சேரி, அந்தமான்– நிகோபார் ஆகிய பகுதிகளை உள்ளடக்கிய தமிழக தேசிய மாணவர் படையில் 98 ஆயிரத்து 590 வீரர்கள் உள்ளனர். அவர்களில் 92 ஆயிரத்து 940 பேர் தமிழகத்தைச் சேர்ந்தவர்கள். நாடு முழுவதும் 3.9 சதவிகித மாணவ – மாணவியர் இந்தத் தேசிய மாணவர் படையில் சேர்ந்துள்ளனர். தமிழகத்தில் மட்டும் 7 சதவிகித மாணவர்கள் இப்படையில் சேர்ந்துள்ளனர். தமிழகத்திலே உள்ள 220 கல்லூரிகளிலும், 738 பள்ளிகளிலும் தேசிய மாணவர் படைப்பிரிவுகள் அமைக்கப்பட்டுள்ளன. சமுதாயத்தின் பல்வேறு நிலைகளிலிருந்தும் இம்மாணவர்கள் எழுகின்றனர். நமது மாணவர் படையினரின் இணக்க மனப்பான்மை, ஒழுக்கம், சிறப்பாகச் செயல்பட வேண்டுமென்ற ஆர்வம் ஆகியவை இம்மாணவர்கள் அனைத்திந்திய அளவில் நடைபெறும் போட்டிகளில் எப்பொழுதும் பரிசுகளை வென்றிட துணை புரிகின்றன.

தேசிய மாணவர் படையினரின் பணிகளில் அமைப்பு ரீதியான பயிற்சி, வீரதீரச் செயல்கள் புரிந்திடும் வண்ணம் சிறந்த பயிற்சி, விளையாட்டுகள், இளைஞர்கள் பரிமாற்றத் திட்டம், சமுதாய வளர்ச்சிப் பணிகள் ஆகியவை அடங்கும்.

## ஆடவருக்கு இணையாக மகளிருக்கும் வாய்ப்புகள்

தேசிய மாணவர் படையில் மகளிரும் ஆடவருக்கு இணையாகப் பங்கேற்கும் வகையில் வாய்ப்புகள் அளிப்பது பெருமைப்படத் தக்கதாகும். என்.சி.சி. பணிகளில் அவர்கள் மிகச் சிறப்பாக ஈடுபடுகிறார்கள் என்பதை அறிந்து மிக்க மகிழ்ச்சியும் பெருமையும் அடைகிறேன். எனவே, மகளிர் முன்னேற்றத்திற்கு என்.சி.சி. மிகச்சிறந்த முறையில் பங்காற்றுகிறது.

நாட்டு முன்னேற்றத்திற்கும், ஒருமைப்பாட்டிற்கும் என்.சி.சி. ஆற்றும் அரிய பணிகளை அரசு அறிந்தே உள்ளது. தேசிய மாணவர் படை இயக்ககத்திற்குச் செய்திடும் செலவு, இந்திய மற்றும் நமது மாநிலம் ஆகியவற்றின் வளர்ச்சிக்காகச் செய்திடும் முதலீடாகவே மதிக்கப்படுகிறது.

தேசிய மாணவர் இயக்கத்தை மேம்படுத்துவது, மத்திய மாநில அரசுகள், முப்படைகள், கல்வி நிறுவனங்கள் ஆகியவற்றின் கூட்டுப்பொறுப்பாகும். தமிழக என்.சி.சி. வீரர்கள் இந்தியாவிலேயே மிகச்சிறந்த முறையில் பயிற்சி பெறுகிறார்கள் என்பதை உறுதி செய்திடும் பெரும் பொறுப்பு நம் அனைவருக்கும் உண்டு.

தேசிய மாணவர் படை வழங்கும் பயிற்சிகள் மூலம், இதன் வீரர்கள் மட்டும் பயன்பெறுவதில்லை. ஒழுக்கமும், கட்டுப்பாடும் வாய்ந்த என்.சி.சி. வீரர்கள் மூலம் கல்வி நிறுவனங்களில் அவர்களோடு பயிலும் மாணவ – மாணவியரும், ஒட்டுமொத்தமாக நல்லொழுக்கங்களின்பால் ஈர்க்கப்படுகிறார்கள். என்.சி.சி. மாணவர்கள் விரும்பத்தகாத செயல்களைப் புறக்கணிப்பதில் மற்றவர்களுக்கு எடுத்துக்காட்டாக விளங்குகின்றனர் என்பதை அறிந்து மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

வாழ்க்கைப் பாதையில் எல்லா முனைகளிலும் செயலாற்றுவதற்கு தேசிய மாணவர் படை ஒரு படிக்கட்டாகவே அமைகிறது. படைப்பிரிவுகள், அரசு நிறுவனங்கள், பல தனியார் நிறுவனங்கள் ஆகியவை வேலைவாய்ப்புகளை அளித்திடும் போது என்.சி.சி. மாணவர்களுக்கு உரிய முன்னுரிமையில் அளித்து வருகின்றன. ஒழுக்கம், தன்னலமின்மை, ஈடுபாடு ஆகியவையே என்.சி.சி. படையினரின் பண்புகளாகும். அனைத்துத் தொழில் முதலீட்டாளர்களும், தாங்கள்அளித்திடும் வேலைகளில், என்.சி.சி. பயிற்சி பெற்றவர்களுக்கு முக்கியத்துவம் அளித்திட வேண்டும் எனக்கேட்டுக் கொள்கிறேன்.

தேசிய மாணவர் படையின் கட்டுப்பாடு மிகுந்த இளைஞர்கள் அனைத்து நிறுவனங் களிலும் பரவலாக பங்கு பெறுவதன் மூலம் அவர்கள் மற்றவர்களுக்கு முன்மாதிரியாகத் திகழ்ந்திட முடியும். மாநில அரசும் மத்திய அரசும் இத்தகைய கட்டுப்பாடான பல அமைப்புகளைக் கொண்டிருக்க வேண்டியது அவசியமாகிறது.

தமிழக அரசு இந்த ஆண்டு தேசிய மாணவர்படை இயக்ககத்திற்குப் பதிமூன்று கோடியே பதினான்கு இலட்ச ரூபாய் அளித்துள்ளது. தேசிய மாணவர் படையினரின் 80 முதுநிலைப் பிரிவு வீரர்களுக்கு ஆண்டொன்றிற்கு ரூபாய் ஆயிரத்து இருநூறு வீதமும், 90 இளநிலைப் பிரிவு வீரர்களுக்கு ஆண்டுக்கு ரூபாய் அறுநூறு வீதமும் அரசு உதவித்தொகை வழங்குகிறது.

தமிழகத்தில், தேசிய மாணவர் படையினருக்குப் பொறியியல் கல்லூரிகளில் சேர இரண்டு இடமும், ஒவ்வொரு கல்லூரிகளிலும் இளநிலை பட்டப்படிப்பில் சேர ஒரு இடமும், முதுநிலைப் பட்டப்படிப்பில் சேர ஒரு இடமும், அதேபோல் பாலிடெக்னிக்குகளில் சேர ஒவ்வொன்றிலும் ஒரு இடமும் நாங்கள் ஒதுக்கீடு செய்துள்ளோம்.

மேலும் இந்த அரசு தேசிய மாணவர் படையினருக்கு ஒவ்வொரு ஆண்டும், ஊக்கத் தொகையாக இரண்டு இலட்சத்து இருபதாயிரம் ரூபாய்க்கு மேல் அளித்து வருகிறது.

இந்த மகிழ்ச்சிகரமான நிகழ்ச்சியில் சில அறிவிப்புகளை வெளியிட விரும்புகிறேன். பொறியியல் கல்லூரிகளில் தேசிய மாணவர் படையினருக்கு ஆண்டுதோறும் ஒதுக்கீடு செய்யப்பட்டு வரும் இரண்டு இடங்கள் இந்த ஆண்டு முதல் பத்து இடங்களாக உயர்த்தப்படும்.

மேலும், தேசிய மாணவர்படை இயக்கத்தில் சாதனைகள் படைத்திடும் வீரர்களுக்கு வழங்கப்பட்டு வரும் நூறு ரூபாய் பரிசுத்தொகை இனி ஆயிரம் ரூபாயாக உயர்த்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழக என்.சி.சி. நாட்டிலேயே மிகச்சிறந்தது எனும் பெருமை தொடர்ந்து நீடித்து நிலைக்கும் வகையிலும், நமது நாட்டிற்கும், மாநிலத்திற்கும் அதன் சிறந்த சேவை தொடர்ந்து கிடைக்கும் வகையிலும் என்.சி.சி. செயல்படத் தேவையான அனைத்து உதவிகளையும், தமிழக அரசு வழங்கிடும் என்பதை இப்பேரணியில் தெரிவித்துக் கொள்கிறேன். ★

# உலகக் கவி

முப்பாவை உலகக்க விதந்த தாலே
முக்கடலில் சிலையாக காட்சி தந்தார்
ஒப்பில்லா முதற்குறளில் உலகைக் கண்டு
உயர்வான தமிழ்ப்பேழை தந்து சென்றார்
கப்பலேற்ற முடியாத கருத்துக் கோவை
காலத்தால் அழியாத கலையின் சிற்பம்
போப்பெல்லாம் மொழிபெயர்ப்பு செய்து கொண்ட
பொதுமறையே உலகத்தில் உயர்ந்த நூலே!
சான்றாண்மை பண்புடைமை அன்பு மானம்
சேராமை செங்கோண்மை கல்வி கேள்வி
ஆன்றபெரும் இறைமாட்சி படையின் மாட்சி
அருளுடைமை கள்ளாமை கொல்லா நோன்பு
தோன்றிவரும் இல்வாழ்க்கை மக்கள் வாய்மை
துளங்குகின்ற நட்புகாலம் ஈகை கோபம்
ஆன்றோர்கள் தவம்புகழும் நாடு திட்பம்
ஆய்வியலும் அறிவியலும் அனைத்தும் சொன்னார்
இறவாத வரலாற்றில் எழுதப் பெற்றார்
எம்தாத்தா வள்ளுவரும் இந்த நாட்டில்
உறவுபகை அத்தனையும் ஒன்றாய் கண்டார்
உயிரனைத்தும் பிறப்பொன்றே! இறப்பு வேறே!
நறவுமொழி உலகத்தில் நடக்க விட்டார்
நல்லாட்சி கோட்ட முதல் குமரி கண்டார்
கறங்குகின்ற உலகத்தைக் காக்க வேண்டி
கடல்நடுவில் உயரத்தில் நின்றார் வாழ்க!
சாதிமத பேதமற்ற சமூகம் கண்டார்
சமுதாயம் தழைக்கின்ற வழியைச் சொன்னார்
நீதிமுறை அங்கங்கே வலிந்து சொன்னார்
நிமிராது உழைப்பவர்க்கு ஊக்கம் தந்தார்
ஓதிவைத்த கருத்துக்கள் உலகின் நோக்கம்
ஒவ்வொன்றும் ஒன்னாத வைரக் கற்கள்
மீதியின்றி அத்தனையும் சொல்லி வைத்தார்
மேலான அவர்வழியில் நடப்போம் வாரீர்!



கவிஞர்
அ. பொன்னுசாமி


# ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட ஐந்நூற்றவர் செக்கு

கரூர் மாவட்டம், கரூர்–திண்டுக்கல் பழைய நெடுஞ்சாலையில் உள்ள வெள்ளியணை நத்தமேட்டில் இச்செக்கு தமிழ்நாடு அரசு தொல்லியல் துறையால் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இச் செக்கு பற்றிய அரிய தகவல்களைத் தொல்லியல்துறை இயக்குநர் வெளியிட்டார்.

இச்செக்கின் வாய்ப்பகுதியில் கி.பி.10–ஆம் நூற்றாண்டு எழுத்தமைதியில் சுருதி வட்டமாக ஒரு கல்வெட்டும் வெட்டப்பட்டுள்ளது. 'ஸ்வஸ்திஸ்ரீ' என்ற மங்கலச் சொல்லுடன் தொடங்கி 'சோமுர் மகாதேவர்க்கு அஞ்நூற்றுவர் இடுவிச்ச செக்கு' என்று இக்கல்வெட்டுள்ளது. சோமுர் இறைவனுக்காக ஐந்நூற்றுவர் என்ற வணிகக் குழுவினர் இச்செக்கினை அமைத்துக் கொடுத்துள்ளனர்.

பெருவழிகள் சந்தித்தன என்பது இன்று கரூர் வழியாகச் செல்லும் தேசிய நெடுஞ்சாலை எண்.7 ஆகும். கொங்கப் பெருவழி என்பது மேற்குக் கடற்கரையில் கோழிக்கோட்டில் தொடங்கி பாலக்காடு, காங்கேயம், கரூர், உறையூர் வழியாகக் கீழக்கடற்கரையில் உள்ள பூம்புகாருக்குச் சென்ற பெருவழியாகும்.

இவ்வணிகர்கள் வழி நெடுகத் தங்களுக்கு வழித்துணையாக அமைந்த தெய்வங்களுக்கும், கோயில்களுக்கும் கொடைகள் நல்கியுள்ளனர். ஏரி, குளம் அமைத்தல், வழியில் உள்ள ஏரிகளுக்குத் தூம்பு அமைத்தல், குமிழி செய்தல் போன்ற பணிகளையும்



ஐந்நூற்றுவர், திசை ஆயிரத்து ஐந்நூற்றுவர், வளஞ்சியர் ஐந்நூற்றுவர், அய்யப்பொழிலார், நானாதேசிகன், பதிவெனிவிஷயத்தார், சித்திரமேழி பெரிய நாட்டார் என்ற பல பெயர்களில் பண்டைய தமிழகத்தில் வணிகக் குழுக்கள் இருந்துள்ளன. இவைப் பண்டையப் பெருவழிகளில் நெடும் பயணம் மேற்கொண்டு அங்கங்கு கிடைக்கும் பொருள்களை வாங்கியும் பிற இடங்களில் பெற்ற பொருள்களை விற்றும் நடமாடும் வணிகர் குழுக்களாக இருந்துள்ளன.

பண்டைய வணிகத்தில் கரூர் பெரும் பங்காற்றியது. சிறந்த வணிக நகரமாக கரூரில் தக்ஷிணபதம், கொங்கப் பெருவழி என்ற இரு

மேற்கொண்டுள்ளனர். இவ்வகையில் சோமுர் கோயில் இறைப்பணிகளுக்காக உதவும் வகையில் இவர்கள் அமைப்பித்த செக்குகள் இவை என்று கருத முடிகிறது. இவ்விடத்தில் கல்வெட்டில்லாமல் மேலும் இரண்டு செக்குகள் உள்ளன. பண்டையத் தமிழகத்தின் வணிகர் அமைப்பு, வணிகப் பெருவழிகள், கோயில் பொருளாதாரத்தில் அவர் தம் பங்கு ஆகியவைப் பற்றி ஆய்வு செய்ய இச்செக்குகளும் கல்வெட்டும் துணை செய்கின்றன.

வெள்ளியணை அருகில் உள்ள தாளியாம்பட்டித் திரு புவனேந்திரன் தந்த தகவலின் அடிப்படையில் கரூர் தொல்லியல்துறை அலுவலர் திரு நாக.கணேசன் செக்குள்ள இடத்தை ஆய்வு செய்து, கல்வெட்டைப் படியெடுத்து புகைப்படம் எடுத்துள்ளார். துறைச் சிறப்பு நிலை கல்வெட்டாய்வாளர் முனைவர் சு. இராசகோபால் கல்வெட்டினைப் படித்தளித்துள்ளார். ★

# வருமுன் காப்போம் திட்டம் : படகில் சென்ற மருத்துவக் குழுவினர்

தமிழக முதல்வர் கலைஞர் அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்ட அற்புதமான மக்கள் நலத்திட்டம் "வருமுன் காப்போம்" திட்டம் என்று சொன்னால் அது மிகையாகாது. இத்திட்டத்தின் கீழ் நாகப்பட்டினம் மாவட்டத்தில் ஜனவரி 2000 திங்களில் மட்டும் 12 முகாம்கள் நடத்தப்பட்டன. இம்மாவட்டத்தில் மணல்மேடு என்ற பகுதியில் முதன்முதலாக அறிமுகப்படுத்தப்பட்டு 2315 பேர்களுக்கு பரிசோதனை செய்யப்பட்டது. இதில் 295 நபர்கள் தொடர் சிகிச்சைப்பெற பரிந்துரை செய்யப்பட்டனர். இதனைத் தொடர்ந்து செம்பொன்னார்கோவில், வெள்ளப்பள்ளம், திருவாடுதுறை, கொடியம்பாளையம், கட்டுமாவடி, மேலையூர், மஞ்சக்கொல்லை, செட்டிப்புலம், மாப்படுகை, ராதாமங்கலம் மற்றும் திருவிளையாட்டங்குடி ஆகிய இடங்களில் இத்திட்டம் மக்களின் ஆதரவோடு செயல்படுத்தப்பட்டு ஜனவரி திங்களில் மட்டும் 19,224 பேர் பயனடைந்துள்ளனர். இதில் 1789 பேர் தொடர்ச் சிகிச்சைக்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளனர்.

அனைத்து முகாம்கள் குறித்தும் எழுத இடம் போதாது என்பதால் வித்தியாசமான முகாமான ஒரு தீவில் செயல்படுத்தப்பட்ட விதத்தையும், அதில் பத்திரிக்கையாளர்கள் பொது மக்களைப் பேட்டி கண்டு பொதுமக்கள் கருத்தை நாளிதழில் அளித்ததையும் வாசகராகிய உங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**கொடியம்பாளையம் தீவு**

நாகை மாவட்டம் கொள்ளிடம் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள கொடியம்பாளையம் என்ற ஊராட்சி 3 பக்கம் ஆறுகளாலும் ஒரு பக்கம் கடலாலும் சூழப்பட்ட ஒரு தீவுப்பகுதி ஆகும். இங்கு செல்ல வேண்டுமானால் படகில் தான் பயணம் செய்து செல்ல முடியும். இந்த தீவில் 2000 மக்கள் வசிக்கின்றனர். இந்த தீவில் "வருமுன் காப்போம்" திட்டத்தைச் செயல்படுத்தத் திட்டமிடப்பட்டது. அரசு மருத்துவமனை கொடியம்பாளையத்தில் இருந்து 26 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள சீர்காழியில் உள்ளது.

**மருத்துவ முகாம்**

இதே போல் கடலூர் மாவட்டம் சிதம்பரத்தில் அரசு மருத்துவமனை உள்ளது. இந்த மருத்துவமனைக்கு தான் இந்தப் பகுதி மக்கள் மருத்துவ வசதி பெற செல்ல வேண்டும். இந்தத் தீவில் "வருமுன் காப்போம்" திட்ட மருத்துவ முகாம் தொடங்கி வைக்கப்பட்டது.

**படகில் பயணம்**

முகாமினைத் தொடங்கி வைக்க மாவட்ட ஆட்சித்தலைவர் சிவ்தாஸ் மீனா, மருத்துவ





நிபுணர்கள், அரசு அலுவலர்கள், மருந்துப் பொருட்கள், மருத்துவ சாதனங்களுடன் படகில் பயணம் செய்தனர். அங்குள்ள புயல் பாதுகாப்பு மையத்தில் "வருமுன் காப்போம்" திட்டம் தொடங்கி வைக்கப்பட்டது. இதில் 725 பேர் சிகிச்சைப் பெற்று பயன் அடைந்தனர். தோல் நோய், தொழு நோய், மகப்பேறு மருத்துவம், பல் சிகிச்சை, சித்த மருத்துவம் என மருத்துவர் குழு சிகிச்சை அளித்தது.

புதுப்பட்டிணம் மெயின் ரோட்டில் வசிக்கும் மணிமேகலை தனது 15 வயது மகளுடன் சிகிச்சைக்காக வந்திருந்தார். அவரைப் பரிசோதித்த டாக்டர்கள் தொடர் சிகிச்சைக்காக நல்லூர் சுகாதார மையத்துக்குப் பரிந்துரைத்தனர். கடந்த 1 வருடமாக இதய வால்வு அடைப்பினால் புதுவையில் உள்ள ஜிப்பர் மருத்துவமனைக்குச் சென்று சிகிச்சைப் பெற்று வரும் பக்கிரிசாமி என்பவர் இந்த "வருமுன் காப்போம்" திட்டத்தால் பயன் அடைந்துள்ளதாகத் தெரிவித்தார்.

**தீவைக் கடந்து**

நாகை மாவட்டத்தில் கடைக்கோடியில் உள்ள இந்தத் தீவில் போதுமான வசதிகள் இல்லாமல் பொதுமக்கள் சிரமப்படுகின்றனர். தாய்மார்கள் பிரசவத்திற்குக் கூட நீர்ப் பகுதிகளைக் கடந்து தான் செல்ல வேண்டும். பரங்கிப்பேட்டை வழியாகச் சிதம்பரத்துக்கோ, சீர்காழிக்கோ சென்று சிரமப்பட வேண்டியுள்ளது. அரசும் மாவட்ட நிர்வாகமும் நல திட்டங்களில் இந்த ஊராட்சிக்கு முன்னுரிமை வழங்க வேண்டும் என ஊர்த் தலைவர் கெங்கமுத்து தெரிவித்தார்.

**பாலம் வசதி**

கட்சி பேதமில்லாமல் சந்தத் துறை ஆற்றில் ஒரு பாலம் கட்டித்தர வேண்டும் எனத் தெரிவித்தனர். கொடியம்பாளையத்தினைச் சேர்ந்த கொல்லிமலை என்பவர் உப்பு நீர் சூழ்ந்த பகுதியானலும் தங்கள் ஊர் குடிநீர் சுத்தமாக உவர்ப்பு இல்லாமல் இருக்கிறது. போக்குவரத்து வசதி செய்துதர வேண்டும், ஒரு மருத்துவரும், ஆசிரியரும் நிரந்தரமாக தங்க வேண்டும் என கூறினார்.

**மாவட்ட ஆட்சித்தலைவர் பார்வை**

இந்த ஊராட்சியில் அய்யன் திருவள்ளுவர் படிப்பகம், 'வருமுன் காப்போம்' முகாம் கண்காட்சியை மாவட்ட ஆட்சித்தலைவர் நேரில் பார்வையிட்டார். சிகிச்சை பெற்ற பொதுமக்களிடம் பதிவு அட்டையை வாங்கிப் பார்த்தார்.

'வருமுன் காப்போம்' திட்டத்திற்காக ஒரு முகாமில் ஏறத்தாழ 500 பேர் பயனடைவார்கள் என்ற அரசின் இலக்கை மிஞ்சி மக்கள் பயனடைந்துள்ளனர். அரசின் செயல்பாடுகளை மக்கள் எந்த அளவிற்கு பயன்படுத்தி மகிழ்கிறார்கள் என்பதற்கு இதுவே சான்றாக கருதலாம். பத்திரிக்கைகளும் இத்திட்டத்தை பாராட்டியுள்ளன என்பது கண்கூடு. ★

ஆசிரியரும் வெளியிடுபவரும் : க.முத்துசாமி, இ.ஆ.ப., இயக்குநர், செய்தி–மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு.
சென்னை – தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம், ஓமந்தூரார் அரசினர் தோட்டம், அண்ணா சாலை, சென்னை–600 002.
தொலைபேசி : 5368926/5368927/5364906

உங்களின் நீண்டநாள்
கனவை நனவாக்கும்
புதிய திட்டம்.

கோ-ஆப்டெக்ஸின்

# பட்டுப்புடவை சேமிப்புத் திட்டம்.



உங்கள் மனங்கவர்ந்த பட்டுப்புடவை ஒன்றை வாங்கவேண்டும் என்று நீண்டநாட்களாக நினைத்திருப்பீர்கள். ஆனால் அதன் விலையை நினைத்து வாங்காமல் இருந்திருப்பீர்கள். அப்படிப்பட்ட உங்களின் ஆசையை நிறைவேற்றவே, கோ-ஆப்டெக்ஸ் அறிமுகப்படுத்துகிறது, "**பட்டுப்புடவை சேமிப்புத் திட்டம்**".

மாதம் ஒரு குறிப்பிட்ட தொகையை முதல் 9 மாதங்களுக்குச் செலுத்தினால் 10-வது தவணையை கோ-ஆப்டெக்ஸ் ஏற்று மொத்தத் தொகையின் மதிப்பில், அரசு தள்ளுபடியுடன் பட்டுப்புடவையை பெற்றுக்கொள்ளலாம்.

குறைந்த செலவில் தங்களின் நீண்டநாள் கனவு நனவாகும் ஓர் அரிய வாய்ப்பு!

**தவறவிடாதீர் இந்த அரியவாய்ப்பை !**

| வ.எண் | மாதச் சந்தா ரூ. | அங்கத்தினர்கள் 9 மாதங்களில் செலுத்தும் மொத்தத் தொகை ரூ. | கோ-ஆப்டெக்ஸ் வழங்கும் 10-வது மாத சந்தா ரூ. | கூடுதல் தொகை (3+4) ரூ. | அரசு தள்ளுபடி * ரூ. | அங்கத்தினர்களுக்கு வழங்கப்படும் புடவையின் மதிப்பு ரூ. |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 1. | 300 | 2,700 | 300 | 3,000 | 750 | 3,750 |
| 2. | 400 | 3,600 | 400 | 4,000 | 1,000 | 5,000 |
| 3. | 500 | 4,500 | 500 | 5,000 | 1,250 | 6,250 |
| 4. | 600 | 5,400 | 600 | 6,000 | 1,500 | 7,500 |
| 5. | 700 | 6,300 | 700 | 7,000 | 1,750 | 8,750 |
| 6. | 1,000 | 9,000 | 1,000 | 10,000 | 2,500 | 12,500 |

* அரசு தள்ளுபடியானது தற்பொழுது நடைமுறையில் உள்ள 20%க்கு ஏற்றவாறு கணக்கிடப்பட்டுள்ளது. திட்டத்தின் முதிர்வு காலத்தில் அரசால் வழங்கப்படும் தள்ளுபடி சதவீதம் கணக்கிட்டு வழங்கப்படும்.

இந்த வசதி தில்லையாடி வள்ளியம்மை பட்டு மாளிகை, பட்டாபிளை, குறளகம், வானவில் - சென்னை, கோ-ஆப்டெக்ஸ் மகாராணி - கோயம்புத்தூர், கோ-ஆப்டெக்ஸ் அங்கயற்கண்ணி - மதுரை, கோ-ஆப்டெக்ஸ் பவளம் - ஈரோடு, கோ-ஆப்டெக்ஸ் அமுதசுரபி - திருச்சி, கோ-ஆப்டெக்ஸ் பட்டு மாளிகை - தஞ்சாவூர், தங்கம் பட்டு மாளிகை - சேலம் மற்றும் இதர பெருவிற்பனை நிலையங்களில் மட்டுமே கிடைக்கும்.

**இன்றே இத்திட்டத்தில் சேர்ந்து பயனடையுங்கள்.**

**கோ-ஆப்டெக்ஸ்**
தமிழ்நாடு கைத்தறி

*பாரம்பரியத்தின் பெருமை. காலத்திற்கேற்ற ரசனை.*

தமிழரசு
பதிவு எண். M.8676
Licence No. TN/MS(C)/PP-23

